இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 153 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – மார்கழி 27 – வெள்ளிக்கிழமை 12 ஜனவரி 2024 – வெளியூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 153 : Thiruvalluvar Year - 2054 - Margazhi 27 - Friday 12 January 2024 - Dak 12 Pages ₹ 5.00


## சென்னையில் – மாபெரும் அயலகத் தமிழர் தின இரண்டு நாள் விழா!

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் - இன்று விருதுகள் வழங்கி விழாப் பேருரை !

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்! 58 நாடுகளிலிருந்து தமிழ் வம்சாவளியினர் பங்கேற்பு!

சென்னை, ஜன. 12 -

**தமிழ்நாடு அரசின் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை மூன்றாம் ஆண்டாக 'தமிழ் வெல்லும்' என்னும் கருப்பொருளை மையமாகக் கொண்டு மாபெரும் அயலகத் தமிழர் தின விழாவை சென்னையில் இரு நாட்கள் (ஜனவரி - 11, 12) நடத்துகிறது.**

நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் நேற்று நடைபெற்ற இந்த விழாவில் இலங்கை, மலேசியா, ஆஸ்திரேலியா, சிங்கப்பூர், துபாய், இங்கிலாந்து, அமெரிக்கா உள்ளிட்ட 58 நாடுகளிலிருந்து தமிழ் வம்சாவளியினர், அமைச்சர் பெருமக்கள், கல்வியாளர்கள், கவிஞர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

அயல்நாடுகளில் வாழும் 1400க்கும் மேற்பட்டோர் இரண்டு நாள் நடைபெறும் இம்மாநாட்டில் பங்கேற்பதற்குப் பதிவுகள் செய்தனர். இதில், 218 சர்வதேச தமிழ் சங்கங்கள், 48 பிற மாநில தமிழ் சங்கங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த அயலகத் தமிழர்கள் பங்கேற்றனர்.

**கண்காட்சி அரங்குகள் – புத்தக வெளியீடு!**

முதல் நாளான நேற்று (ஜனவரி 11), இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விழாவைத் தொடங்கி வைத்துச் சிறப்புரை ஆற்றினார். அத்துடன் இங்கு அமைக்கப்பட்டுள்ள நாற்பதுக்கும் மேற்பட்ட அயலகத் தமிழர் கண்காட்சி அரங்குகளையும் திறந்து வைத்தார். மேலும், கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டுச் சிறப்பு நேர்வாக அயலகத் தமிழர்களின் புத்தக வெளியீடு நிகழ்ச்சியும் நடைபெற்றது.

**கலந்துரையாடல்கள் – கவியரங்கம்!**

இந்த விழாவில் சிறப்பு நிகழ்ச்சிகளாக நான்கு கலந்துரையாடல்களும் ஒரு கவியரங்கமும் நடைபெற்றன. முதல் அமர்வாக நிதி, மனிதவள மேலாண்மை மற்றும் தொல்லியல்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமையில் தமிழின் தொன்மை – தொடர்ச்சி குறித்து துறை சார் வல்லுநர்கள் தங்கள் கருத்துகளைப் பகிர்ந்தனர்.

அதைத் தொடர்ந்து, கவிப்பேரரசு வைரமுத்து தலைமையில், சிந்து சமவெளி முதல் செயற்கை நுண்ணறிவு வரை – 'தொலைநோக்குச் சிந்தனையும் செயலும்' என்ற தலைப்பில் கவியரங்கம் நடைபெற்றது.

பின்பு, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி தலைமையில் அயலகத் தமிழர்களுக்காக தமிழ்நாடு அரசு முன்னெடுத்துச் செயல்படுத்தும் திட்டங்களான அயலகத் தமிழர்களுக்கு அளிக்கப்படும் அடையாள அட்டை, காப்பீடு வசதி, திருமண உதவித் திட்டம் போன்ற நலத் திட்டங்கள் குறித்த விவரங்களும், சிறப்புக் கலந்துரையாடலும் நடைபெற்றது.

அடுத்தடுத்த நிகழ்வுகளாக தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் தலைமையில் 'ஒளிரும் எதிர்காலம் – வாய்ப்புகளும் சவால்களும்' என்ற தலைப்பிலும், தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா தலைமையில் 'வணிகத்தில் தமிழர்கள் – வாய்ப்பும் வளர்ச்சியும்' என்ற தலைப்பிலும் கலந்துரையாடல்கள் நடைபெற்றது.

**'எனது கிராமம்' எனும் முன்னோடித் திட்டம்!**

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்



கள் இரண்டாம் நாளான இன்று (ஜனவரி 12ம் தேதி) விழாப்பேருரை நிகழ்த்துவதுடன் 'எனது கிராமம்' என்னும் முன்னோடித் திட்டத்தையும் தொடங்கி வைக்கிறார். இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் தாங்கள் பிறந்த கிராமத்தை மேம்படுத்த விரும்பும் அயலகத் தமிழர்கள் அதற்குரிய நிதியை அளித்து இத்திட்டத்தின் வாயிலாகச் செயல்படுத்த வகை செய்யப்பட்டுள்ளது. நிகழ்ச்சியில் சிங்கப்பூர் உள்துறை மற்றும் சட்டத்துறை அமைச்சர் கா.சண்முகம் தலைமை விருந்தினராகப் பங்கேற்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**அயலகத் தமிழர்களுக்கு விருதுகள்!**

விழாவின் முக்கிய நிகழ்வாக 'வேர்களைத் தேடி' திட்டத்தின் கீழ் ஆஸ்திரேலியா, கனடா, ஃபிஜி, இலங்கை உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த 57 அயலகத் தமிழ் மாணவர்கள் தாங்கள் பண்பாட்டுச் சுற்றுலா சென்ற அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

முதலமைச்சர் அவர்கள் தமிழ் இலக்கியம், கல்வி, சமூக மேம்பாடு, மகளிர் நலன், வணிகம், தொழில்நுட்பம், விளையாட்டு, மருத்துவம் ஆகிய 8 பிரிவுகளில் அயலகத் தமிழர்களுக்கு விருதுகள் வழங்குகிறார்கள்.

முதல் நாளின் தொடர்ச்சியாக இரண்டு கலந்துரையாடல்கள் நடைபெறும். ஐந்தாவதாக, நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா 'தமிழ் மொழி வளர்ச்சியில் அயலகத் தமிழர்களின் பங்களிப்பு' குறித்த அமர்வின் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்கிறார்.

அயலகத்தில் தமிழ்க்கல்வி கற்றல், கற்பித்தல் குறித்த விவாத அமர்வு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் நடைபெறுகிறது.

தமிழர்களின் பண்பாடு மற்றும் பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் விதமாக நாட்டுப்புற இயல், இசை, நடனம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகளுடன் குறிப்பாக தமிழ்நாடு திட்டக்குழு உறுப்பினர் நர்த்தகி நடராஜ் அவர்களின் நடன நிகழ்ச்சியும் அரங்கேற்றப்பட்டது.

தமிழர் மரபு மற்றும் பண்பாடுகளை விளக்கும் வகையில் தமிழர் நலன், தமிழர் கலை பண்பாடு, வணிகம், தமிழின் தொன்மை, தொடர்ச்சி, சர்வதேசத் தமிழ்ச் சங்கம் என்னும் கருப்பொருள்கள் வாரியாகக் கண்காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழர் கலை பண்பாடு மற்றும் வணிகத்தை விளக்கும் அரங்குகளும், தமிழின் தொன்மை மற்றும் தொடர்ச்சி குறித்து தமிழ்நாடு பாடநூல் கழகம், தமிழ் வளர்ச்சித் துறை, தமிழ் தொல்லியல் துறை, தமிழ் இணையக் கழகம், இலங்கை தமிழ்க் கலை கண்காட்சி, அரங்குகளும், சர்வதேசத் தமிழ்ச் சங்கங்கள் கண்டங்கள் வாரியான அரங்குகளும் அமைக்கப்பட்டுள்ளன.

**காட்சி அரங்குகள்!**

இவற்றுடன், முதலமைச்சர் அவர்களின் கனவுத்திட்டமான "நான் முதல்வன் திட்டம் மற்றும் சிப்காட், வழிகாட்டி (கைடன்ஸ்), டிட்கோ, சிட்கோ உள்ளிட்ட துறைகளின் காட்சி அரங்குகளும் இடம்பெற்றுள்ளன. சுற்றுலா வளர்ச்சித் துறை மற்றும் பூம்புகார், தமிழ் வளர்ச்சித் துறை, கோ ஆப்டெக்ஸ், அயலக நலத்துறை ஆகிய துறைகளின் செயல்பாடுகளை விளக்கும் காட்சி அரங்குகளும் இடம்பெற்றுள்ளன.

வெளிநாடு வாழ் தமிழர்கள் இங்கு முதலீடுகள் செய்வதற்கான வசதி வாய்ப்புகளை குறித்து விளக்குவதற்காக ஸ்டார்ட் அப், டிஎன் ஃபேம் உள்ளிட்ட கண்காட்சி அரங்குகளும் அமைக்கப்பட்டுள்ளன என்பது மிகவும் குறிப்பிடத்தக்கது.

இக்கண்காட்சி அரங்குகளைக் காண்பதன் மூலம் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அயலகத் தமிழர் நலன் கருதி ஆற்றி வரும் அரும்பணிகளையும் அயலகத் தமிழர் தாய்த் தமிழ் நாட்டின் மீது கொண்டுள்ள ஈடுபாடுகளையும் பொதுமக்கள் அறிந்து மகிழும் வாய்ப்புகள் ஏற்படும்.

இந்த விழாவிற்கு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.மஸ்தான் முன்னிலை வகித்தார். அயலகத் தமிழர் நல வாரியத்தின் தலைவர் கார்த்திகேய சிவசேனாதிபதி வரவேற்புரை ஆற்றினார்.

---

## பொங்கல் திருநாளை முன்னிட்டு

# சென்னையில் இருந்து இன்று முதல் சிறப்புப் பேருந்துகள் இயக்கம் !

சென்னை, ஜன. 12-

பொங்கல் திருநாளை முன்னிட்டு சென்னையில் இருந்து இன்று முதல் சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.

பொங்கல் திருநாளை முன்னிட்டு, சென்னையில் இருந்து 6 இடங்களில் இன்று முதல் 3 நாட்களுக்கு சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.

மாதவரம், தாம்பரம் சானடோரியம் மெப்ஸ், பூவிருந்தவல்லி, கோயம்பேடு, கிளாம்பாக்கத்தில் இருந்து பேருந்துகள் இயக்கப்பட இருக்கின்றன.

13 ஆயிரத்து 184 சிறப்பு பேருந்துகள் உள்பட மொத்தம் 19 ஆயிரத்து 484 பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.

சென்னையில் இருந்து வெளியூர்களுக்கு 4 ஆயிரத்து 706 சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.

பொதுமக்களின் வசதிக்காக, கோயம்பேடு பேருந்து நிலையத்திலிருந்து இதர பேருந்து நிலையங்களுக்கும் செல்ல ஏதுவாக மாநகர போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் இணைப்புப் பேருந்துகள் 24 மணி நேரமும் இயக்கப்பட உள்ளன என தமிழ்நாடு போக்குவரத்துத் துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## துணைவேந்தர் ஜெகநாதன் மீதான முறைகேடு !

# பெரியார் பல்கலையில் காவல்துறை மீண்டும் சோதனை !

சேலம், ஜன. 12-

துணைவேந்தர் ஜெகநாதன் மீதான முறைகேடு விவகாரத்தில் பெரியார் பல்கலைக்கழகத்தில் காவல் துறையினர் மீண்டும் சோதனை நடத்தினர்.

சேலம் பெரியார் பல்கலைக்கழக துணைவேந்தர் ஜெகநாதன், பல்கலைக்கழக நிர்வாகத்தில் பல்வேறு முறைகேடுகள் செய்ததாக குற்றச்சாட்டு எழுந்தது. குறிப்பாக, போலி ஆவணங்கள் தயாரித்து தனியார் நிறுவனங்களிடம் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்ததாக புகார் எழுந்தது.

இதுகுறித்து பல்கலைக்கழகத்தின் சட்ட ஆலோசகர் இளங்கோவன் அளித்த புகாரின் பேரில் வழக்குப்பதிவு செய்த காவல்துறையினர், ஜெகநாதனை கைது செய்தனர். ஆனால், தற்போது அவர் ஜாமீனில் உள்ளார்.

இந்நிலையில், வழக்கு தொடர்பாக பெரியார் பல்கலைக் கழகத்தில் காவல்துறையினர் சோதனை நடத்தி முக்கிய ஆவணங்களை கைப்பற்றினர்.

இந்நிலையில் பெரியார் பல்கலைக்கழகத்தில் காவல்துறையினர் நேற்று மீண்டும் சோதனை நடத்தினர். பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள 6 இடங்களில் 30க்கும் மேற்பட்ட காவல்துறையினர் சோதனையில் ஈடுபட்டனர். பெரியார் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற முறைகேடு வழக்கு தொடர்பாக ஏற்கனவே 7 இடங்களில் சோதனை நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

---

## ஊழல் - முறைகேடு புகார்களுக்குள்ளான பல்கலை துணைவேந்தர் ஜெகநாதனைச் சந்திக்க

# ஆர்.என்.ரவியின் சேலம் வருகையைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் !

## மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பினர் கருப்புக் கொடியேந்தி கண்டன முழக்கம்!

சேலம், ஜன.12-

ஆளுநர் ஆர்.என்.ரவியின் சேலம் வருகையைக் கண்டித்து தமிழ்நாடு மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு சார்பில் கருப்புக்கொடி ஏந்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சேலம் பல்கலைக்கழக துணைவேந்தர் ஜெகநாதன் மீது பல்வேறு முறைகேடு புகார்கள் எழுந்துள்ளன. இது தொடர்பாக கைது செய்யப்பட்ட இவர், தற்போது நிபந்தனை ஜாமீனில் உள்ளார். இந்நிலையில், பெரியார் பல்கலைக்கழக கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பங்கேற்க வந்த ஆளுநர் ஆர்.என்.ரவியை துணைவேந்தர் ஜெகநாதன் வரவேற்றார். இதனால் பல்வேறு சந்தேகங்கள் எழுந்துள்ளன.

துணைவேந்தர் மீது பல்வேறு ஊழல் மற்றும் முறைகேடு குற்றச்சாட்டு இருக்கும் நிலையில் அவரை ஆளுநர் சந்தித்தது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. சாட்சியங்களைக் கலைக்கவும், முறைகேடு புகாரில் சிக்கியுள்ள துணைவேந்தரைக் காப்பாற்றவும் ஆளுநர் முயற்சிப்பதாக கூறப்படுகிறது. நிபந்தனை ஜாமீனில் உள்ள துணைவேந்தரை ஆளுநர் சந்திக்க வேண்டிய கட்டாயம் என்ன என்றும், அவரை துணைவேந்தர் பதவியில் இருந்து நீக்காதது ஏன் என்றும் பல்வேறு தரப்பினரும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

ஆளுநர் ஆர்.என்.ரவியின் சேலம் வருகையைக் கண்டித்து தமிழ்நாடு மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு சார்பில் கருப்புக்கொடி ஏந்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அப்போது, கண்டன முழக்கங்களும் எழுப்பப்பட்டன.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தி.மு.க. மாணவர் அணியினர், திராவிடர் கழக மாணவர் அமைப்பினர், அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம், இந்திய மாணவர் சங்கம், விடுதலைச் சிறுத்தைகளின் மாணவர் அமைப்பு, காங்கிரஸ் மாணவர் இயக்கம் உள்ளிட்ட அமைப்புகளைச் சேர்ந்த ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

பெரியார் பல்கலைக் கழக வரலாற்றில் இது போன்று ஆளுநர் வருகையின் பொழுது ஒட்டு மொத்த மாணவர் அமைப்பினரும் போராட்டத்தில் ஈடுபடுவது இதுவே முதல் முறையாகும்.

இதனிடையே, போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களை காவல்துறையினர் கைது செய்தனர்.

---

# ராமர் கோயில் திறப்பு விழா புறக்கணிப்பு !

## காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் அறிவிப்பு!

புதுடெல்லி, ஜன.12–

ராமர் கோயில் திறப்பு விழாவை புறக்கணிப்பதாக காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் அடுத்தடுத்து அறிவித்துள்ளன.

உத்தரப்பிரதேச மாநிலம் அயோத்தியில் வரும் 22ம் தேதி நடக்கும் ராமர் கோயில் திறப்பு விழா, ஆன்மிக விழா அல்ல என்றும் பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ். ஏற்பாடு செய்துள்ள அரசியல் விழா என்று காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

கட்டுமானப் பணி முழுமையாக முடியாத நிலையில், ஆர்.எஸ்.எஸ். மற்றும் பா.ஜ.க. தலைவர்கள், தேர்தல் ஆதாயத்துக்காக அவசரமாக ராமர் கோயில் திறப்பு விழாவை நடத்துவதாக காங்கிரஸ் கூறியுள்ளது.

ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. நிகழ்ச்சி என தெளிவாக தெரிவதால், மல்லிகார்ஜுன கார்கே, சோனியா காந்தி, ஆதிர் ரஞ்சன் சவுத்ரி ஆகியோர் பங்கேற்க மாட்டார்கள் என்று காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

மார்க்சிஸ்ட் கட்சியும் திறப்பு விழாவை புறக்கணித்துள்ளது.

ராமர் கோயில் திறப்பு விழா அரசியல் நாடகம் என மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி விமர்சித்துள்ளார்.

இதேபோல், விஷ்வ இந்து பரிஷத் அமைப்பின் செயல் தலைவர் அலோக் குமார் விடுத்த அழைப்பை சமாஜ்வாதி தலைவரும், உத்தரப்பிரதேச முன்னாள் முதலமைச்சருமான அகிலேஷ் யாதவ் நிராகரித்துள்ளார். அழைப்பிதழே வரவில்லை என ஆம் ஆத்மி மற்றும் தேசியவாத காங்கிரஸ் கட்சிகள் தெரிவித்துள்ளன. ராமர் பா.ஜ.க.வுக்கு மட்டும் சொந்தம் இல்லை என உத்தவ் தாக்கரேவின் சிவசேனா விமர்சித்துள்ளது.

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 12-01-2024

# பழனிசாமியின் ஓரங்க நாடகம்

தனது நாற்காலியைக் காப்பாற்றிக் கொள்ள சிறுபான்மைச் சமூகத்துக்குத் தொடர்ந்து துரோகம் இழைத்து பா.ஜ.க.வின் பாதம் தாங்கியாகச் செயல்பட்ட பழனிசாமி, இப்போது சிறுபான்மையினரின் காவலராகக் காட்ட முயற்சித்து தனது துரோக நாடகத்தின் அடுத்த அத்தியாயத்தை நடத்திக் காட்டி வருகிறார்.

“அ.தி.மு.க. சிறுபான்மையினரை அரண் போல காத்து வருகிறது. அ.தி.மு.க. ஆட்சியில் சிறுபான்மையினருக்கு எதிரான நடவடிக்கைகள் இரும்புக் கரம் கொண்டு அடக்கப்பட்டன. இசுலாமியர்களுக்காக நிறைய திட்டங்களைத் தீட்டி இருக்கிறோம். நாட்டு மக்களுக்காக சூழ்நிலை கருதி பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்தோம். இனி பா.ஜ.க.வுடன் அ.தி.மு.க. கூட்டணி வைக்காது. கூட்டணி வேறு, கொள்கை வேறு என்பதில் உறுதியாக இருக்கிறோம். கூட்டணியில் இருந்து வெளியே வந்த போதிலும் முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள், அ.தி.மு.க.வையும் பா.ஜ.க.வையும் தொடர்புபடுத்திப் பேசி வருகிறார். எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலிலும், சட்டமன்றத் தேர்தலிலும் பா.ஜ.க.வுடன் கூட்டணி இல்லை என்று திட்டவட்டமாக அறிவிக்கிறேன். சிறுபான்மை மக்கள் அ.தி.மு.க.வுக்கு ஆதரவு தர வேண்டும்” இதுதான் எஸ்.டி.பி.ஐ. கட்சியின் மாநாட்டில் பழனிசாமி பேசியது ஆகும்.

இனி வருங்காலத்தில் பா.ஜ.க.வுடன் கூட்டணி இல்லை என்று சொல்லிக் கொள்ளும் பழனிசாமி, அந்த மாநாட்டில் பா.ஜ.க.வை விமர்சித்து ஏதாவது பேசினாரா என்றால் இல்லை. சிறுபான்மையினர் நடத்தும் மாநாட்டில் கலந்து கொண்ட பழனிசாமி, சிறுபான்மை இனத்துக்கு பா.ஜ.க. செய்த துரோகங்களைப் பட்டியல் போட்டாரா என்றால் இல்லை. மொத்தமும் தி.மு.க.வையும் முதலமைச்சரையும், கழக ஆட்சியையும்தான் விமர்சித்துப் பேசி விட்டு, ‘பா.ஜ.க.வுடன் கூட்டணி இல்லை’ என்பதை மட்டும் சொல்லி சிறுபான்மை இனத்தை ஏமாற்றப் பார்த்திருக்கிறார்.

**பா.ஜ.க.வுடன் கூட்டணி இல்லை என்று சொல்வது பழனிசாமியின் தற்காலிக நாடகங்களில் ஒன்று. சிறுபான்மையின வாக்குகளை உடைப்பதற்காக பா.ஜ.க.வால் உருவாக்கப்பட்ட சதிச் செயலின் பிரதிநிதிதான் பழனிசாமி என்பதை அ.தி.மு.க.வினரே அறிவார்கள். உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் பா.ஜ.க.வுடன் கூட்டணி இல்லை என்ற முடிவை எடுத்திருந்தால் அவர் பா.ஜ.க.வை விமர்சித்திருக்க வேண்டும். பா.ஜ.க.வின் தொங்கு சதையான பழனிசாமி அந்தக் காரியத்தை எப்படிச் செய்வார்?**

**சூழ்நிலை கருதி பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்தாராம்? என்ன சூழ்நிலை? மக்களுக்காக கூட்டணி வைத்தாரா? தனது நாற்காலியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக பா.ஜ.க.வின் பாதம் தாங்கினார். பா.ஜ.க. செய்த செயல்கள் அனைத்தையும் கைகட்டி வரவேற்றார். குடியுரிமை திருத்தச் சட்டத்தை ஆதரித்ததை விட அவர் சிறுபான்மையினருக்கு இழைத்த பெரிய துரோகம் வேண்டுமா?**

மாநிலங்களவையில் குடியுரிமைச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தவர்கள் : –

அ.தி.மு.க. எம்.பி.க்கள்:

1. SR பாலசுப்பிரமணியன்
2. N சந்திரசேகரன்
3. A முகமது ஜான்
4. AK முத்துக்கருப்பன்
5. A நவநீதகிருஷ்ணன்
6. R சசிகலா புஷ்பா
7. AK செல்வராஜ்
8. R. வைத்திலிங்கம்
9. A. விஜயகுமார்
10. விஜிலா சத்யநாத்

பா.ம.க. எம்.பி.:

11. அன்புமணி ராமதாஸ்

– இவர்களால்தான் சிறுபான்மையினருக்கு எதிரான குடியுரிமைச் சட்டம் மாநிலங்கள் அவையில் நிறைவேறியது. அதாவது ஆதரித்தவர்கள் 125 பேர். எதிர்த்து வாக்களித்தவர்கள் 105 பேர். அன்புமணி மற்றும் அந்த 10 அ.தி.மு.க. எம்.பி.க்களின் ஓட்டுதான் குடியுரிமைச் சட்டம் நிறைவேறக் காரணம்.

அந்த 11 பேரும் எதிர்த்து வாக்களித்திருந்தால்

ஆதரவு 125–11=114 ஆக குறைந்திருக்கும்.

எதிர்ப்பு 105+11=116 என்று உயர்ந்திருக்கும்.

எதிர்த்தவர்கள் 116 பேர் என்றும்

ஆதரித்தவர்கள் 114 பேர் என்றும் வந்திருக்கும். குடியுரிமைச் சட்டம் தோற்கடிக்கப்பட்டிருக்கும்.

116 க்கும் 114 என்ற கணக்கில் CAA சட்டம் தோற்கடிக்கப்பட்டிருக்கும். இந்தப் பித்தலாட்டத்தைச் செய்த பழனிசாமி தான் இன்று சிறுபான்மையர்க்கு ஆதரவாக நாடகம் ஆடுகிறார்.

குடியுரிமைச் சட்டமானது இசுலாமியர் உள்ளிட்ட சிறுபான்மையினரையும், ஈழத்தமிழர்களையும் மட்டுமல்ல; இங்குள்ள தமிழர்களுக்கும் அச்சுறுத்தல் ஏற்படுத்தப்போகும் சட்டம் என்பதால் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் தி.மு.க. சார்பில் கடுமையாக எதிர்க்கப்பட்டது. மாபெரும் போராட்டங்கள் நடத்தப்பட்டன. மக்களிடம் கையெழுத்து இயக்கம் நடத்தப்பட்டது. கோடிக்கணக்கான கையெழுத்துக்களுடன் குடியரசுத் தலைவரையே சந்தித்து வழங்கப்பட்டது. அப்போது பழனிசாமி என்ன சொன்னார்? ‘யாருமே பாதிக்கப்படவில்லையே’ என்று கேட்டார். சட்டமன்றத்தில் 2021 பிப்ரவரி 20 ஆம் தேதி, குடியுரிமைச் சட்டத்துக்கு ஆதரவாக பெரிய வகுப்பு எடுத்தார் பழனிசாமி.

ஆட்சி மாறியது. 2021 செப்டம்பர் 8 அன்று, ‘நாட்டின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் கேள்விக்குறியாக்கும் ஒன்றிய அரசின் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை திரும்பப் பெற வேண்டும்’ என்று சட்டமன்றத்தில் தனித் தீர்மானத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொண்டு வந்தார்கள். இந்த தனித் தீர்மானத்தை சட்டமன்றத்துக்குள் இருந்து அ.தி.மு.க. ஆதரித்திருக்க வேண்டும். அல்லது தீர்மானத்தை எதிர்த்திருக்க வேண்டும். இரண்டையும் செய்யவில்லை. வேறு ஒரு காரணத்தைச் சொல்லி முன்னதாகவே வெளிநடப்பு நாடகத்தை நடத்தி வெளியேறி விட்டார்கள். இதுதான் இவர்கள் பா.ஜ.க.வை எதிர்க்கும் லட்சணம்.

‘ஓ.பன்னீர்செல்வம் இருந்து பா.ஜ.க.வை ஆதரிக்க கட்டாயப்படுத்தினார்’ என்பது உண்மையானால், இப்போது தான் பன்னீர்செல்வம் தனியாகப் போய்விட்டாரே. அதன்பிறகும் ஏன் குடியுரிமைச் சட்டத்தை எதிர்க்கத் தயங்கினார் பழனிசாமி? ஏனென்றால், இப்போது நடத்துவதும் பா.ஜ.க. போட்டுத் தந்த ‘ஓரங்க நாடகம்’ தான் என்பதால்!

## பொங்கல் பண்டிகை: சென்னை - கோவை இடையே சிறப்பு ரயில்! தெற்கு ரயில்வே அறிவிப்பு!

*சென்னை, ஜன. 12 -*

*பொங்கல் பண்டிகையை முன்னிட்டு சென்னை - கோவை இடையே சிறப்பு ரயில் இயக்கப்படும் என தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது. பொங்கல் பண்டிகையை சொந்த ஊர்களில் கொண்டாட செல்லும் பொதுமக்கள் வசதிக்காக சிறப்பு பஸ்கள், ரயில்கள் அறிவிக்கப்பட்டு உள்ளன. அனைத்து ரயில்களிலும் எல்லா வகுப்புகளும் நிரம்பி விட்டதால் காத்திருப்போர் பட்டியல் அதிகமாக உள்ளது.*

*குறிப்பாக தென் மாவட்டங்கள் மற்றும் கோவை மார்க்கங்களில் இயக்கப்படுகின்ற ரயில்கள் அனைத்தும் நிரம்பி விட்டன. சிறப்பு ரயில்கள் அறிவித்த அடுத்த சில நிமிடங்களில் இடங்கள் நிரம்பிவிட்டன. இதனால் சென்னை, நெல்லை, தூத்துக்குடி போன்ற மாவட்டங்களுக்கு சிறப்பு ரயில் அறிவிக்கப்பட்டது. இந்த நிலையில் கோவையில் இருந்து தாம்பரத்திற்கு சிறப்பு ரயில் அறிவிக்கப்பட்டுள்ளது.*

*இதுகுறித்து தெற்கு ரயில்வே வெளியிட்ட அறிக்கை வருமாறு:-*

*பொங்கல் பண்டிகை முன்னிட்டு பயணிகளின் வசதிக்காக சிறப்பு ரயில் இயக்கப்படுகிறது. அதன்படி சென்னை - கோவை - சென்னை இடையே சிறப்பு ரயில் இயக்கப்படுகிறது.*

*அதன்படி ஜன.16, 17ம் தேதிகளில் கோயம்புத்தூரில் இருந்து தாம்பரத்திற்கு இயக்கப்படும் சூப்பர் பாஸ்ட் சிறப்பு ரயில் (எண்.06086) இரவு 8.45 மணிக்கு புறப்பட்டு மறுநாள் அதிகாலை 5.20 மணிக்கு தாம்பரம் வந்து சேருகிறது. தாம்பரத்தில் இருந்து 17, 18ம் தேதிகளில் இயக்கப்படும் சிறப்பு ரயில் காலை 7.30 மணிக்கு புறப்பட்டு மாலை 4.30 மணிக்கு கோயம்புத்தூர் சென்றடைகிறது.*

## சொந்த பயன்பாட்டுக்கான வாகனங்களை வணிக நோக்கில் பயன்படுத்தியவர்களுக்கு அபராதம்!

*சென்னை, ஜன. 12 -*

*சொந்த பயன்பாட்டுக்கான வாகனங்களை வணிக நோக்கில் பயன்படுத்தியவர்களுக்கு ரூ.18.53லட்சம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து ஆணையர் சண்முகசுந்தரம் தெரிவித்துள்ளார்.*

*இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது: -*

*சொந்த பயன்பாட்டுக்கு என வாங்கப்படும் வாகனங்களை வாடகைக்கு பயன்படுத்த வேண்டுமானால் டிபோர்ட் உரிமம் பெற வேண்டும். இதற்கான நடைமுறைகள் எளிமைப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், விலையுயர்ந்த மற்றும் சொகுசு வாகனங்களை உரிமம் பெற்று சுற்றுலாவுக்கு பயன்படுத்துவதற்கும் அனுமதி வழங்கப் பட்டுள்ளது.*

**5,273 வாகனங்கள் சோதனை!**

*இந்நிலையில் முறையான உரிமம் பெறாமல் சொந்த உபயோகத்துக்காக வாங்கப்பட்ட வாகனங்கள் இயக்கப்படுவதைத் தடுக்கும் வகையில் மாநிலம் முழுவதும் கடந்த 5 முதல் 9ம் தேதி வரையிலான 5 நாட்கள் தீவிர வாகன தணிக்கை மேற்கொள்ளப்பட்டது.*

*இந்த தணிக்கையில் 5,273 வாகனங்கள் சோதனை செய்யப்பட்டன. 155 வாகனங்கள் முறையாக சுற்றுலா உரிமம் பெறாமல் இயக்கப்பட்டுவந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அந்த வாகன உரிமையாளர்களுக்கு ரூ.18 லட்சத்து 53,051 அபராதமாகவும், வரியாகவும் விதிக்கப்பட்டுள்ளது. 121 வாகனங்கள் சிறைபிடிக்கப்பட்டன.*

*இவ்வாறு சொந்த பயன்பாட்டுக்கு வாங்கிய வாகனங்களை முறையான உரிமம் பெறாமல் வாடகைக்கு இயக்கினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.*

*இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.*




சென்னை, நந்தம்பாக்கம், வர்த்தக மையத்தில், நேற்று (11.01.2024) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் நடைபெற்ற அயலகத் தமிழர் தினம் – 2024 விழாவை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார். இவ்விழாவில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மருத்துவர் கலாநிதி வீராசாமி, எம்.எம்.அப்துல்லா, சட்டமன்ற உறுப்பினர் எ.எம்.வி.பிரபாகரராஜா, அயலகத் தமிழர் நல வாரியத்தின் தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி, தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் தலைவர் ஐ.லியோனி, பொதுத் துறை செயலாளர் க.நந்தகுமார், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் பா.கிருஷ்ணமூர்த்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை, நந்தம்பாக்கம், வர்த்தக மையத்தில், நேற்று (11.01.2024) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் நடைபெற்ற அயலகத் தமிழர் தினம் – 2024 விழாவில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சியினைத் திறந்து வைத்தார். இவ்விழாவில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மருத்துவர் கலாநிதி வீராசாமி, எம்.எம்.அப்துல்லா, அயலகத் தமிழர் நல வாரியத்தின் தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி, பொதுத் துறை செயலாளர் க.நந்தகுமார், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் பா.கிருஷ்ணமூர்த்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



# பில்கிஸ் பானு வழக்கும் – ராஜதர்மமும்!

**“நீதி நிலைநாட்டப்பட்டுள்ளது. இருள் சூழ்ந்த வேளையில் நம்பிக்கை தரும் ஒளிக்கீற்றாக உச்சநீதிமன்றத் தீர்ப்பு அமைந்திருக்கிறது.”**

– பில்கிஸ் பானு வழக்கில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பு குறித்து தமிழ்நாடு முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ள இந்தக் கருத்துகளை ஆழ்ந்து நோக்கினால், சமீப



காலமாக எல்லாத் துறைகளும் பா.ஜ.க. ஆட்சியில் சீரழிந்து – சின்னாபின்னமாகி இருள் சூழ்ந்து கிடக்கும் நிலைகுறித்து அவருடைய ஆழ்மனதின் அங்கலாய்ப்பை உணரமுடியும்!

பல நேரங்களில் முதல்வர் குறிப்பிட்ட இருள்சூழ்ந்த நிலைமற்ற துறைகளைப் போல நீதித்துறையையும் விட்டுவைக்கவில்லை! சர்வாதிகாரத்தின் ‘ஆக்டோபஸ்’ கரங்கள் நீதித்துறையையும் வளைத்திடத் தொடங்கிய கொடூரம் பல நேரங்களில் கண்கூடாகவே தெரிய ஆரம்பித்தது.

**“ஜனநாயகம் ஆபத்தில் இருக்கிறது. நிலைமைகள் சரியாக இல்லை”** (Democracy at stakes; Things not in order) **என்று கடந்த 2018-ஆம் ஆண்டே உச்சநீதிமன்றத்தின் மூத்த நீதிபதிகள் நால்வரே செய்தியாளர்களைச் சந்தித்து கவலை தெரிவித்ததும் இங்கு நினைவுகூரத்தக்கது. அந்தச் செய்தியாளர்கள் சந்திப்பு; இந்திய ஜனநாயகத்துக்கு உருவாகி உள்ள ஆபத்தை சுட்டிக் காட்டி எச்சரிப்பதாகவே அமைந்தது! ஆனால் அதற்குப் பின்னும் நிலைமைகளைச் சரிசெய்யும் போக்கு தென்படவில்லை!**

பல வழக்குகளில் நீதிமன்றங்களின் செயல்பாட்டில் நேர்மைத் தன்மை – வெளி அழுத்தங்கள் காரணமாகத் தள்ளாடுகிறதோ என்று பொதுமக்களால் எண்ணிடத் தோன்றுமளவு அதன் செயல்பாடுகள் அமைந்ததைக் காணமுடிந்தது! உச்சநீதிமன்றம் தெரிவித்த பல கருத்துகளில் இதன் உணர்வு தென்பட்டது!

**“தனி மனித சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டிய தன் அவசியத்தை மீண்டும் மீண்டும் வலியுறுத்தியுள்ளது. நியாயமான காரணமின்றி நியாயமான ஜாமீன் மறுக்கப்படக் கூடாது – இந்த உரிமை நாகரிக குற்றவியல் நீதி அமைப்பின் இன்றியமையாத அங்கமாகும்.”**

(Time and again the supreme court emphasized the need to protect personal liberty and held that the right not to be denied reasonable bail without just cause an essential element of criminal law)

– உச்சநீதிமன்றம் தெரிவித்த இந்தக் கருத்துகள் நடைமுறையில் பல வழக்குகளில் செயல்பட முடியாது உள்ளதைக் கண்கூடாகக் கண்டு கொண்டிருக்கிறோம்.

உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி ஒரு நிகழ்ச்சியில்



பேசும்போது, குற்றவியல் நீதியில் (criminal justice system) முக்கிய அடிப்படையான விதியே பெயில் தான்; ஜெயில் அல்ல! (Bail not Jail) என்று பேசியது பெரிய அளவில் ஏடுகளிலும் ஊடகங்களிலும் செய்தியாக வெளிவந்துள்ள நிலையில், நடப்பில் அந்தக் கருத்தை பல நீதிமன்றங்கள் கடைப்பிடிப்பதில்லை என்பது நீதித்துறையின்மீது ஒருவித நெருடலை ஏற்படுத்துவதாகவே உள்ளது.

**குற்றவியல் சட்டத்தை அணுகும் முறையில், உச்சநீதிமன்றம் உட்பட பல நீதிமன்றங்கள் இன்று அணுகிடும் முறையைக் காணும் போது – நீதிமன்றங்களிலும் இருள்சூழ்ந்த நிலை உள்ளதோ என்ற ஐயப்பாடு உருவாகிறது.**

சிலர் மீதான வழக்கு விசாரணை; அவர்கள் சிறைப் படுத்தப்பட்டு பல மாதங்களாகியும் தொடங்கப்படாத நிலையில், நீதிமன்றங்கள் இவர்களைக் குற்றவாளி எனத் தீர்மானிக்காத போதும், இவர்களின் சிறைவாசம் நீடித்துக் கொண்டிருக்கிறது.

**ஜனநாயகம் ஆபத்தில் உள்ளது என்று உச்சநீதிமன்றத்தின் நீதியரசர்கள் குற்றம் சாட்டியதை தொடர்புபடுத்திப் பார்த்தால் அரசியல் அதிகாரம் படைத்தோருக்கு நீதித்துறையும் தலைதாழ்ந்து நிற்கிறதோ? சில அழுத்தங்களுக்கு கட்டுப்பட**



## சிலந்தி

**வேண்டிய நிலையில் உள்ளதோ? – என்பன போன்ற கேள்விகள் மக்கள் மனதில் எதிரொலிக்கவே செய்கின்றன. இந்தக் கேள்விகளுக்கு உரிய பதிலைத் தேடிப் பார்த்தால் மறுப்பதற்கு சரியான ஆதாரங்கள் கிடைக்கவில்லை.**

நாட்டில் உள்ள இந்தச் சூழலில்தான் பில்கிஸ் பானு வழக்கில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பை, இருள் சூழ்ந்த வேளையில் நம்பிக்கை தரும் ஒளிக்கீற்றாக முதல்வர் கருதியுள்ளார் என எண்ணிடத் தோன்றுகிறது.

பில்கிஸ் பானு வழக்கில் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு ஒளிக்கீற்றாகத் தோன்றினாலும், அந்த ஒளி நீடிக்குமா என்பது சந்தேகமே!

அந்தச் சந்தேகத்தை நாம் எழுப்பவில்லை. கடந்த கால நிகழ்வுகளை நினைவூட்டி பில்கிஸ் பானுவின் மாமா அப்துல் ரசாக் மன்சூரி எழுப்பியுள்ளார்! இந்தக் கொடூர வழக்கு விசாரணையில் நேரடி சாட்சியாக (Eyewitness) இருந்தவர்; அவர்!

உச்சநீதிமன்றம் ‘குற்றவாளியை விடுவித்தது தவறு’ என்று கூறிவிட்டது. குற்றவாளிகள் சிறைவாசத்துக்கு அனுப்பப்பட்டாலும் அவர்கள் சிறையில் அடைக்க வைக்கப்படுவார்களா என்ற சந்தேகத்தை அவர் எழுப்பியுள்ளார். அவர்களுக்கு முதலில்



நீதிமன்றம் அளித்த தீர்ப்பின்படி அவர்கள் முழுச் சிறைவாசம் அனுபவிக்கவில்லை. பல ஆண்டு காலம் அந்த மாநில அரசின் கருணையால் சிறைக்கு வெளியேதான் இருந்தார்கள். இப்போது கூட இந்தத்தீர்ப்பிற்குப் பிறகு அந்தக் குற்றவாளிகள் தலைமறைவாகி விட்டதாகச் செய்திகள் வருகின்றன!

**அந்தக் குற்றவாளிகளுக்கு அந்த மாநில அரசு இத்தனை சலுகைகள் அளிப்பதின் பின்னணி என்ன? இந்த வழக்கில் குற்றவாளிகளுக்கு ஆதரவாக – அன்று குஜராத் கலவரப் பகுதியைப் பார்வையிட்ட அன்றைய பிரதமர் வாஜ்பாய் குறிப்பிட்டபடி, ராஜ தர்மத்தைக் கடைபிடிக்கத் தவறிய படுபாதகர்கள் உள்ளனர். அவர்களில் சிலர் இன்றும் உயர்பதவிகளில் அமர்ந்து இந்த நாட்டையும், நாட்டு மக்களையும் ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.**

இவர்கள் அகற்றப்படும்வரை பில்கிஸ் பானு போன்றோருக்கு முழு விடிவு இல்லை – உச்சநீதிமன்றத் தீர்ப்பில் இன்று காணப்படும் ஒளிக்கீற்றை மீண்டும் இருள் கவ்விடும்!



**அரசியல் போலி வேடதாரிகளின் ஆட்டத்துக்கு முடிவுகட்ட விழியுங்கள்!**

**ஏமாற்றுப் பேர்வழிகளுக்கு எதிராக எழுங்கள்!**

**ஏற்றமிகு புதிய வரலாறு படைக்கத் தயாராகுங்கள்!**





திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில், கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, திருவண்ணாமலை சட்டமன்ற தொகுதிக்கான கலைஞர் நூலகத்தை, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு திறந்து வைத்தார். உடன் சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, சி.என்.அண்ணாதுரை எம்.பி, பெ.சு.தி.சரவணன் எம்.எல்.ஏ, ப.கார்த்திவேல்மாறன், ப்ரியா விஜயரங்கன், மெய்யூர் சந்திரன், த.ரமணன், பா.ராமஜெயம் சு.ராஜாங்கம் உட்பட பலர் உள்ளனர்.



கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி நேற்று முன்தினம் (10.01.2024) இராணிப்பேட்டை மாவட்டம் இராணிப்பேட்டை நகராட்சி, நவல்பூர் கற்பகம் நியாய விலைக் கடையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு தலா அரிசி 1 கிலோ, சர்க்கரை 1 கிலோ, ரொக்கம் ரூ.1000/ விலையில்லா வேட்டி சேலை மற்றும் ஒரு முழு கரும்பினை வழங்கி துவக்கி வைத்தார். உடன் கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் சிவகுமார், மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் திருமதி.ஜெயந்தி திருமூர்த்தி, நகரமன்றத் தலைவர் திருமதி. சுஜாதா வினோத், துணைத் தலைவர் ரமேஷ் கர்ணா, வார்டு உறுப்பினர்கள் வினோத், குமார், அப்துல்லா, துணைப்பதிவாளர் சந்திரன், பறக்கும் படை வட்டாட்சியர் நடராஜன் உள்ளனர்.

## உலக முதலீட்டாளர்கள் மாநாடு :

# சாதித்துக் காட்டிய முதலமைச்சர்.. தலை நிமிரும் தமிழ்நாடு!

**செ**ன்னையில் சமீபத்தில் நடைபெற்ற சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாடு தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பாதையில் மாபெரும் மைல் கல்.

கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் படி தமிழ்நாடு பெறப்போகும் முதலீடு 6 லட்சம் கோடி ரூபாயைத் தாண்டி வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது. இதை சாதித்துக் காட்டிய தமிழ்நாடு முதலமைச்சருக்கு தமிழ்நாடு மக்கள் வாழ்த்துகளைத் தெரிவித்து வரும் வேளையில், நாம் ஒன்றை நினைவு கூர வேண்டும்.

அது, எப்போதெல்லாம் தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருகிறதோ அப்போதெல்லாம் தமிழ்நாடு மாபெரும் வளர்ச்சியை எட்டியுள்ளது.

கல்வி, வேலைவாய்ப்பு, மருத்துவம், உட்கட்டமைப்பு, போக்குவரத்து, விவசாயம் என்று அனைத்துத் துறைகளிலும் சீரான வளர்ச்சி,

அனைவருக்குமான வளர்ச்சி என்று இந்த வளர்ச்சியை சாத்தியப்படுத்திக் காட்டியது திமுக. தமிழ்நாட்டில் இந்த வளர்ச்சி எங்கிருந்து தொடங்கியது, அது எப்படி எல்லாம் பரவலாக்கப்பட்டது என்பதை விவரிக்கிறது இந்தத் தொகுப்பு.

1967 ல் பேரறிஞர் அண்ணா தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பதவியேற்றபோது, தமிழ்நாடு உட்பட இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் வறுமை தலைவிரித்தாடியது பசியும், பட்டினியும்தான் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களின் நிலையாக இருந்தது. தமிழ்நாட்டிலும் அந்தக் காலகட்டத்தில் இருந்த

பஞ்சத்தினால் பஞ்சம் பிழைக்க பலரும் இன்றைய மும்பை, அன்றைய பம்பாய் உள்ளிட்ட நகரங்களுக்கு வேலை தேடிச் சென்ற நிலை இருந்தது. மக்களின் அன்றைய உடனடித் தேவை என்பது உணவு தானியமாக இருந்தது. அதை மனதில் கொண்டே அறிஞர் அண்ணா தேர்தல் வாக்குறுதியாக திமுக ஆட்சிக்கு வந்தால் பேரறிஞர்

'ஒரு ரூபாய்கு மூன்று படி அரிசி லட்சியம் ஒரு படி அரிசி நிச்சயம்' என்ற வாக்குறுதியைத் தந்தார். திமுக ஆட்சிக்கு வந்தது.

1969 ல் அண்ணா மறைவுக்குப் பிறகு முதலமைச்சராக பொறுப்பேற்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் தமிழ்நாட்டின் உணவு தானிய உற்பத்தியைப் பெருக்கச் செய்த நடவடிக்கைகளே இன்றளவும் தமிழ்நாட்டில் உணவுப் பஞ்சம் இன்றி இருப்பதற்குக் காரணம்.

கலைஞர் முதல்வராகப் பொறுப்பேற்றதும், நிலச்சீர்திருத்தச் சட்டத்தில் கொண்டு வந்த திருத்தத்தால், பெரும் பண்ணையார்களிடம் குவிந்திருந்த விவசாய நிலங்கள் ஏழை எளிய விவசாயிகள் வசமாகின. அது உற்பத்தியைப் பெருக்குவதற்கு முதல் காரணமாகியது. நிலத்தை விவசாயிகள் வசம் கொடுத்ததோடு நிற்காமல் விளைச்சலைப் பெருக்க இலவச மின்சாரம், ஏராளமான மானியங்கள், கூட்டுறவு சங்கங்களின் மூலம் கடன் உதவி என்று விவசாய உற்பத்தியைப் பெருக்க எல்லா விதமான நடவடிக்கைகளையும் எடுத்தார் கலைஞர். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மட்டும் 42 அணைக்கட்டுகள் கட்டப்பட்டன.



தமிழ் கேள்வி
**தி.செந்தில் வேல்**
மூத்த ஊடகவியலாளர்.

பட்டினி இல்லை என்ற நிலை உருவானது. உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற்றோம். உற்பத்தியான உணவு தானியங்களை மக்களிடம் கொண்டு போய் சேர்க்க தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் உருவாக்கப்பட்டு நியாய விலைக் கடைகள் எல்லா இடங்களிலும் திறக்கப்ப ட்டு மக்களுக்கு அவை கொண்டு சேர்க்கப்பட்டன.

உணவு கிடைத்தால் மட்டும் போதுமா, மக்களின் வாழ்க்கைத் தரம் அடுத்த கட்டத்திற்குச் செல்ல வேண்டாமா..அந்த இடத்தில் உருவானதுதான் சிப்காட். தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளுக்கும் தொழிற்சாலைகள் வந்தன.

முன்பெல்லாம் கிருஷ்ணகிரி, தருமபுரி ஆகிய மாவட்டங்கள் பின் தங்கிய மாவட்டங்களாக இருந்த காலத்தில் வளர்ச்சியின்மை வேலையின்மை ஆகியவற்றால் இளைஞர்கள் பலரும் நக்சல் இயக்கங்களால் ஈர்க்கப்பட்ட காலத்தில் அப்பகுதிகளின் தொழில் வளர்ச்சிக்காக ஒசூரில் ஏராளமான தொழிற்சாலைகள் கொண்டு வரப்பட்டன. இன்று ஓசூர் மிகப்பெரிய தொழில் நகரமாக நிற்பதற்கு வித்திட்டவர் கலைஞர்.

வளர்ச்சியின் இன்றியமையாத படிகளுள் ஒன்று போக்குவரத்தும், மின்சாரமும். ஒவ்வொரு கிராமத்திற்கும் மின்சாரத்தைக் கொண்டு போய் சேர்த்தது திமுக. அன்றைய காலத்தில் போக்குவரத்து என்பது சாமானியர்களுக்கு சாத்தியமில்லாத ஒன்று. பேருந்துகள் ஓரிரு உயர்சாதியினருக்கு மட்டுமே என்றிருந்த காலம். அதை மாற்றி பேருந்துகளை நாட்டுடைமையாக்கி அரசுப் போக்குவரத்துக் கழகம் என்ற ஒன்றை உருவாக்கியவர் கலைஞர் .இதன் மூலம். மிகச்சிறிய கிராமங்களில் இருந்த மக்களுக்கும் போக்குவரத்து வசதி சாத்தியமானது. அது தமிழ்நாடு பொருளாதாரத்தை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தியது. பின் நாட்களில் மிக மிக சிறிய கிராமங்களை அருகில் இருக்கும் சிறு நகரங்களோடு இணைக்கும் முயற்சியாக வந்ததுதான் கலைஞரின் மினி பஸ் திட்டம். அதனால் மிக மிக சிறிய கிராமங்க ளைச் சேர்ந்த இளைஞர்கள், இளம் பெண்கள் பலரும் அருகில் உள்ள சிறு நகரத்தில் வேலை வாய்ப்பை பெரும் நிலை உருவானது.

1996 ல் தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்ற போது, அப்போது கணினியின் பயன்பாடு குறித்து பெரிய அளவு புரிதல்கள் இல்லாத காலத்திலேயே, முத்தமிழ் அறிஞர் கலைஞர் கணினிதான் இனி வரும் காலம் என்பதை உணர்ந்து கணினி சார்ந்து முதலீடுகளை ஈர்க்க அனைதது முயற்சிகளையும் தொடங்கியன் விளைவு டைடல் பார்க் உள்ளிட்ட ஏராளமான மென்பொருள் பூங்காக்கள் தமிழ்நாட்டில் கால் பதித்தன.

இன்றைக்கு நம் வீடுகளில் உள்ள பிள்ளைகள் மென்பொருள் நிறுவனங்களில் லட்சத்தில் ஊதியம் பெறுகின்றனர் என்றால் அதற்கு வித்திட்டது திமுக அரசு.

இப்படி விவசாயம், உற்பத்தி சார் தொழில்கள், சேவை சார்ந்த தொழில்கள் என்று எல்லாவற்றையும் பார்த்துப் பார்த்து திட்டங்கள் தீட்டி தமிழ்நாட்டிற்கு தி.மு.க. கொண்டு வந்ததன் நீட்சியாக இன்றைக்கு

6 லட்சம் கோடிக்கும் அதிகமான முதலீடுகளை தமிழ்நாடு பெற்றிருக்கிறது. தமிழ்நாடு இன்னும் பலபடி முன்னே நின்றிருக்க வேண்டும். திமுக ஆட்சியில் கொண்டு வரப்பட்ட பல நல்ல மக்கள் நலன் சார்ந்தத் திட்டங்களை அடுத்து வந்த அ.தி.மு.க. அரசு முடக்கிக் போடுவதையே வழக்கமாக கொண்டிருந்ததன் காரணத்தால் நாம் சிலவற்றை இழக்க நேரிட்டது.

கடந்த அதிமுக ஆட்சிக் காலத்தில் பல்வேறு நிறுவனங்கள் தமிழகத்தை விட்டு வெளியேறி அண்டை மாநிலங்களை நோக்கிச் சென்றதையும் சில நிறுவனங்கள் முற்றிலுமாக மூடிவிட்டுச் சென்றதால் அதன் தொழிலாளர்கள் படும் பாட்டையும் நாம் பார்த்தோம்.

அ.தி.மு.க. ஆட்சியில் தமிழ்நாட்டிற்கு ஏற்பட்ட இழப்பையும் சேர்த்து ஈடுகட்டும் வகையில் தற்போது நம் முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் மாபெரும் சாதனையை நிகழ்த்திக் காட்டியுள்ளார். ரூபாய் 6 லட்சம் கோடி மதிப்பிலான முதலீட்டை தமிழ்நாட்டில் செய்வதற்கு நிறுவனங்கள் முன் வந்ததற்கு பல்வேறு காரணிகள் உள்ளன. பிரதானமாக, நம்முடைய சட்டம் ஒழுங்கு மிகச்சிறப்பாக இருக்கிறது. முதலீடு செய்யும் நிறுவனங்களுக்குத் தேவையான மனித வளம் தமிழ்நாட்டில் இருக்கிறது. அதிலும் இந்த ஆட்சியில் கொண்டு வரப்பட்டுள்ள நான் முதல்வன் உள்ளிட்ட திட்டங்களினாலும், புதுமைப் பெண் உள்ளிட்ட திட்டங்களினாலும் இளைஞர்களின் கல்வித் தரம் மேம்பட்டுள்ளதோடு உயர்கல்வியில் இடைநிற்றல் என்ற பேச்சுக்கே இடமில்லை என்ற நிலை உருவாகியுள்ளது.

இதனால், நிறுவனங்களுக்குத் தேவையான திறன்வாய்ந்த மனித ஆற்றலை தமிழ்நாடு தருகிறது. மேலும், கடுமையான இயற்கைச் சீற்றங்களையும் தாண்டி தமிழ்நாட்டின் உட்கட்டமைப்பு வசதிகளும் முதலீடுகள் தமிழ்நாட்டில் குவிவதற்கு முக்கிய காரணிகள்.

குறிப்பாக, தி.மு.க . அரசால் கொண்டு வரப்பட்ட மெட்ரோ உள்ளிட்ட திட்டங்கள் எல்லாம் இதற்கு மிகப்பெரும் காரணிகள் என்கின்றனர் பொருளாதார வல்லுநர்கள்.

குறிப்பாக ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் ரகுராம் ராஜன், கட்டணமில்லா மகளிர் பேருந்து திட்டம் என்பது பெண்களின் வேலை வாய்ப்பை அதிகப்படுத்தியுள்ளது என்று பாராட்டுகிறார். மகிந்ரா நிறுவனத்தின் ஆனந்த் மகிந்ரா, இந்தியாவுக்கான ஜப்பான் தூதர் உள்ளிட்ட பலரும் இந்த மாநாட்டையும், தமிழ்நாடு முதல்வரையும் பாராட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக, தென்மாவட்டங்களில் எழும் சமூக ரீதியிலான மோதல்களைத் தடுக்க அன்றைய கலைஞர் ஆட்சியில் கொண்டு வரப்பட்ட திட்டமான நான்குநேரி தொழில் நுட்பப் பூங்காவை அடுத்து வந்த அ.தி.மு.க. அரசு அப்படியே கிடப்பில் போட்டது. தற்போது நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில்

ஏராளமான நிறுவனங்கள் தொடங்கப்பட இருப்பது தென் தமிழ்நாட்டு மாவட்ட மக்களுக்கு மிகப்பெரிய மகிழ்ச்சி.

இரண்டரை ஆண்டுகளில், இந்த அரசு செய்த சாதனைகளை நினைத்துப் பார்க்கிறேன்.

கலைஞர் நூற்றாண்டு பன்நோக்கு மருத்துவமனை.

கலைஞர் நூற்றாண்டு பிரமாண்ட நூலகம்

கீழடி அருங்காட்சியகம்

கிளாம்பாக்கம் பேருந்து நிலையப் பணிகளை நிறைவு செய்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தது.

வேகமெடுக்கும் மெட்ரோ பணிகள் என்று எத்தனை எத்தனை.. இவை தவிர சமூக நீதிப் பார்வையில், காலை உணவு, அனைத்து சாதியினரும் அர்ச்சகர்,பெண் பிள்ளைகளின் உயர் கல்விக்கு மாதம் ஆயிரம் ரூபாய் மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து, மகளிர் உரிமைத் தொகை மாதம் 1000 ரூபாய் என்று ஏராளமான திட்டங்களைத் தந்த முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சாதனைப் பட்டியலில் மற்றுமொரு மகுடம் இந்த முதலீட்டாளர்கள் மாநாடு. இதைத் திறம்பட நடத்திக் காட்டி முதலமைச்சரின் பாராட்டைப் பெற்ற தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜாவுக்கும் தமிழ்நாடு அரசின் அதிகாரிகளுக்கும் நன்றியோடு நம் வாழ்த்துகளையும் கூறுவோம்.

ஈ.ராஜா எம்.எல்.ஏ. - வே.ஜெயபாலன் - தனுஷ் எம்.குமார் எம்.பி. முன்னிலை!

# தென்காசி மாவட்டத்தில் பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள்!

## அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் வழங்கினார்!

தென்காசி.ஜன.12-

தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு சிறப்பு பட்டா முகாம் மூலம் பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டாக்களை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே. எஸ். எஸ்.ஆர்.இராமச்சந்திரன்,ரூபாய் 87, 37,010 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம். எல்.ஏ.தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ் எம்.குமார் ஆகியோர் முன்னிலையில் வழங்கினார்.

தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு சிறப்பு பட்டா முகாம் மூலம் பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டாக்கள் வழங்கும் நிகழ்வு மாவட்ட ஆட்சியர் துரை. இரவிச்சந்திரன் தலைமையில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம். எல்.ஏ.தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ் எம்.குமார் எம்.பி.பழனி நாடார் எம். எல்.ஏ.ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் பங்கேற்று பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டாக்களை வழங்கி தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் இலவச வீட்டு மனை பட்டாக்கள் வழங்க ஆணையிட்டதை தொடர்ந்து தமிழகம் முழுவதும் 1 லட்சம் பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டாக்கள் வழங்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் மனதில் உதித்த திட்டம் தான். இலவச வீட்டு மனை பட்டா வழங்கும் திட்டம்,தந்தை வழியில் நமது முதலமைச்சர் அவர்களும் மக்களின் அடிப்படை தேவையை பூர்த்தி செய்யும் வகையில் இத்திட்டத்தை மக்களுக்காக செயல்படுத்தி வருகிறார்கள்.

மேலும் தென்காசியில் மழையினால் பாதிப்பு ஏற்பட்டதை தொடர்ந்து நிவாரணத் தொகை 1000,ம் வழங்கப்பட்டுள்ளது.அரசின் திட்டங்களை அனைவரும் முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர்.இராமச்சந்திரன் தெரிவித்தார்.

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க தென்காசி கோட்டத்தில் இலவச வீட்டுமனை பட்டா, வரன்முறை பட்டா,ஆதிதிராவிடர் நத்தம் பட்டா,பிற்படுத்தப் பட்டோர் நத்தம் பட்டா என 191 பயனாளிகளுக்கு மொத்தம் 82, 57,324 மதிப்பிலான பட்டாக்களையும், 871 பயனாளிகளுக்கு பட்டா மாறுதல் (உட்பிரிவு உள்ளது,உட்பிரிவு அற்றது) ஆதிதிராவிடர் நத்தம் பட்டா என மொத்தம் 1062 பயனாளிகளுக்கு பட்டாக்களையும்,சங்கரன் கோவில் கோட்டத்தில் இலவச வீட்டுமனை பட்டா, வரன்முறை பட்டா, ஆதிதிராவிடர் நத்தம் பட்டா,பிற்படுத்தப் பட்டோர் நத்தம் பட்டா என 29 பயனாளிகளுக்கு ரூபாய் 4,66,186 லட்சம் மதிப்பிலான பட்டாக்களையும்,503 பயனாளிகளுக்கு பட்டா மாறுதல் (உட்பிரிவு உள்ளது, உட்பிரிவு அற்றது) பட்டாக்களையும்,1 மாற்றுத்திறனாளிக்கு ரூபாய் 13,500 மதிப்பிலான மூன்று சக்கர சைக்கிள் என மொத்தம் 87,37,010 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் வழங்கினார்.

நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் பத்மாவதி,வருவாய் கோட்டாட்சியர்கள் லாவண்யா (தென்காசி)சுப்புலட்சுமி (சங்கரன்கோவில்) நகர் மன்ற தலைவர்கள் சாதிர் (தென்காசி)உமா மகேஸ்வரி (சங்கரன்கோவில்)

ஒன்றிய குழு தலைவர்கள் ஷேக் அப்துல்லா (தென்காசி)லாலா சங்கர பாண்டியன் (சங்கரன்கோவில்) சங்கரன்கோவில் வட்டாட்சியர் பாபு உள்பட அரசு அலுவலர்கள்,கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி பயிற்சிக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் அறிக்கை!



குமரி, ஜன. 12-

கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி, கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைப்படி, தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணியின் முன்னெடுப்பில் நடத்தும் சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு நாளை (13.01.2024 - சனிக்கிழமை) அன்று காலை 10.00 மணிக்கு நாகர்கோவில், ஒழுகினசேரியில் அமைந்துள்ள மாவட்ட தலைமை அலுவலகத்தில் நடைபெறுகிறது.

இப்பயிற்சி வகுப்பில் கழக இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, பொறியாளர் அணி, மருத்துவ அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, சிறுபான்மை நல உரிமைப் பிரிவு, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி உள்ளிட்ட கழக சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு பயிற்சி பெற வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பரமத்தி சண்முகம்
### சனவரி 12 (2019)



இளமைப் பருவத்திலேயே பகுத்தறிவுக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, பகுத்தறிவாளராகவும் – சிந்தனையாளராகவும் திகழ்ந்து, கழகம் தொடங்கிய பின்னர் கழகப் பணியாற்றியவர்.

கரூர் மாவட்டக் கழகச் செயலாளராகவும் – மாநில நெசவாளர் அணித் தலைவராகவும் – தொ.மு.ச. பேரவை துணைத் தலைவராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.,

கரூர் நகராட்சி மன்ற உறுப்பினராக கழகத்தின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர். "சன்முரசு" இதழ் ஆசிரியராகவும் இருந்தவர்.

கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்றதுடன், நெருக்கடி கால மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# மதம் - ஜாதியின் பெயரால் பாசிச பா.ஜ.க. பரப்பும் அவதூறுகளை முறியடிப்போம்!

# இந்தியாவைக் காப்பாற்ற ‘இந்தியா’ கூட்டணியை வெற்றிபெறச் செய்வோம்!

## கழக அயலக அணியின் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு கருத்தரங்கம் - மாவட்ட - பன்னாட்டு நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!




சென்னை,ஜன.12 -

**மதத்தின் பெயரால் - ஜாதியின் பெயரால் பாசிச பா.ஜ.க. பரப்பும் அவதூறுகளை முறியடிப்போம்! என்றும், இந்தியாவை காப்பாற்ற ‘இந்தியா’ கூட்டணியை வெற்றிபெறச் செய்வோம்! என்றும் கழக அயலக அணியின் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு கருத்தரங்கம் மற்றும் மாவட்ட - பன்னாட்டு நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் உரையாற்றுகையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் குறிப்பிட்டார்.**

கழக அயலக அணி சார்பில், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் நூற்றாண்டு கருத்தரங்கம் மற்றும் மாவட்ட - பன்னாட்டு நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் சென்னை, ராயப்பேட்டை ஒய்.எம்.சி.ஏ அரங்கில் நடைபெற்றது.

இதில் கழக இளைஞர் அணிச் செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார்.

அப்போது அவர் பேசியதாவது :

“கழகத்தின் அயலக அணி கூட்டத்தில் பங்கேற்று, உங்களை சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். தமிழினத் தலைவர் கலைஞரின் நூற்றாண்டில் இந்த நிகழ்ச்சி நடப்பது நமக்கு பெருமை. இந்த நிகழ்ச்சிக்கான அழைப்பிதழை உங்களுடைய செயலாளரும் நிர்வாகிகளும் கொடுத்தார்கள். அதோடு ஒரு நினைவுப் பரிசையும் அளித்தார்கள்.

அழைப்பிதழுடன் இதையும் கொடுக்கின்றோம் என்று சொன்னார்கள், என்னவென்று பார்த்தால், ஒரு பெரிய டிராவல் பேக். அயலக அணி என்பதால், டிராவல் பண்ணுவதற்குப் பேக்கையும் சேர்த்து கொடுக்கிறீர்களா? எடுத்துப் போவதற்கு டிரஸ் வைத்தும் கொடுப்பீர்களா? என்று கேட்டேன். `ஆமாம் தலைவரே, அதுவும் உள்ளே இருக்கிறது. புதுச் சட்டை, துணி, காலண்டர் எல்லாம் வைத்திருந்தார்கள்.

அதன்பிறகு அவர்களிடம் கேட்டேன். ஊருக்குப் போனால் காசு எடுத்துக் கொண்டு போக மாட்டோமா, மாநாட்டு நிதி கொடுக்கலாம் அல்லவா? என்று கேட்டேன். உங்கள் செயலாளர் கண்டிப்பாகக் கொடுத்து விடுகிறேன் என்று சொன்னார். இப்போது வரைக்கும் கொடுக்கவில்லை. அது உங்களுடைய இஷ்டம் உங்களுடைய வசதி விழா மேடை எல்லாம் பிரமாண்டமாக அமைத்திருக்கிறீர்கள். இதுவே கிட்டத்தட்ட ஒரு மாநாடு மாதிரி நடந்து கொண்டிருக்கிறது. எனவே, உங்கள் வசதியைப் பொறுத்து, மாநாட்டின் நிதியைக் கொடுக்கலாம்.

### கலைஞர் நின்று வென்ற தொகுதி!

இன்னொரு சிறப்பு என்னவென்றால், இந்த நிகழ்ச்சி நடக்கின்ற இடம் நம்முடைய சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதி. நான் சட்டமன்ற உறுப்பினராக இருப்பதால் சொல்லவில்லை. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இரண்டு முறை இந்தச் சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதியில் சட்டமன்ற உறுப்பினர். எனவே நீங்கள் எவ்வளவுதான் நிகழ்ச்சி நடத்தினாலும் உலகெங்கிலும் தி.மு.க என்றாலும் கடைசியாக இந்தச் சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதிக்குத்தான் வந்தாக வேண்டும். கலைஞர் நின்று வென்ற தொகுதி.

தமிழ்நாட்டு மக்கள் மட்டுமல்ல, உலகம் எங்கும் வாழ்கின்ற தமிழர்கள் உயர வேண்டும் என்று தன்னுடைய வாழ்நாள் முழுவதும் உழைத்தவர்தான் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். கலைஞர் அவர்களின் அந்த உணர்வுக்கு உயிர் கொடுக்கும் வகையில்தான் நம்முடைய கழகம் அயலக அணியை நம்முடைய முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் ஜனவரி 2021 ஆம் ஆண்டு தொடங்கி வைத்தார்.

எனவே இது ஒரு ஆலோசனை கூட்டம் மட்டுமல்ல. இது ஒரு பிறந்தநாள் விழா கூட்டம். உங்களுடைய அணிக்கு இது மூன்றாவது பிறந்த நாள். ஒரு சில குழந்தைகள்தான் வளர்ந்த மனிதர்கள்போல பல்வேறு சாதனைகள் செய்கிறார்கள் என்று நாம் தொலைக்காட்சியில் ஆச்சரியத்தோடு பார்ப்போம். அது மாதிரிதான் நம்முடைய அயலக அணியும் மூன்று வயது குழந்தையாக இருந்தாலும், இந்த அணி செய்கின்ற மக்கள் பணிகள் மகத்தானவை. போற்றுதலுக்குரியவை.

நான் பொறுப்பு வகிக்கின்ற இளைஞர் அணிக்கும் இந்த அயலக அணிக்கும் ஒரு ஒற்றுமை உண்டு. நம்முடைய சகோதரர் மனுராஜ் சொன்னார். தி.மு.க ஆரம்பித்த முதல் அணி இளைஞர் அணி தி.மு.க ஆரம்பித்த கடைசி அணி அயலக அணி என்று.

இந்திய ஒன்றியத்திலே ஒரு மாநிலத்தில் ஒரு மாநிலக் கட்சி இளைஞர் அணி என்று ஆரம்பித்தது என்றால், அது நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம்தான். 1980 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது, இளைஞர் அணி. அதேபோல இந்தியாவிலேயே ஒரு மாநிலக் கட்சி முதன் முதலில் அயலக அணி ஆரம்பித்திருக்கிறது என்றால், அதுவும் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம்தான். இன்னொரு பொருத்தம் இரண்டையுமே ஆரம்பித்தது நம்முடைய தலைவர் அவர்கள்தான். இது ஒரு வசதியான அணி. ஏன், சொல்கிறேன் என்று தெரியும் என்று நினைக்கிறேன். அணிகளிலேயே அதிகமான எம்.பி.க்கள் கொண்டது இந்த அயலக அணிதான். சகோதரர் அப்துல்லா, சகோதரர் செந்தில், சகோதரர் கலாநிதி வீராசாமி என்று மிகப்பெரிய ஒரு பட்டியல் இருக்கிறது. ஆனால் சகோதரர் தனுஷ் குமார், சகோதரர் அண்ணாதுரை என எங்கள் இளைஞர் அணிக்குக் கூட இரண்டு எம்.பி.க்கள்தான் இருக்கிறார்கள்.

பொதுவாக, ஒன்றிய அரசுக்கு வெளியுறவுத் துறை இருக்கும். அதேபோல், நம்முடைய திராவிட மாடல் அரசுக்குக்கூட அயலகத் தமிழர் நலத் துறை இருக்கிறது. அதை நிறுவியதும் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞரின் ஆட்சியில் தான். தி.மு.க ஆட்சியில்தான்.

### கழக வெளியுறவுத்துறை அயலக அணி!

இப்போது நம்முடைய கழகத்தினுடைய வெளியுறவுத் துறையாக அயலக அணி சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. பல நாடுகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் ஏதாவது பிரச்சனை என்றால், தூதரகங்களுக்கு போகிறார்களோ இல்லையோ முதலில் கழகத்தின் அயலக அணியைத்தான் முதலில் தொடர்பு கொண்டு கோரிக்கைகளை வைக்கிறார்கள்.

இந்த அணி உருவாக்கப்பட்ட முக்கிய நோக்கம். உலகம் முழுக்க இருக்கின்ற தமிழ் மக்களுக்குப் பக்கபலமாக இருக்க வேண்டும். அவங்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் உடனே செய்து தரவேண்டும் என்ற ஒரே நோக்கம்தான். கழகத் தலைவர் நம்முடைய முதலமைச்சரின் எண்ணத்தின்படி தமிழ்நாட்டு மக்களுக்கு உலகத்தின் எந்த மூலையில் என்ன பாதிப்பு என்றாலும், முதலில் சென்று நிற்பது நம்முடைய அயலக அணிதான். அதற்குப் பல உதாரணங்கள் இருக்கின்றன.

கட்சி, ஜாதி, மதம், மொழி, இனம் என எந்தப் பாகுபாடும் இல்லாமல், தமிழ்நாட்டு மக்கள் என்ற அடிப்படையில் வெளிநாட்டில் வசிக்கக் கூடிய தமிழர்களுக்குக் கழக அயலக அணி பல்வேறு உதவிகளைச் செய்து வருகின்றது. தமிழர்கள் பண்டைக் காலத்திலிருந்தே உலகம் முழுக்கப் பயணம் செய்து வாழ்ந்தார்கள். இன்னும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்றால், கடந்த 25 வருடங்களில் நம்முடைய தமிழர்கள் பணி செய்வதற்காகவும், வேலைக்காகவும், படிக்கவும் இப்போது வெளிநாடுகளில் அதிகமாக பயணம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

அதற்குக் காரணமும் நம்முடைய கலைஞர் அவர்கள்தான். உயர்கல்வியும், தகவல் தொழில்நுட்பத் துறையும் கலைஞர் அவர்கள் ஏற்படுத்திய அந்தச் சாதனைகளை, கொண்டு வந்த திட்டங்கள்தான். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான் தமிழ்நாடு முழுவதும் ஏராளமான தொழில்நுட்பக் கல்லூரிகளைத் திறந்தார்கள். நாட்டிலேயே முதன்முறையாக 1997 ஆம் ஆண்டு ஐ.டி பாலிசி தகவல் தொழில்நுட்ப கொள்கையை உருவாக்கினார்கள்.

### வெளிநாடுகளில் தமிழர்கள் பணி செய்ய வாய்ப்பு!

டைடல் பார்க்கை சென்னைக்குக் கொண்டு வந்து, பல பன்னாட்டு நிறுவனங்களைத் தமிழ்நாட்டிற்குக் கொண்டு வந்தார்கள். இந்த எக்ஸ்போஷர்தான் தமிழ்நாட்டைச் சேர்ந்த பலர் இப்போது வெளிநாடுகளுக்குச் சென்று அங்கு தங்கி மேற்படிப்பைத் தொடரவும் பணி வாய்ப்புகள் பெறவும் காரணமாக அமைந்தது.

தி.மு.க அரசை நாம் ஏன் `திராவிட மாடல் அரசு’ என்று சொல்கிறோம் என்பதற்கு. இது மிக முக்கியக் காரணம். நாம் படித்தோம் நல்ல வேலையில போய்ச் சேர்ந்தோம். இனிமேல் நம்ம வாழ்க்கை நம்ம குடும்பம் என்று இல்லாமல் இந்த வாய்ப்புக்கு திராவிட இயக்கம்தான் காரணம் என்பதை உணர்ந்து, நம்முடைய அயலக அணியில் இணைத்துக்கொண்டு பணியாற்றி வருகின்ற உங்களையெல்லாம் எவ்வளவு பாராட்டினாலும் போதுமானது அல்ல.

இன்றைக்கு நம்முடைய கழக அயலக அணி 37 நாடுகளில் அமைப்புகளை உருவாக்கி இருக்கிறது. துவங்கிய 3 வருடத்தில் 37 நாடுகளில் அமைப்புகளை உருவாக்கியிருக்கிறது என்றால், மிகப்பெரிய ஒரு சாதனை இது. இன்னும் அனைத்து நாடுகளிலும் பெருக வேண்டும்.

கடந்த ஆண்டு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் முதலீடுகள் ஈர்ப்பதற்காக வெளிநாடுகளில் சுற்றுப்பயணம் செய்த போது நம்முடைய அயலக அணி தமிழர்கள் தி.மு.கவின் மீது வைத்திருந்த, முதலமைச்சரிடம் நீங்கள் காட்டிய பாசத்தின் மூலம் தெரிந்து கொண்டோம்.

குக்கிராமங்கள் முதல் தலைமுறையாகப் படித்துப் பட்டம் பெற்று இன்று வெளிநாடுகளில் நல்ல வேலையில் அமரக்கூடிய வாய்ப்பினை ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு உருவாக்கிக் கொடுத்தது, நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு. ஆனால், வெளிநாடுகளில் இருக்கக் கூடிய ஒரு சில தமிழர்களின் மத்தியில், திராவிட இயக்கம் பற்றிய தவறான கருத்துக்களைத் திட்டமிட்டு பரப்புகின்றனர். அந்தப் பொய்ப் பிரச்சாரங்கள் பற்றி என்னை விட உங்களுக்குத் தெரியும். களத்தில் இருப்பது நீங்கள். அந்த அவதூறுகளுக்கு எல்லாம் உடனடியாகப் பதிலடி கொடுத்து நமது நியாயங்களை எடுத்துச் சொல்ல வேண்டியது உங்களுக்குள் கூடுதலான ஒரு கடமை. 37 நாடுகளில் இருக்கக்கூடிய நம்முடைய அயலக அணியின் அமைப்பு பறந்து விரிந்து அனைத்து நாடுகளுக்கும் செல்ல வேண்டும். அனைத்து நாடுகளிலும் அயலக அணியை நாம் பலப்படுத்த வேண்டும்.

### சிவா எம்.பி. தலைமையில் மீட்புக் குழு அமைப்பு!

உக்ரைன், ரஷ்யா போர் மூண்டபோது அதில் உள்ள நம்முடைய தமிழ்நாட்டு மாணவர்களை மீட்க, கழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தது. நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா அவர்களின் தலைமையில், ஒரு குழுவை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அமைத்தார்கள்.

அந்தக் குழு டெல்லியிலேயே முகாமிட்டிருந்தது. மீட்புப் பணிகளை உறுதி செய்தது. அந்தப் பணிகளில் அயலக அணிகளின் பங்களிப்பு மிக மிக முக்கியமானது. அதுமட்டுமல்ல இப்பொழுது, இஸ்ரேல் பாலஸ்தீன போரின்போது தமிழ்நாட்டு மாணவர்களை மீட்டு வரும் பணியை நம்முடைய கழக அரசு மேற்கொண்டது. அயலகத் தமிழர்களுக்குத் தமிழ்நாடு அரசு இந்த அளவுக்கு அக்கறையுடன் செயல்பட்டு வருகின்றது. இதுபோன்ற நம்முடைய அரசின் செயல்பாடுகளையும் நமது இயக்கத்தின் கொள்கைகளையும் வெளிநாட்டில் வசிக்ககூடிய மக்களுக்கு நீங்கள்தான் எடுத்துச் செல்ல வேண்டும். வெளிநாடுகளில் வசிக்ககூடியவர்கள் குறிப்பாக, இளைஞர்கள் சமூக வலைத்தளங்களின் மூலம்தான் நம் தமிழ்நாட்டின் அரசியலை தெரிந்து கொள்கிறார்கள். சமூக ஊடகங்களில் திராவிடத்திற்கு எதிரான கருத்துக்களைச் சங்கிகள் தொடர்ந்து பரப்பிக் கொண்டு வருகிறார்கள்.

பாசிச பா.ஜ.க பெயரளவில் மட்டும் இது போன்ற அவதூறுகளைப் பரப்புவது கிடையாது. மதத்தின் பெயராலும், ஜாதியின் பெயராலும், அவ்வளவு ஏன், தமிழின அடையாளத்தின் பெயராலும் கூட திராவிடத்தின் மீது அவதூறுகளைப் பரப்பிக் கொண்டு வருகிறார்கள். அவர்கள் எத்தனை முகமூடிகளைப் போட்டுக்கொண்டு வந்தாலும், அதையெல்லாம் முறியடிக்க, நமக்கு முகமூடிகள் தேவையில்லை.

தந்தை பெரியாருடைய முகம் போதும், பேரறிஞர் அண்ணாவின் எழுத்துக்கள் போதும், முத்தமிழறிஞர் கலைஞரின் பேச்சுகள் போதும். தகவல் தொழில்நுட்பம் வளர்ந்து இருக்கக்கூடிய காலம். அதிகமாக இருக்கக்கூடிய காலம் இது. இந்த நவீன காலத்தில், நீங்கள் எல்லாம் வெளிநாடுகளில் வாழ்ந்தாலும், நாம் எல்லோரும் அடிக்கடி கலந்துரையாடுகின்ற வாய்ப்பை நமக்கு இப்பொழுது இந்த இணையதளம் கொடுத்திருக்கின்றது. இது போன்ற வாய்ப்புகளை அடிக்கடி பயன்படுத்திக் கருத்தரங்குகளை நடத்துங்கள் கலந்துரையாடல் கூட்டங்களை நடத்துங்கள். அப்பொழுதுதான் நம் மீது எங்கே அவதூறு கிளம்பினாலும் அவற்றை அங்கேயே நம்மால் முறியடிக்க முடியும். திராவிட இயக்கம் பற்றி நிறைய நூல்கள் வருகின்றன இப்பொழுது சமீபத்தில், இளைஞர் அணியின் சார்பில், முத்தமிழறிஞர் பதிப்பகத்தின் வாயிலாக ஒன்பது புத்தகங்களை வெளியிட்டிருக்கிறோம். அவற்றையெல்லாம் வாங்கிப் படியுங்கள். அவற்றை நீங்கள் வசிக்கக்கூடிய நாடுகளில் உள்ள பெரிய பெரிய பல்கலைக்கழகங்களுக்கு பரிசாகக் கொடுங்கள். அப்போதுதான் நம்முடைய திராவிட இயக்கம் பற்றி அந்தப் பல்கலைக்கழகங்களில் ஒரு பேசு பொருளாக இருக்கும் அதைப்பற்றி விவாதிப்பார்கள். அதைப் பற்றிப் பேசுவார்கள்.

### வெளிநாடுவாழ் தமிழர்களுக்கு கழக அயலக அணி உதவி!

நம் ஊரில் இருந்து இப்பொழுது பல பேர் வெளிநாடுகளுக்குத் தொழிலாளர்களாகவும் செல்கிறார்கள். அங்கு இருக்கக்கூடிய தொழிலாளர்கள் சட்டங்கள் குடியுரிமை விதிமுறைகள் பற்றிப் போதுமான விழிப்புணர்வு இப்போது இல்லை. சில நேரங்களில் வெளிநாடுகளில் உள்ள நிறுவனங்கள் ஏமாற்றும் பொழுது அவர்களுடைய ஒற்றை நம்பிக்கையாக நம்முடைய அயலக அணி செயல்பட்டு வருகின்றது. குறிப்பாக வெளிநாட்டில் மருத்துவ உதவி தேவைப்படும் பொழுது தமிழ்நாட்டு மக்களுக்கு ஏராளமான உதவிகளை நம்முடைய அயலக அணி செய்துள்ளது.

உடல்நிலை சரியில்லாமல் போனாலும், வேறு சில காரணங்களாலும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் வெளிநாட்டில் உயிரிழக்க நேர்ந்தால் அவருடைய உடலை தமிழ்நாட்டிற்குக் கொண்டு வருவது மிகப்பெரிய போராட்டமாக இருந்தது. நம்முடைய அமைப்புச் செயலாளர் குறிப்பிட்டுப் பேசினார்கள். முன்பெல்லாம் வெளிநாட்டிற்குப் படிக்கப் போனால் அங்கு எதிர்பாராத விதமாக இறந்தால் இறந்த உடலை, இங்கு வீட்டுக்கு, சொந்த ஊருக்குக் கொண்டு வருவதற்கு எட்டு மாதத்திலிருந்து ஒரு வருடம் கூட ஆகியிருக்கிறது. ஆனால், நம்முடைய அயலக அணி செயல்பாட்டிற்கு வந்த பிறகு, ஏதாவது அசம்பாவிதம் நடந்தால் இறந்தவரின் உடலை குறைந்தது 10 நாட்களுக்குள் அவர்களின் உறவினர்களிடம் கொண்டு சேர்த்திருக்கிறோம். இந்தப் பெருமை நம்முடைய அயலக அணிக்கு உண்டு.

இந்த அணியின் மனிதநேய பணிகளைப் பற்றி ஒரு உதாரணத்திற்குக் குறிப்பிட விரும்புகின்றேன். ஏனென்றால் அதில் எனக்கும் ஒரு சம்பந்தம் உண்டு. ஒருமுறை 2022 ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். சமூக வலைதளத்தில் எனக்கு ஒருவர் கோரிக்கை வைக்கிறார். அமெரிக்காவில் இருந்து. ஒரு மெசேஜ் பண்றார் அவருடைய இரண்டு வயது குழந்தைக்கு உடம்பு சரியில்லை. அமெரிக்காவில் மருத்துவச் சேவைக்கான கட்டணம் மிக மிக அதிகம். அவர் தன்னுடைய முழுப் பணத்தையும் செலவு செய்து விட்டார். அதனால் ஒரு முடிவு எடுத்து இந்தியா திரும்பி விடலாம் என்று கிளம்பி வருகிறார்கள்.

வரும்போது துருக்கி நாட்டிற்கு மேல் விமானம் பறந்து கொண்டிருக்கும் பொழுது குழந்தைக்கு மிகவும் உடம்பு சரியில்லாமல் போகிறது. அங்கே விமானத்தில் இருக்கக்கூடிய ஒரு மருத்துவர், உடனே விமானத்தைத் தரையிறக்க வேண்டும். உடனே, இந்தக் குழந்தையை எமர்ஜென்சி வார்டில் சேர்க்க வேண்டும் என்று சொல்கிறார்கள். உடனே விமானத்தை இஸ்தான்பூல் விமான நிலையத்தில் தரை இறக்குகிறார்கள். அங்கே இருக்கக்கூடிய ஒரு தனியார் மருத்துவமனையில் அனுமதித்து ட்ரீட்மென்ட் கொடுக்கப்படுகிறது. இதையெல்லாம் சொல்லி, எனக்கு ஒரு குறுஞ்செய்தி அனுப்பினார். உடனே, இந்த விஷயத்தை நம்முடைய அணியின் செயலாளர் திரு.அப்துல்லா அவர்களை அழைத்து நான் சொன்னேன். உடனே அயலக அணியின் மூலமாக அனைத்து உதவிகளும் செய்யப்பட்டன.

15 நாட்கள் அந்தக் குழந்தைக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு அதன் பிறகு, அந்தக் குழந்தை சென்னைக்குத் திரும்பி வருவதற்கும் அந்த அப்பாவிற்கும் குழந்தைக்கும் காசு இல்லை. நான் உடனே இந்தக் கோரிக்கையை நம்முடைய முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களிடம் கொண்டு போய்ச் சொன்னேன். சொன்ன உடனே கழகத் தலைவர் அவர்கள் 10 லட்சம் ரூபாய் அறிவித்து, அவர்கள் மீண்டும் இந்தியா வருவதற்கான அனைத்து உதவிகளையும் செய்தது நம்முடைய கழகத்தின் அயலக அணிதான். அந்தக் குழந்தையின் பெயர் சந்தியா. அப்பாவின் பெயர் காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த மனோஜ் அவர்கள்.

### வெளிநாடுகளில் தி.மு.க.வின் முகம்!

அதேபோல் வெளிநாடுகளில் தி.மு.க கழகத்தின் முகமாக நீங்கள் தான் செயல்பட்டு கொண்டிருக்கிறீர்கள். உங்கள் பணிகளை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து கூர்ந்து கவனித்துக் கொண்டு வருகிறார்கள். அதேபோல் நானும் உங்கள் அணிகளின் அனைத்து பணிகளையும் கவனித்துக் கொண்டு வருகிறேன். கலைஞருடைய பிறந்தநாள் நம்முடைய தலைவருடைய பிறந்தநாள் என்னுடைய பிறந்தநாள் அனைத்தையும் சிறப்பான வகையில் மக்களுக்குப் பயனளிக்கக் கூடிய வகையில் சிறப்பாக நிகழ்ச்சிகள் எல்லாம் நடத்திக் கொண்டு வருகிறீர்கள்.

உங்களுக்கு என்னுடைய வாழ்த்துகள். உங்களுடைய கழகப் பணி உண்மையிலேயே போற்றுதலுக்கு உரியது. உங்களுக்கு உரிய அங்கீகாரம் நிச்சயம் சரியான நேரத்தில் கிடைக்கும் என்கிற உறுதியை இந்த நேரத்தில் உங்களுக்கு அளிக்கிறேன்.

இந்த நேரத்தில் உங்களுக்கு இன்னொரு கோரிக்கை. இளைஞர் அணி மாநாடு வருகின்ற 21ஆம் தேதி சேலத்தில் நடைபெற இருக்கின்றது. நீங்களெல்லம் உங்களுடைய ஊரிலிருந்து சமூக வலைத்தளங்கள் மூலமாக நம்முடைய இளைஞர் அணி மாநாடு ஏன் நடத்தப்படுகிறது, நம்முடைய மாநாட்டின் பெயரே மாநில உரிமைகள் மீட்பு மாநாடு. இங்குச் சிறப்பான தீர்மானங்கள் நிறைவேற்றி இருக்கிறீர்கள். அதற்கு என்னுடைய வாழ்த்துக்கள்.

நம்முடைய மாநாடு ஏன் நடத்தப்படுகிறது நம்முடைய மாநில உரிமைகள் எல்லாம் பறிக்கப்படுகிறது அதற்கு நாம் எப்படி எல்லாம் போராட்டம் பண்ணிக் கொண்டிருக்கிறோம். இதையெல்லாம் உலகத்தில் வாழ்கின்ற அத்தனை தமிழர்களிடத்திலும் நீங்கள் தான் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும். நீங்கள் செய்வீர்கள் என்று அந்த நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

அதேபோல இங்கே அணியின் செயலாளர் அப்துல்லா அவர்கள் எனக்கு நன்றி சொன்னார். அவர் ஒரு வார்த்தை சொன்னார் நான் இல்லாமல் அவர் இல்லை என்று என்னைச் சொன்னார். அதை அவருக்கே நான் திருப்பிக் கொடுத்துவிடுகிறேன். அவருக்கு மட்டும் இல்லை இங்கு இருக்கக்கூடிய உங்கள் அத்தனை பேருக்கும் நான் திருப்பிக் கொடுத்து விடுகிறேன். நீங்கள் இல்லாமலும் நான் இல்லை.

### வீடு வீடாகத் தேர்தல் பிரச்சாரம்!

பல பேருக்குத் தெரியாது நானும் அப்துல்லாவும் கிட்டத்தட்ட ஒரு 25 வருட கால நட்பு எங்களுடையது. அப்போது எல்லாம் செல்போன் கிடையாது. நானும் அப்துல்லாவும் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களும் 1996 ஆம் ஆண்டு தேர்தல் பிரச்சாரம் செய்ய வீடு வீடாக ஆயிரம் விளக்குப் பகுதியில் தெருத்தெருவாக நான் ஒரு வீட்டையும் விடமாட்டேன் எல்லா வீட்டிற்கும் ஏறி விடுவேன்.

அப்துல்லா அவர்களும் மகேஷ் அவர்களும் `இந்த வீட்டுக்குக் கீழே ரெஸ்ட் எடுக்கிறேன். இந்த வீட்டிற்கு நீங்கள் போங்க அடுத்த வீட்டில் நான் இறங்கி வந்து விடுவேன். ஒருத்தர் மாற்றி ஒருவர் பிரச்சாரம் செய்வோம், அப்போது ஆரம்பித்த பிரச்சாரம் நான் இதுவரைக்கும் நன்றி சொன்னது கிடையாது. 2019 நாடாளுமன்றத் தேர்தல் முதன் முறையாக தலைவர் அவர்கள் என்னை அழைத்து, நீ தமிழ்நாடு முழுக்க பிரச்சாரத்திற்குப் போ அப்படி என்று சொன்னார். கூட துணைக்கு ஒருத்தர் வேண்டும் இல்லையா, அப்போது நான் என்னுடன் அழைத்துப்போனது 40 நாள் தமிழ்நாட்டில் 40 தொகுதிகளுக்கும் சென்று பிரச்சாரம் பண்ணி என்னுடன் வந்தது சகோதரர் அப்துல்லா அவர்கள்தான். அதுமட்டுமல்ல அவர்தான் எனக்கு பேசுவதற்கான முக்கிய குறிப்புகளைத் தருவார். இந்த இடத்தில் இந்த ஊரில் இந்தப் பிரச்சினை இருக்கு. இதைப் பேசுங்கள் என்று அந்தக் குறிப்பு எல்லாம் எனக்குக் கொடுப்பார். அதற்கு இதுவரைக்கும் எந்த மேடையிலும் இதுவரை நன்றி சொல்லவில்லை. அதற்கு இந்த மேடையைத் தவிர இன்னொரு சிறப்பான மேடை கிடைக்குமா என்று எனக்குத் தெரியவில்லை. எனவே அவருக்கு இந்த நேரத்திலே என்னுடைய நன்றியை அவருடைய குடும்பத்தினருக்கெல்லாம் என்னுடைய நன்றியையும் வாழ்த்துகளையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அயலக அணி இன்னும் பல சாதனைகள் படைக்கட்டும், உலகெங்கும் பரவட்டும் என்று கூறி இங்கே மனோ ராஜா சொன்னது போல வருகின்ற நாடாளுமன்ற தேர்தல் மிக மிக முக்கியமான தேர்தல். நம்முடைய இந்திய நாட்டைக் காப்பாற்ற வேண்டும் என்றால், நம்முடைய இந்தியா கூட்டணியை வெற்றி பெற வைக்க வேண்டும் என்பதைக் கூறிக்கொண்டு அந்தத் தேர்தல் பணிகளை எல்லாம் நீங்கள் விரைவில் ஆர்வத்தோடு எழுச்சியோடு ஈடுபட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு மீண்டும் இந்த அணிக்கு என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்து வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

முன்னதாக கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமை உரையாற்றினார். அணியின் செயலாளர் புதுக்கோட்டை எம்.எம். அப்துல்லா எம்.பி. வரவேற்புரையாற்றினார், அணியின் தலைவர் கலாநிதி வீராசாமி எம்.பி. நன்றியுரையாற்றினார்.

கூட்டத்தில் கழகக் கொள்கை பரப்புச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா, அயலக அணியின் இணைச் செயலாளர்கள் வழக்கறிஞர் புகழ்காந்தி, வழக்கறிஞர் மனுராஜ் சண்முகசுந்தரம், துணைச் செயலாளர்கள் உமா ராணி, விஜயன் ராமகிருஷ்ணன், வழக்கறிஞர் கன்னிகை ஸ்டாலின், வழக்கறிஞர் பரிதி இளம் சுருதி, முத்துவேல் ராமசாமி, சேகர் மனோகரன், குமரி பாபுவில்பிரெட், எஸ்.கே.பி.கருணா, கோவிலெனின், கீரை தமிழ்ராஜா, பரந்தாமன் எம்.எல்.ஏ., காசி முத்துமாணிக்கம், இறையன்பன் குத்தூஸ், வி.பி.மணி, மதன் மோகன், மருத்துவர் யாழினி உள்பட பலரும் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோயில் ஒன்றியம் ஆறுபாதி ஊராட்சியில் நடைப்பெற்ற விழாவில் பொங்கல் திருநாளை முன்னிட்டு குடும்ப அட்டைதாரர்களுக்குப் பொங்கல் பரிசுத் தொகுப்பை சுற்றுச் சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினார். உடன் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும். பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம். முருகன், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் எம். ராமலிங்கம், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர் செல்வம், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ. பி.மகாபாரதி, ஊராட்சி தலைவர் உமா மகேஸ்வரி சங்கர், செம்பனார்கோயில் ஒன்றியக் குழுத் தலைவர் நந்தினி ஸ்ரீதர் மற்றும் பலர் உள்ளனர்.



ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி, திண்டுக்கல் மாவட்டம், வத்தலக்குண்டு பேரூராட்சியில் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் பணிகளை 10.01.2024 அன்று தொடங்கி வைத்தார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி , பழனி சட்டமன்ற உறுப்பினர் இ.பெ.செந்தில்குமார், கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் கோ.காந்திராஜன், நிலக்கோட்டை வட்டாட்சியர் தனுஷ்கோடி உட்பட பலர் உள்ளனர்.

### மூத்த குடிமக்கள் பயன்பெறும் வகையில்

# அறுபடை வீடுகளுக்கு கட்டணமில்லாமல் ஆண்டிற்கு 5 முறை ஆன்மீகச் சுற்றுலா!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!


சென்னை, ஜன.12-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழி காட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் (10.01.2024) ஆணையர் அலுவலகத்தில் திருக்கோயில்களில் பணியாற்றி ஓய்வு பெற்ற 2,646 அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பொங்கல் கொடை வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்து, 10 நபர்களுக்கு ரூ.1,000/ க்கான காசோலைகளை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, தமிழ் கடவுள் முருக பெருமானின் அறுபடை வீடுகளான திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி, சுவாமிமலை, திருத்தணி, பழமுதிர்சோலை ஆகிய திருத்தலங்களுக்கு ஒரேமுறையாக மூத்த குடிமக்கள் தரிசனம் செய்திடும் வகையில் ஆன்மிக சுற்றுலா ஏற்பாடு செய்வது குறித்த ஆலோசனைக் கூட்டம் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் தலைமையில் நடைபெற்றது.

பின்னர் அமைச்சர் பி.கே. சேகர்பாபு செய்தியாளர் களிடம் தெரிவித்ததாவது :

2023 2024 ஆம் ஆண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறை மானிய கோரிக்கையில் 249 அறிவிப்புகளை வெளியிட்டிருந்தோம். அதில் 40 ஆவது அறிவிப்பான திருக்கோ யில்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பொங்கல் கொடை வழங்கப்படும் என அறிவிப்பினை நிறைவேற்றிடும் வகையில் இன்றைய தினம் ஓய்வுபெற்ற அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பொங்கல் கொடை வழங்கும் திட்டம் தொடங்கி வைத்து, ரூ.1,000/க்கான காசோலையினை வழங்கினோம்.



இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு, முதலமைச்சர் அவர்கள் அரசின் சார்பில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றிருந்தாலும் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் நடைபெற்ற 58 நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு சிறப்பு செய்திருக்கிறார். இந்து சமய அறநிலையத்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் அதிக எண்ணிக்கையிலான நிகழ்ச்சிகளில் பங்கேற்ற முதல்வராக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் திகழ்கிறார். இந்து சமய அறநிலையத்துறையின் அமைச்சர் என்ற வகையில் நானும் 304 நிகழ்ச்சிகளில் பங்கேற்றுள்ளேன்.

முதலமைச்சர் அவர்களின் யநல்வழிகாட்டுதலின் படி, தமிழ் கடவுள் என்று போற்றப்படுகின்ற முருகப் பெருமான் வீற்றிருக்கும் அறுபடை வீடுகளான திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி, சுவாமிமலை, திருத்தணி, பழமுதிர்சோலை ஆகியவற்றிற்கு மூத்த குடி மக்கள், ஒரேமுறையாக சென்று தரிசனம் செய்திட சிரமப்படுகிறார்கள் என்பதனை கருத்தில் கொண்டு, இந்த ஆறு திருக்கோயில்களுக்கும் கட்டணமில்லாமல் 60 வயது முதல் 70 வயதிற்குட்பட்ட 200 நபர்களை ஆண்டிற்கு 5 முறை அதாவது 1,000 பக்தர்களை அழைத்து சென்று தரிசனம் செய்து வைத்திட இந்து சமய அறநிலையத்துறை புதிய முயற்சியை மேற்கொண்டுள்ளது. அதன்படி, முதற்கட்ட அறுபடை வீடு ஆன்மிக சுற்றுப் பயணம் வருகின்ற 28.01.2024 அன்று தொடங்க இருக்கின்றது. இதற்கான விண்ணப்பத் தினை நாளை (11.01.2024) முதல் துறையில் இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம். தகுதியுடைய 200 விண்ணப்ப தாரர்கள் முதற்கட்ட பயணத்தில் அழைத்துச் செல்லப்படுவர். ஏனைய தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் அடுத்தடுத்த ஆன்மிக பயணங்களில் அழைத்து செல்ல முன்னுரிமை வழங்கப்படும்.

இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில், ஏற்கனவே மானசரோவர், முக்தி நாத் மற்றும் இராமேசுவரம் - காசி ஆன்மிக பயணங்கள் செயல்படுத்தப்பட்டு பக்தர்கள் பயன்பெற்று வருகின்றனர். இராமேசுவரம் காசி ஆன்மிக பயணத்திற்கு இந்தாண்டு 300 நபர்கள் அழைத்து செல்லப்பட உள்ளனர். இதற்காக தமிழ்நாடு அரசு ரூ.75 லட்சத்தை மானியமாக வழங்கியுள்ளது.


பழனி, தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் தைப்பூச விழாவினை சிறப்பாக நடத்திட ஏதுவாக முன்னேற்பாடு பணிகள் தொடர்பாக அனைத்து துறை அலுவலர்களுடன் ஒருங்கிணைப்பு கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. பணி சுமை அதிகம் இல்லாத திருக்கோயில்களின் அலுவலர்கள் சிறப்பு பணியில் நியமிக்கப்பட உள்ளனர். சிறப்பு பேருந்துகள் இயக்கம் மற்றும் பக்தர்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்திட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு, பழனியில் தைப்பூசத்திற்கு 10 நாட்களுக்கு நாள்தோறும் 10,000 பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கும் திட்டம் செயல்படுத் தப்பட்டுள்ளது. அறுபடை வீடு திருக்கோயில்களிலும் தைப்பூசத்திற்கு சிறப்பு தரிசன கட்டணத்தை ரத்து செய்வது தொடர்பாக கலந்தாலோசித்து முடிவெடுக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர் பாபு தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சிகளில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத் துறை சிறப்பு பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர்கள் அ.சங்கர், பேரூர் ஆதீனம் சீர்வளர்சீர் மருதாச்சல அடிகளார், சிரவை ஆதினம் சீர் வளர்சீர் குமரகுருபர சுவாமிகள், மயிலம் பொம்மபுர ஆதீனம் சீர்வளர்சீர் சிவஞானபாலய தேசிகர், உயர் மட்ட ஆலோசனை குழு உறுப்பினர்கள் மு.பெ.சக்தியவேல் முருகனார், திருமதி தேச மங்கையர்க்கரசி, ராம சுப்பிரமணி, திருமதி ந.திருமகள், திருமதி சி.ஹரிப்ரியா மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**ஏ.எம். ராமசாமி**
**சனவரி 12 (2012)**



கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

சேலம் மாவட்டம் – ஆத்தூர் நகரச் செயலாளராக நான்கு முறையும், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்து கழக வளர்ச்சிக்குப் பாடுபட்டவர்.

1989, 1996 ஆகிய இரண்டு முறை ஆத்தூர் தொகுதியில் கழகத்தின் சார்பில் சட்டமன்ற உறுப்பினராகப் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று பலமுறை சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**


### பெரம்பலூர் மாவட்டம்

## பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கல்!

### குன்னம்.சி.இராஜேந்திரன்- எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

பெரம்பலூர், ஜன.12-

பெரம்பலூர் மாவட்டத்தில், தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு தமிழக அரசு, ஆயிரம் ரூபாய் பணத்துடன் பொங்கல் பரிசுத் தொகுப்பை அறிவித்துள்ளது. இதில் பெரம்பலூர் மாவட்டத்தில் செயல்படும் 282 நியாய விலைக் கடைகளுடன் இணைக்கப்பட்டுள்ள 1,89,912 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசாக 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை, 1 முழு நீளக் கரும்பு மற்றும் ரூ.1000/ ரொக்கம் ஆகியவை வழங்கும் நிகழ்ச்சி பெரம்பலூர் நகராட்சிக் குட்பட்ட அரணாரை நியாய விலைக் கடையில் நடைபெற்றது.

இதில் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், மாவட்ட ஆட்சியர் க.கற்பகம் ஆகியோர் கலந்து கொண்டு பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் நிகழ்வை துவக்கி வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து பொதுமக்களுக்கு ரூபாய் ஆயிரத்துடன் பொங்கல் பரிசு தொகுப்பை, ஒரு முழு நீள கரும்புடன் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கினார்கள்.

நிகழ்ச்சியின் போது மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் குன்னம் சி.இராஜேந்திரன், நகராட்சி தலைவர் அம்பிகா ராஜேந்திரன், ஒன்றிய குழு தலைவர் மீனா அண்ணாதுரை, நகராட்சி துணைத் தலைவர் து. ஹரிபாஸ்கர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.


### தமிழ்நாட்டில்

# குறு, சிறு, நடுத்தர நிறுவனங்களை மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

## மாநிலங்களவையில் இரா.கிரிராஜன் கேள்வி!

புதுடெல்லி, ஜன. 12-

2020 க்குப் பிறகு ஆயிரக்கணக்கான MSME யூனிட்கள் மூடப்பட்டன என்பது உண்மையா, அப்படியானால், அதன் விவரங்கள்; இன்றைய நிலவரப்படி, மாநில வாரியாக, நாட்டில் பதிவு செய்யப்பட்ட மொத்த MSME, ஜி.எஸ்.டி வரிவிதிப்பு முறையின் கீழ் தமிழ்நாட்டில் குறிப்பாக குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களை ஆதரிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் ஒன்றிய அரசு ஏதேனும் பயனுள்ள நடவடிக்கைகளை எடுத்துள்ளதா; அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் இது தொடர்பாக ஒதுக்கப்பட்ட மொத்த நிதி; மற்றும் நாட்டில் சிறப்பாகச் செயல்படும் சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ஊக்கத் தொகை மற்றும் இதர ஊக்குவிப்புகளை வழங்க ஒன்றிய அரசு எடுத்துள்ள பல்வேறு நடவடிக்கைகள் என்ன? என்பதை மாநிலங்களவையில் உறுப்பினர் இரா.கிரிராஜன் எழுத்து மூலம் எழுப்பிய கேள்விக்கு



ஒன்றிய குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறை இணையமைச்சர் பானு பிரதாப் சிங் வர்மா அளித்த பதில் வருமாறு.

உதயம் பதிவு போர்ட்டலின்படி, 2020-21ல் மூடப்பட்ட குறு, சிறு (MSME) மற்றும் நடுத்தர நிறுவனங்களின் எண்ணிக்கை 175, 2021-22ல் 6,222, 2022-23ல் 13,290, 2023-24 12,790. மொத்தம் 32,477 (MSME) ஆகும்.

எம்.எஸ்.எம்.இ அமைச்சகம், அதன் பல்வேறு திட்டங்கள், திட்டங்கள் மற்றும் கொள்கை முன்முயற்சிகள் மூலம், தமிழ்நாடு உட்பட நாட்டில் உள்ள எம்.எஸ். எம்.இ.க்களை ஜி.எஸ்.டி வரிவிதிப்பு முறையின் கீழ் ஆதரிக்கிறது மற்றும் மேம்படுத்துகிறது. பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (பி. எம்.இ.ஜி.பி), குறு மற்றும் சிறு நிறுவனங்களுக்கான கடன் உத்தரவாதத்திட்டம், குறு மற்றும் சிறு தொழில்கள் - கிளஸ்டர் மேம்பாட்டுத் திட்டம் (எம்.எஸ்.இ-சி.டி.பி), தொழில்முனைவோர் திறன் மேம்பாட்டுத் திட்டம் (ஈ.எஸ்.டி.பி), கொள்முதல் மற்றும் சந்தைப்படுத்தல் ஆதரவுத் திட்டம் (பி.எம்.எஸ்.எஸ்), சர்வதேச ஒத்துழைப்புத் திட்டம், கருவி அறைகள், தொழில்நுட்ப மைய அமைப்பு திட்டம், தேசிய எஸ்.சி / எஸ்.டி ஹப் (என். எஸ்.எஸ்.எச்), எம்.எஸ். எம்.இ சாம்பியன்கள் ஆகியவை எம்.எஸ்.எம்.இ அமைச்சகத்தின் திட்டங்கள் / திட்டங்களில் அடங்கும். சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் அமைச்சகம் மத்திய அரசின் திட்டங்களைச் செயல்படுத்துகிறது. மாநில வாரியாக நிதி ஒதுக்கப்படுவதில்லை. எம். எஸ்.எம்.இ அமைச்சகம் தேசிய விருதுத் திட்டத்தின் மூலம் நாட்டில் சிறப்பாக செயல்படும் எம்.எஸ்.எம்.இ நிறுவனங்களுக்கு ஊக்கத் தொகை மற்றும் ஊக்கத்தை வழங்குகிறது, இதில் அமைச்சகம் எம்.எஸ்.எம்.இ.க்களின் புதுமையான முயற்சிகளை ஊக்குவிக்கிறது மற்றும் எம். எஸ்.எம்.இ. களின் தரமான வளர்ச்சியின் பரந்த ஆர்வத்தில் அவர்களின் உணர்வை ஊக்குவிக்கிறது.

இது தவிர, எம்.எஸ். எம்.இ நிலையான (இசட். இ.டி) சான்றிதழ் திட்டம் ஒரு மதிப்பீட்டு மாதிரியை அடிப்படையாகக் கொண்டது, இது எம்.எஸ். எம்.இ.க்கள் தரத்தை மேம்படுத்தவும், நிலைத்தன்மையை நோக்கி நகரவும் அவற்றின் செயல்முறைகள் மற்றும் அமைப்புகளை மேம்படுத்த ஊக்குவிக்கும் பல்வேறு அளவுருக்களை உள்ளடக்கியது. வெண்கலம், வெள்ளி மற்றும் தங்க சான்றிதழ் நிலைகளில் பல்வேறு அளவுருக்களை மதிப்பீடு செய்வதன் மூலம் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் பயனடைகின்றன.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் தமது பதிலில் கூறியுள்ளார்.

### தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சியில்

# உலக முதலீட்டாளர்கள் மாநாடு பெரும் பாய்ச்சலாக இருக்கும்!

## 'தினத்தந்தி' தலையங்கத்தில் முதல்வருக்குப் பாராட்டு!

சென்னை, ஜன. 12-

தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை 2030 ஆம் ஆண்டிற்குள் ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலராக உயர்த்த இலக்கு நிர்ணயித்து, உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தி ஐந்தரை லட்சம் கோடி ரூபாய் முதலீட்டை பெற்றதன் மூலம் தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி பெரும் பாய்ச்சலாக இருக்கும் என தினத்தந்தி நாளேடு 10.1.2024 அன்று தலையங்கத்தில் பாராட்டியுள்ளது.

அத்தலையங்க விவரம் வருமாறு:-

2030 ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலராக (ரூ.83 லட்சம் கோடி) உயர்த்த இலக்கு நிர்ணயித்து, அதை நோக்கியே அனைத்து முயற்சிகளையும் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் எடுத்து வருகிறார். அந்த இலக்கை அடைவது என்பது சாதாரண காரியமல்ல. அதற்கு தற்போது ஆண்டுக்கு 10 சதவிகிதம் அளவுக்கு இருக்கும் வளர்ச்சி 16.5 சதவீதமாக உயரவேண்டும் என்று 'டெலாயிட்' அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. தனியார் பங்களிப்பு இதற்கு மிகமிக இன்றியமையாதது.

தனியார் பங்களிப்பு வசதிகளை ஈர்க்கும் வகையில், தமிழக அரசு கடந்த 7, 8 ஆம் தேதிகளில் தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை சென்னையில் நடத்தியது. இந்த மாநாட்டில் மூலமாக ரூ.5½ லட்சம் கோடி முதலீட்டை ஈர்க்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. தலைமைத்துவம், நீடித்த நிலைத்தன்மை மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்ற கருப்பொருள்களை அடிப்படையாகக் கொண்டு இந்த மாநாடு நடத்தப்பட்டது. அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான், ஆஸ்திரேலியா, பிரான்ஸ், ஜெர்மனி, டென்மார்க், சிங்கப்பூர், தென் கொரியா ஆகிய 9 நாடுகள் பங்குதாரர் நாடுகளாகவும், மேற்கு ஆஸ்திரேலியா மற்றும் தைபே பொருளாதார மற்றும் கலாச்சார மையம் ஆகியவை சர்வதேச பங்குதாரர் களாகவும் தமிழ்நாடு அரசுடன் இணைந்து செயல்பட்டன.

7 நாடுகள் இந்த மாநாடு கண்காட்சியில் தங்களது சர்வதேச அரங்குகளை அமைத்திருந்தன. இதுமட்டுமல்லாமல், 35க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த முன்னணி நிறுவனங்களின் பிரதிநிதிகளும், இந்திய தொழிலதிபர்கள், தலைமை நிர்வாகிகளும் கலந்து கொண்டனர். இதுவரையில் நடந்த 2 முதலீட்டாளர்கள் மாநாட்டையும் விட இந்த மாநாடு மிகப் பெரிய வெற்றியைப் பெற்றுள்ளது. தமிழ்நாடு அரசு நிர்ணயித்த இலக்கையும் தாண்டி ரூ.6 லட்சத்து 64 ஆயிரத்து 180 கோடி அளவுக்கு முதலீடுகளை ஈர்க்கும் வகையில், 631 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. கூடுதலாக ரூ.1 லட்சத்து 14 ஆயிரத்து 180 கோடி முதலீடு கிடைத்ததன் மூலம் இலக்கையும் மிஞ்சி




சாதனை படைத்துவிட்டது. இந்த ஒப்பந்தங்கள் மூலம் 14 லட்சத்து 54 ஆயிரத்து 712 பேருக்கு நேரடியாகவும், 12 லட்சத்து 35 ஆயிரத்து 945 பேருக்கு மறைமுகமாகவும் என மொத்தம் 26 லட்சத்து 90 ஆயிரத்து 657 வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட உள்ளன.

தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு, வர்த்தகத்துறை, எரிசக்தித் துறை, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, தகவல் தொழில் நுட்பத் துறை, டிஜிட்டல் சேவைகள் துறை மற்றும் பெருந் தொழிற்சாலைகளுக்கு வலுவான விற்பனையாளர் தளத்தை வழங்கும் குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் சார்பாகவே இந்த முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன.

குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், பெரிய நிறுவனங்களான டாட்டா பவர் நிறுவனம் ரூ.70,800 கோடிக்கும், அதானி நிறுவனம் ரூ.42,768 கோடிக்கும், செம்ப்கார்ப் நிறுவனம் ரூ.37,538 கோடிக்கும், வின் பாஸ்ட் நிறுவனம் ரூ.16 ஆயிரம் கோடிக்கும், டாட்டா எலெக்ட்ரானிக்ஸ் நிறுவனம் ரூ.12,082 கோடிக்கும், ஜெ.எஸ். டபிள்யூ. நிறுவனம் ரூ.12 ஆயிரம் கோடிக்கும் முதலீடு செய்ய இருக்கிறது.

இதனால், தமிழ்நாடு அரசு நிர்ணயித்துள்ளபடி, குறைந்தபட்சம் 75 சதவீத ஒப்பந்தங்கள் செயல்பாட்டுக்கு வந்துவிடும் என்ற வகையில், இந்த மாநாடு தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் பெரும் பாய்ச்சலாக இருக்கும் என்று சொன்னால், அது மிக மிக சாலப்பொருத்தமானதாக அமையும். புதிதாக உருவாகப்போகும் வேலைவாய்ப்புகளால் லட்சக்கணக்கான இளைஞர்களின் குடும்பங்களில் ஒளிவிளக்கு ஏற்றப்படும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.



நாகை மாவட்டம், நாகையில் நடைப்பெற்ற விழாவில் பொங்கல் திருநாளை முன்னிட்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பை நாகை மாவட்டக் கழகச் செயலாளரும் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன், நாகை மாவட்ட ஆட்சித் தலைவர் ஜானிடாம் வர்கீஸ் ஆகியோர் வழங்கினார்கள் உடன் நாகை நகரக் கழகச் செயலாளர் இரா. மாரிமுத்து. நாகூர் நகரத் கழகச் செயலாளர் எம்.ஆர்.செந்தில்குமார் மற்றும் பலர் உள்ளனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (10.01.2024) விளையாட்டுத் துறையில் தலைசிறந்து விளங்கும் பயிற்சியாளருக்கு ஒன்றிய அரசால் வழங்கப்படும் உயரிய விருதான துரோணாசாரியா விருது பெற்ற ஆர்.பி.ரமேஷ் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார். அப்போது அவருக்கு அமைச்சர் அவர்கள் நினைவுப் பரிசினை வழங்கினார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, உடனிருந்தார்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (10.01.2024) விளையாட்டுத் துறையில் தலைசிறந்து விளங்கும் வீரர், வீராங்கனைகளுக்கு ஒன்றிய அரசால் வழங்கப்படும் உயரிய விருதான அர்ஜுனா விருது பெற்ற செஸ் வீராங்கனை செல்வி. ஆர். வைஷாலி நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். அப்போது அவருக்கு அமைச்சர் அவர்கள் நினைவுப் பரிசினை வழங்கினார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, உடனிருந்தார்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (10.01.2024) 'சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் 2023' போட்டியில் வெற்றி பெற்ற செஸ் வீரர் குகேஷ் நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். அப்போது அவருக்கு அமைச்சர் அவர்கள் நினைவுப் பரிசினை வழங்கினார். இந்நிகழ்வில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா உடனிருந்தார்.

### இ.பெ.செந்தில்குமார் எம்.எல்.ஏ. முன்னிலை!

# திண்டுக்கல் மாவட்டம் - வத்தலக்குண்டில் ரூ.1000 - பொங்கல் தொகுப்பு!

## அமைச்சர் இ.பெரியசாமி தொடங்கி வைத்தார்!

திண்டுக்கல், ஜன.12-

ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி மாவட்ட ஆட்சித்தலைவர் பூங்கொடி தலைமையில், பழனி சட்டமன்ற உறுப்பினர். இ.பெ.செந்தில்குமார் ஆகியோர் முன்னிலையில், வத்தலக்குண்டு பேரூராட்சியில் குடும்ப அட்டைதாரர்களுக்கு ரொக்கம் ரூ.1000 மற்றும் பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் பணிகளைத் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் இ.பெரியசாமி தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் 2 கோடியே 19 இலட்சம் குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் ரொக்கப் பணம் ரூ.1000/, 1 கிலோ பச்சரிசி மற்றும் சர்க்கரையுடன், ஒரு முழு நீளக்கரும்புடன் பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் பணிகளைத் தொடங்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து திண்டுக்கல் மாவட்டத்தில் கூட்டுறவுத்துறையின் வாயிலாக இயங்கும் 1004 நியாய விலைக்கடைகளும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் வாயிலாக இயங்கும் 19 நியாயவிலைக்கடைகளும், மகளிர் சுய உதவிக் குழு வாயிலாக இயங்கும் 12 நியாயவிலைக்கடைகள் என மொத்தம் 1035 நியாய விலைக்கடைகளின் மூலமாக ரொக்கப்பணம் ரூ.1000/, 1 கிலோ பச்சரிசி மற்றும் சர்க்கரையுடன் ஒரு முழு நீளக்கரும்புடன் பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்குகின்ற பணிகளை தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் நேரத்தில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை தொடர்ந்து நிறைவேற்றி வருகிறார்கள். குடும்பத் தலைவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000 வழங்கப்படும் என்று அளித்த வாக்குறுதிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றி உள்ளார்கள். மகளிர் உரிமைத் தொகை கிடைக்காதவர்கள் மீண்டும் மனுக்கள் கொடுத்தால் தகுதியான நபர்களுக்கு பரிசீலனை செய்யப்பட்டு வழங்கப்படும். முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் இருந்த போது, 24 இலட்சம் குடும்பங்களைச் சேர்ந்த முதியோர்களுக்கு முதியோர் உதவித்தொகை வழங்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல திட்டங்களை நிறைவேற்றி உள்ளார்கள். கல்லூரியில் படிக்கும் 18 இலட்சம் மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000 உரிமைத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்று இரண்டரை ஆண்டுகளில் 50 ஆண்டு காலத்தில் செய்யாத திட்டங்களை கல்விக்காக செய்திருக்கிறார்கள்.

தற்போது நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் மூலமாக லட்சம் வேலைவாய்ப்பினை உருவாக்கும் தொலைநோக்கு திட்டத்தினை உருவாக்கி உள்ளார்கள். இந்தியாவில் உள்ள முதலமைச்சர்களுக்கு எல்லாம் சிறந்த முதலமைச்சராக தமிழ்நாடு முதலமைச்சராக திகழ்கின்றார்கள். தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் தொலைகாட்சி பெட்டிகள் மற்றும் எரிவாயு அடுப்பு கொடுத்த அரசு என்ற பெருமை உள்ளது. அதிலும், திண்டுக்கல் மாவட்டத்தில்தான் முதன் முதலில் வழங்கப்பட்டது. எல்லோருக்கும் எல்லாம் என்ற சமத்துவமான உரிமைகள், ஏழை முதல் பணக்காரர்கள் வரை சமமாக வாழ வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கக்கூடிய அரசு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அரசு. எல்லா நிலைகளையும் உயர்த்தி செயல்படுகின்ற அரசிற்கு பொதுமக்கள் அனைவரும் என்றும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும்.

அதன்படி, திண்டுக்கல் மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையின் 1004 நியாய விலைக் கடைகளில் 6,46,259 குடும்ப அட்டைதாரர்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 19 நியாய விலைக் கடைகளில் 22,572 குடும்ப அட்டைதாரர்கள், மகளிர் சுயஉதவிக்குழு 12 நியாய விலைக் கடைகளில் 10,705 குடும்ப அட்டைதாரர்கள் என மொத்தம் 6,79,536 அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா ரூ.1,000 வீதம் ரூ.67.95 கோடி ஒதுக்கீடு பெறப்பட்டு, இன்றைய தினம் விநியோகம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. என ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் தெரிவித்தார்.

# புதுக்கோட்டை மாவட்டத்தில் பொங்கல் தொகுப்பு - ரூ.1000 ரொக்கம்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி - கே.கே.செல்லப் பாண்டியன் வழங்கினர்!

புதுக்கோட்டை, ஜன.12-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சென்னையில் 10.01.2024 அன்று அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசாக ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, முழுக் கரும்பு மற்றும் ரூ.1,000/ ரொக்கம், இலவச வேட்டி, சேலைகளையும் வழங்கிடும் பணியினை தொடங்கி வைத்தார்கள்.

அதனைத்தொடர்ந்து புதுக்கோட்டை நகராட்சி, காமராஜபுரம் 10ஆம் வீதியில், அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கள் பரிசு தொகுப்பு, ரூ.1,000/ ரொக்கம், இலவச வேட்டி, சேலைகளையும், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சித்தலைவர் ஐ.சா.மெர்சி ரம்யா தலைமையில் வழங்கினார்கள்.

பின்னர் அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் நலனிற்காக எண்ணற்றத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், தமிழர் திருநாளாம் தைப் பொங்கல் திருநாளை மக்கள் அனைவரும் சிறப்பாகக் கொண்டாடும் வகையில், அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கு தலா ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, முழுக் கரும்பு மற்றும் ரூ.1,000/ ரொக்கம், இலவச வேட்டி, சேலைகளையும் வழங்கிடும் பணியினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னையில் தொடங்கி வைத்தார்கள்.

அதன்படி, புதுக்கோட்டை நகராட்சி, காமராஜபுரம் 10ஆம் வீதியில், அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பு, ரூ.1,000/ ரொக்கம், இலவச வேட்டி, சேலைகளும் வழங்கப்பட்டது. புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுத்துறை & மகளிர் சுய உதவிக் குழு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம் உள்ளிட்டவைகள் மூலமாக 1,060 பொது விநியோகத் திட்ட நியாய விலைக் கடைகளில் உள்ள 4,88,942 அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் முகாம் வாழ் இலங்கை தமிழர்கள் குடும்பங்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பு, ரூ.1,000/ ரொக்கம், இலவச வேட்டி, சேலைகளும் இன்று முதல் வழங்கப்படுகிறது.

அந்தவகையில் புதுக்கோட்டை மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை நடத்தும் அர்பன்2 அங்காடியில் 1,047 அரிசி பெறும் குடும்ப அட்டைகள் உள்ளது. இவ்வங்காடியில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் பணி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இப்பொங்கல் பரிசினை பெற்றிட அரிசி குடும்ப அட்டைதாரர்கள் அதிக எண்ணிக்கையில் நியாய விலைக் கடைகளுக்கு ஒரே நேரத்தில் வருவதை தவிர்த்திட, நாள் மற்றும் நேரம் குறிப்பிடப்பட்டு டோக்கன் வழங்கப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள நாள் மற்றும் நேரத்தில் அக்குடும்ப அட்டைதாரர்கள் பொங்கல் பரிசினை பெற்றுக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

பின்னர், சட்டத்துறை அமைச்சர், திருமயம் வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசாக ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, முழுக் கரும்பு மற்றும் ரூ.1,000/ ரொக்கம், இலவச வேட்டி, சேலைகளையும் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன்

புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் வை.முத்துராஜா, கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் கோ.இராஜேந்திர பிரசாத், இணை இயக்குநர் (வேளாண்மை) பெரியசாமி, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் த.முருகேசன், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் செல்வி கு.சாந்தி, நகர் மன்றத் தலைவர் திலகவதி செந்தில், மத்திய கூட்டுறவு வங்கி செயலாட்சியர்/ இணைப் பதிவாளர் மு.தனலெட்சுமி, நுகர்பொருள் வாணிபக் கழகக் மண்டல மேலாளர் த.எம்.சீதாராமன், அறந்தாங்கி சரக துணைப் பதிவாளர் ஆறுமுகப்பெருமாள், கூட்டுறவு சார்பதிவாளர் கோ.அன்னலெட்சுமி, பொதுவிநியோகத் திட்ட கூட்டுறவு சார் பதிவாளர் மற்றும் செயலாட்சியர் ஷியாமளா, ஒன்றியக்குழு உறுப்பினர். அழகு (எ) சிதம்பரம், பொதுவிநியோகத் திட்ட துணைப் பதிவாளர் தி ராஜவேலு, கூட்டுறவு பண்டக சாலை மேலாளர் கிருஷ்ண குமார், மொத்த விற்பனை பண்டக சாலை செயலாட்சியர் வினிதா, நகர்மன்ற உறுப்பினர் சுப.சரவணன், வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்க செயலாட்சியர் மெய்யர், வட்டாட்சியர்கள் கவியரசன், புவியரசன், வட்ட வழங்கல் அலுவலர் மனோகரன், எம்.எம்.பாலு, ஆர். கணேசன், அ.சுப்பிர மணியன், சிக்கந்தர், சுப.துரைராஜா, தேவி, ராஜமாணிக்கம், முல்லை ரமேஷ், ஏ.முருகேசன், மேகநாதன் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### தென்னிந்திய பகுதிகளில்

## வரும் 15ம் தேதியுடன் நிறைவடைகிறது வடகிழக்குப் பருவமழை!

சென்னை, ஜன.12-

வடகிழக்குப் பருவமழை விலகக் கூடிய சாதகமான சூழல் நிலவி வருகிறது. வடகிழக்கு பருவமழை இந்தாண்டு வழக்கத்தை விட கூடுதலாக பெய்துள்ளது.

வடகிழக்குப் பருவமழை கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் 21ம் தேதி முதல் தென்னிந்திய பகுதிகளில் தொடங்கியது.

இந்நிலையில், வடகிழக்குப் பருவமழை தென்னந்திய பகுதிகளில் இருந்து, வரும் 15ம் தேதியுடன் விலக வாய்ப்பு இருப்பதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால், கேரளா, ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட பகுதிகளில் வரும் 15ம் தேதி வடகிழக்குப் பருவமழை விலகக் கூடிய சாதகமான சூழல் நிலவி வருகிறது என இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வடகிழக்கு பருவமழை இந்தாண்டு வழக்கத்தை விட கூடுதலாக பெய்துள்ளது என தகவல் வெளியாகியுள்ளது.

### இதுவரை ரூ.5 கோடியே 91 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!

# கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

# நலிந்தோர் மருத்துவம் - கல்வி உதவி நிதியாக

# இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர்–பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி ரூ. 5 கோடியே 91 லட்சத்து 90 ஆயிரம். இந்த மாதம் மருத்துவம் மற்றும் கல்வி உதவி நிதியாக மொத்தம் **8** பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் ரூ.2,00,000/– (இரண்டு லட்சம்) 11–01–2024 அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

### நிதி உதவி பெறுவோர் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | பொன். சேதுமாதவன், காந்தி தெரு, பெரியப்பணிச்சேரி, சென்னை – 128 | 25,000/– |
| 2. | திருமதி மு.ஜீவா, வடக்கு கள்ளர் தெரு, பிச்சாண்டார்கோவில், திருச்சி | 25,000/– |
| 3. | வேதா.உதயசூரியன், அபில்லாக் குறுக்கு தெரு, திருவல்லிக்கேணி, சென்னை | 25,000/– |
| 4. | எம். கந்தசாமி, அகரசாத்தங்குடி, மாங்குடி அஞ்சல், திருவாரூர் – 610 103. | 25,000/– |
| 5. | திருமதி ஜி.முனீஸ்வரி, பாவடி தோப்பு தெரு, சக்கம்பட்டி, ஆண்டிப்பட்டி, தேனி | 25,000/– |
| 6. | எஸ்.ராதாகிருஷ்ணன், ஒன்றிய பிரதிநிதி, மருதங்குடி, கள்ளிக்குடி, மதுரை | 25,000/– |
| 7. | எஸ்.வீரமுத்து, கிழக்கு கொமரலிங்கம், மடத்துக்குளம், திருப்பூர் மாவட்டம். | 25,000/– |
| 8. | வி.சஞ்சய், புளுவப்பட்டி, அம்மன் நகர், கோவை – 641 602. | 25,000/– |
| | **மொத்தம்** | **ரூ.2,00,000/-** |




திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக்கூட்டரங்கில் தமிழ்நாடு அரசு உறுதி மொழிக் ஆய்வுக்கூட்டம் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை அரசு உறுதி மொழிக் குழுத்தலைவர், பண்ருட்டி சட்டமன்ற உறுப்பினர் தி.வேல்முருகன் தலைமையில், தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், அரசு உறுதி மொழிக்குழு உறுப்பினர்கள் சேலம் (மேற்கு) சட்டமன்ற உறுப்பினர் இரா.அருள், நாங்குநேரி சட்டமன்ற உறுப்பினர் ரூபி ஆர்.மனோகரன், அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம், ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ.வில்வநாதன், பெருந்துறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயக்குமார், திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இதில் திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் இல.பத்மநாபன், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், மாநகரக் காவல் ஆணையர் பிரவீன் குமார் அபிநபு, மாநகராட்சி ஆணையாளர் பவன்குமார் ஜி.கிரியப்பனவர், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் மரு.சாமிநாதன், மாவட்ட வருவாய் அலுவலர் த.ப.ஜெய்பீம், திருப்பூர் சார் ஆட்சியர் செல்வி.சௌம்யா ஆனந்த், துணை மேயர் ரா.பாலசுப்பிரமணியம், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் துணைச் செயலாளர் ரவி உள்பட பலர் உள்ளனர்.



கடலூர் மாவட்டம், புவனகிரி வட்டம், சேத்தியாதோப்பு பகுதியில் உள்ள எம். ஆர்.கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவு சக்கரை ஆலையில் நேற்று முன்தினம் (10.01.2024) 2023–24 கரும்பு அரவை பணியை வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தொடங்கி வைத்தார். உடன் அரசு முதன்மைச் செயலாளர்/சக்கரைத்துறை ஆணையர் சா.விஜயராஜ்குமார், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண் தம்புராஜ், காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினர் ம.சிந்தனைச்செல்வன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா.இராஜாராம், மாவட்ட வருவாய் அலுவலர்/செயலாட்சியர் ரெ.சதீஸ் ஆகியோர் உள்ளனர்.



கடலூர் மாவட்டம் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் பண்ருட்டியில் ஏழை பெண்களுக்கான திருமண நிதி உதவி மற்றும் தாலிக்கு தங்கம் வழங்கும் விழா மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் அருண் தம்புராஜ் தலைமையில் நடைபெற்றது. பண்ருட்டி நகர மன்ற தலைவர் க.இராஜேந்திரன், பண்ருட்டி ஒன்றிய பெருந்தலைவர் சபா.பாலமுருகன் முன்னிலை வகித்தனர். இதில் தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் பயனாளிகளுக்கு நிதி உதவிகளை வழங்கினார். விழாவில் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் ராஜாராமன், மாவட்ட வருவாய் அலுவலர் ராஜசேகரன் ,மாவட்ட சமூக நல அலுவலர் கோமதி ,நகர மன்ற துணைத் தலைவர் சிவா உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

### ஓசூரில் பொங்கல் பரிசுத் தொகுப்பு!

# அமைச்சர் அர.சக்கரபாணி வழங்கினார்!

### ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. - தே.மதியழகன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

கிருஷ்ணகிரி, ஜன. 12 -

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 5,62,894 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத்தொகுப்பினை உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை ஆழ்வார்பேட்டை டி.யூ.சி.எஸ் நியாயவிலைக்கடையில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் தொகுப்பு மற்றும் இலவச வேட்டி சேலைகள் வழங்கும் நிகழ்ச்சியினைத் தொடங்கி வைத்தார். அதனைத்தொடர்ந்து, கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கணிக்கோட்டை வட்டம் எஸ்.முதுகானப்பள்ளி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் நியாயவிலைக்கடையில் மாவட்ட ஆட்சித்தலைவர் சரயு தலைமையில், கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளர்

ஒசூர் சட்டமன்ற உறுப்பினர் ஒய்.பிரகாஷ், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன், ஒசூர் மாநகராட்சி மேயர் எஸ்.ஏ.சத்யா, ஆகியோர் முன்னிலையில் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பினை வழங்கினார்.

முன்னதாக இந்நிகழ்ச்சியில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழர்களின் திருநாளாம் தைத்திருநாளான பொங்கல் திருநாளை சிறப்பாக கொண்டாட தமிழகத்தில் உள்ள அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கும் 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை, ஒரு முழு கரும்பு அடங்கிய பொங்கல் பரிசு தொகுப்புடன் தலா ரூ.1000/ ஆகியவற்றை 2,19,71,113 குடும்பங்களுக்கு 2436,19 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும் என அறிவித்தார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பொங்கல் பரிசுத் தொகுப்பு மற்றும் இலவச வேட்டி சேலைகள் வழங்கும் நிகழ்வினை சென்னை ஆழ்வார் பேட்டை டி.யூ.சி.எஸ் நியாயவிலைக்கடையில் தொடங்கி வைத்துள்ளார்கள். அதனைத்தொடர்ந்து கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்கும் நிகழ்வு தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள கூட்டுற வுத் துறையில் உள்ள 5,22,119 குடும்ப அட்டைதாரர்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திலுள்ள 40,436 குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் 339 இலங்கை தமிழர் மறுவாழ்வு குடும்ப அட்டைதாரர்கள் என மொத்தம் 5,62,894 குடும்ப அட்டைதாரர்களுக்கு முழுநேர கடைகள், பகுதிநேர கடைகள், மகளிர் நியாயவிலைக் கடைகள், நகரும் நியாயவிலைக்கடை கள் என மொத்தம் 1276 கடைகளின் மூலம் 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை, ஒரு முழு கரும்பு அடங்கிய பொங்கல் பரிசு தொகுப்புடன் தலா ரூ.1000/ வழங்கப்படுகிறது. இப்பொங்கல் பரிசு தொகுப்பானது 14.01.2023 வரை வழங்கப்பட உள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், குடும்ப தலைவிகளுக்கு கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, நகரப் பேருந்துகளில் பயணிக்கும் பெண்களுக்கு கட்டணமில்லா பேருந்து பயணம், 1 முதல் 5ஆம் வகுப்பு படிக்கும் குழந்தைகளுக்கு காலை உணவுத்திட்டம், 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை அரசுப்பள்ளியில் படித்து மேற்படிப்பில் சேரும் அனைத்து மாணவிகளுக்கு புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் மாதம் ரூ.1000/ உதவித்தொகை, விவசாயிகளுக்கு மின் இணைப்பு, விவசாயிகளுக்கு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் இடுபொருட்கள், கருவிகள் அனைத்து மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது. ஒசூரிலிருந்து மக்கள் கிருஷ்ணகிரி செல்லாமல் தருமபுரி, சேலம், கோயம்புத்தூர் செல்வதற்கு NHAI மூலம் நான்கு வழிச்சாலை அமைக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, மகாத்மா காந்தி தேசிய உறுதி

திட்டத்தின் கீழ் நாள் ஒன்றுக்கு ரூ.294/ ஆக தற்பொழுது உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. மேலும், ரூ.300/உயர்த்தி வழங்க தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்வார்கள். குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் அரிசி, பாமாயில் உள்ளிட்ட தரமானதாக வழங்கப்பட்டு வருகிறது. எனவே, பொதுமக்கள் அனைவருக்கும் அரசு அறிவித்துள்ள திட்டங்களை பயன்படுத்தி பயனடையுமாறு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் ஒசூர் சார் ஆட்சியர் பிரியங்கா, கூட்டுறவு சங்க இணைப்பதிவாளர் ஏகாம்பரம், கூட்டுறவு சங்க சார்பதிவாளர் (பொது விநியோகத் திட்டம்) குமார், மாவட்ட வழங்கல் அலுவலர் சுந்தர் ராஜ், ஒன்றிய செயலாளர் கஜேந்திரன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சேத்தியாதோப்பு கூட்டுறவு சர்க்கரை ஆலையில் அரவைப் பணி!

### அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தொடங்கி வைத்தார்!

கடலூர், ஜன.12 -

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர்.கே.பன்னீர்செல்வம், எம்.ஆர்.கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவு சக்கரை ஆலையில் 202324 கரும்பு அரவை பணியை தொடங்கி வைத்தார்.

நேற்று முன்தினம் (10.01.2024) கடலூர் மாவட்டம், புவனகிரி வட்டம், சேத்தியாதோப்பு பகுதியில் உள்ள எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவு சக்கரை ஆலையில் 2023-24 கரும்பு அரவை பணியை வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் அரசு முதன்மை செயலாளர்/சக்கரைத்துறை ஆணையர் சா.விஜயராஜ்குமார் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். அ. அருண் தம்புராஜ் ஆகியோர் முன்னி லையில் தொடங்கி வைத்தார்.

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்ததாவது :-

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி எம்.ஆர்.கிருஷ்ணமூர்த்தி சக்கரை ஆலையில் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளுடன் மேம்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி நவீனமயமாக்கப்பட்ட ஆய்வுக்கூடம், ஹைட்ராலிக் டிப்லர் எந்திரம், தானியங்கி எடை மேடை, கரும்பு தளத்தில் தார் சாலை அமைத்தல், எத்தனால் உற்பத்தி ஆலைத்திட்டம் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கரும்பு விவசாயிகளுக்கு சிறப்பு ஊக்கத்தொகைகளும் வழங்கப்பட்டுள்ளது.

கரும்பு அரவை 98.67 இலட்சம் மெட்ரிக் டன்களிலிருந்து 160.54 இலட்சம் மெட்ரிக் டன்னாக அதிகரித்தது. பதினோரு ஆண்டுகளுக்கு பிறகு 2022-23 அரவைப் பருவத்தில் 9.27 சதவீதம் என்ற அதிகபட்ச சர்க்கரை கட்டுமானம் பெறப்பட்டது. கரும்பு விலை டன் ஒன்றுக்கு ரூ.2,750ல் இருந்து ரூ.3,016 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் கரும்பு விவசாயிகளுக்கு உற்பத்தி ஊக்கத் தொகை மற்றும் சிறப்பு ஊக்கத்தொகையாக 651.03 கோடி வழங்கப்பட்டுள்ளது. கரும்பு உற்பத்தியை அதிகரிப்பதற்காக 14.80 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டங்கள், கலைஞரின் அனைத்துக் கிராம வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தில் 2.03 கோடியில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டது. சுமார் 13,000 ஹெக்டர் பரப்பளவில் சுமார் 196 கோடி மதிப்பீட்டில் நுண்ணீர் பாசனத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. சர்க்கரை ஆலைகளுக்கு வழிவகை கடனாக 600.37 கோடி வழங்கப்பட்டது. கள்ளக்குறிச்சி1 மற்றும் எம்.ஆர்.கே கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் எத்தனால் உற்பத்தி ஆலை, தருமபுரி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் இணைமின் திட்டம் உற்பத்தி துவங்கப்பட் டது.

கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு 01.10.2018 முதல் வழங்கப்பட வேண்டிய ஊதிய உயர்வு நிலுவையில் இருந்துவந்த நிலையில், 35 விழுக்காடு ஊதியஉயர்வு வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினர் ம.சிந்தனைச்செல்வன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா. இராஜாராம், மாவட்ட வருவாய் அலுவலர்/செயலாட்சியர் ரெ. சதீஸ், சிதம்பரம் சார் ஆட்சியர் செல்வி ரஷ்மி ராணி, தலைமை கரும்பு அலுவலர் பா.ரவிக்கிருஷ்ணன் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.

### கடலூர் மாவட்டம்– பண்ருட்டியில் சமூக நலத்துறை சார்பில்

# 1083 பயனாளிகளுக்கு தாலிக்கு தங்கம் திருமண உதவித்தொகை ரூ.9,50,29,938!

### அமைச்சர் சி.வெ.கணேசன் வழங்கினார்!

கடலூர், ஜன.12 -

கடலூர் மாவட்டம் பண்ருட்டியில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு நிதி உதவி மற்றும் தாலிக்கு தங்கம் வழங்கும் விழா பண்ருட்டியில் நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் அருண் தம்புராஜ் தலைமை தாங்கினார். பண்ருட்டி நகர மன்ற தலைவர் க.இ ராஜேந்திரன், பண்ருட்டி ஒன்றிய பெருந்தலைவர் சபா.பாலமுருகன் முன்னிலை வகித்தனர்.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி. வெ.கணேசன் பயனாளிகளுக்கு நிதி உதவிகளை வழங்கி பேசியதாவது :

சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கீழ் ஏழை பெண்களின் திருமணத்திற்கு கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

விதவைத் தாய்மார்களின் பெண் குழந்தைகளுக்கு வாழ்வில் ஒளியேற்றும் வண்ணம் ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு விதவை மகள் திருமண நிதியுதவி மற்றும் தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டம்.

ஆதரவற்ற பெண்களின் வாழ்வில் ஒளியேற்ற அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண் திருமண நிதியுதவி மற்றும் தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டம்.

சாதி, மத, பேதத்தை ஒழித்து சமதர்ம சமுதாயத்தை உருவாக்கும் விதமாக கலப்புத் திருமணத்தை ஆதரிக்கும் வகையில் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி கலப்புத் திருமண நிதியுதவி மற்றும் தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டம்.

விதவை மறுமணத்தை ஆதரிக்கும் டாக்டர். தர்மாம்பாள் விதவை மறுமண நிதியுதவி மற்றும் தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டம்.

சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் கீழ் செயல்படும் இத்திட்டங்களுக்கு 2023 - 2024 ஆம் நிதியாண்டில் பட்டதாரி அல்லாத 432 பயணிகளுக்கு தலா ரூ 25,000/ வீதம் ரூ.1,08,00,000 மும் 651 பட்டதாரி பயனாளர்களுக்கு தலா ரூ.50,000/ வீதம் 3,25,50,000/ மொத்தம் 1083 பயனாளிகளுக்கு ரூ.4,33,50,000/மும் 8கி வீதம் 1083 பயனாளிகளுக்கு தங்க நாணயங்களின் மதிப்பு ரூ.5,16,79,938/மும் ஆக மொத்த மதிப்பு ரூ.9,50,29,938/ (ரூபாய் ஒன்பது கோடியே ஐம்பது இலட்சத்து இருபத்து ஒன்பதாயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்து எட்டு மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

தற்பொழுது அண்ணாகிராமம், பண்ருட்டி, விருத்தாச்சலம், கம்மாபுரம், நல்லூர் மற்றும் மங்களூர் ஒன்றியங்கள், பேரூராட்சிகள் மற்றும் நகராட்சி பகுதிகளில் உள்ள பட்டதாரி அல்லாத 215 பயனாளிகளுக்கு தலா ரூ.25,000/ வீதம் ரூ. 53,75,000/ மும் மற்றும் 300 பட்டதாரி பயனாளிகளுக்கு தலா ரூ.50,000/ வீதம் ரூ.1,50,00,000/மும் ஆக மொத்தம் ரூ.2,03,75,000/ மும் 515 தங்க நாணயங்கள் மதிப்பு ரூ.2,45,75,500/மும் ஆக மொத்த மதிப்பு ரூ.4,49,50,500/(ரூபாய் நான்கு கோடியே நாற்பத்து ஒன்பது இலட்சத்து ஐம்பதாயிரத்து ஐநூறு மட்டும்) ஏழைப் பெண்களுக்கான திருமண நிதியுதவியுடன் (வங்கியில் வரவு வைக்கப்படும்) தங்க நாணயங்கள் நேற்று முன்தினம் (10.01.2024) தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் பயனாளிகளுக்கு வழங்கி பேசினார்.

இவ்விழாவில் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் ராஜாராமன், மாவட்ட வருவாய் அலுவலர் ராஜசேகரன், மாவட்ட சமூக நல அலுவலர் கோமதி, நகர மன்ற துணைத் தலைவர் சிவா உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கழக நிர்வாகிகள் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

### தகவல் தொழில்நுட்ப அணி முன்னெடுப்பில்

# திண்டுக்கல் கிழக்கு மாவட்டத்தில் சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு!

### மாவட்டச் செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் அறிவிப்பு!

திண்டுக்கல், ஜன. 12 -

திண்டுக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் எம். எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

‘தி.மு.க. தகவல் தொழில் நுட்பஅணி” முன்னெடுப்பில் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட அளவிலான ‘சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு” நாளை (13.01.2024 - சனிக்கிழமை)



காலை 10.00 மணி முதல் 2.00 மணிவரை திண்டுக்கல், ரவுண்ட் ரோடு, நாயுடுமஹால் ஏசி ஹாலில் நடைபெறவுள்ளது. இப்பயிற்சி வகுப்பில் கழக இளைஞர்அணி, மாணவர் அணி, மகளிர்அணி, மகளிர் தொண்டர் அணி, தொழிலாளர்அணி, வழக்கறிஞர்அணி, பொறியாளர் அணி, மருத்துவஅணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, சிறுபான்மை நல உரிமைப் பிரிவு, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர்அணி, சுற்றுச்சூழல் அணி, அயலகஅணி, கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை, தொண்டர் அணி, அமைப்புச் சாரா ஓட்டுநர் அணி, ஆதிதிராவிடர்நலக்குழு, மீனவர் அணி, வர்த்தகர் அணி, இலக்கிய அணி, நெசவாளர் அணி ஆகிய சார்பு அணிகளின் அனைத்து அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் கழகநாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பி னர்களும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### பன்னாட்டு - உள்நாட்டு தொழில் நிறுவனங்கள் விரிவாக்கம்

# முதலீட்டாளர் நம்பிக்கையாக தமிழ்நாடு உள்ளது!

### ‘தி இந்து’ ஆங்கில நாளேடு தலையங்கம்!

சென்னை, ஜன.12 -

பன்னாட்டு மற்றும் உள்நாட்டு தொழில் நிறுவனங்கள் இங்கு விரிவாக்கம் செய்ய எண்ணுவதன் மூலம் முதலீட்டாளர்களின் நம்பிக்கையாக தமிழ்நாடு உள்ளது என்று ‘தி இந்து’ ஆங்கில நாளேடு தனது தலையங்கத்தில் பாராட்டியுள்ளது.

இரண்டு நாள் தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் 631 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் தொழில்துறை தலைவர்கள் 6.64 லட்சம் கோடி முதலீடு செய்ய உறுதியளித்ததன் மூலம் , மு.க.ஸ்டாலின் அரசு வேலைவாய்ப்பைப் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மாநிலத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல வேண்டும்.

நேரடி வேலைவாய்ப்பு மூலம் 14.54 லட்சம் உட்பட 26.90 லட்சம் கூடுதல் வேலை வாய்ப்புகள் தமிழ்நாட்டின் பொருளாதார சக்தியாக இருக்கும் நற்பெயரை என்பதோடு வலுப்படுத்தும் வகையில் உள்ளன. அதிக எண்ணிக்கையில், 2024 பதிப்பின் வெற்றியானது 2019 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் விளைவுகளை குறைக்கிறது.

இது பசுமை ஆற்றல், மின் வாகனங்கள்,



Investor confidence

Tamil Nadu must match its growth aspirations with action on the ground

By getting industry leaders to commit to invest ₹6.64 lakh crore through 631 Memoranda of Understanding (MoU) signed over the course of the two-day Tamil Nadu Global Investors Meet (GIM 2024), the M.K. Stalin government seems intent on using job creation to steer the State on a growth trajectory. The projections of an additional 26.90 lakh jobs including 14.54 lakh through direct employment are meant to reinforce Tamil Nadu's reputation as an economic power house. In sheer numbers, the success of the 2024 edition dwarfs the outcomes in 2019 and 2015. It has attracted investments in green energy, e-vehicles, non-leather footwear, automobiles, advanced electronic manufacturing, defence and aerospace and the time-tested Information Technology and digital services. Sig-

தோல் அல்லாத பாதணிகள், ஆட்டோமொபைல்கள், மேம்பட்ட மின்னணு உற்பத்தி, பாதுகாப்பு மற்றும் விண்வெளி மற்றும் நேரத்தைச் சோதனை செய்த தகவல் ஆகியவற்றில் முதலீடுகளை ஈர்த்துள்ளது. தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள். குறிப்பிடத்தக்க வகையில், வளர்ச்சியடைந்த சென்னை மற்றும் கோயம்புத்தூர் பகுதிகளுக்கு அப்பால், இந்த முதலீடுகள் கடைகோடி மாவட்டங்கள் தெற்கு உட்பட மாநிலம் முழுவதும் விநியோகிக்கப்படுகின்றன.

அடுக்கு 2 மற்றும் 3 நகரங்கள் மற்றும் நகரங்களில் ஆதரவு உள்கட்டமைப்பை உருவாக்குவதன் மூலம், இது சமச்சீர் பிராந்திய வளர்ச்சிக்கு வழி வகுக்கும் மற்றும் நகர்ப்புற மையங்களுக்கு இடம்பெயர்வதை ஓரளவு தடுக்கலாம்.

ஒன்பது முன்னேறிய நாடுகள் பங்குதாரர் வந்திருந்தன. மேலும் 30 க்கும் மேற்பட்ட நாடுகள் மாநாட்டில் பங்கேற்றன. அதன் உலகளாவிய தன்மையே வியட்நாமின் EV தலைவர் வின்ஃபாஸ்ட் போன்ற புதிய நுழைவுயாளர்களை தமிழ்நாட்டிலிருந்து இந்திய சந்தையில் நுழைவதற்கான வாய்ப்பைப் பயன்படுத்த தூண்டியது.

ஹுண்டாய், டாடாஸ், அதானி, குவால்காம் மற்றும் செயின்ட் கோபேன் உள்ளிட்ட பன்னாட்டு மற்றும் உள்நாட்டு குழுக்கள் தங்கள் தடத்தை விரிவுபடுத்துவதில் ஆர்வமாக இருப்பது தமிழ்நாட்டின் பொருளாதார மற்றும் நிர்வாகச் சூழலில் முதலீட்டாளர்களின் நம்பிக்கையின் அளவைக் காட்டுகிறது.

இவ்வாறு ‘தி இந்து’ ஆங்கில நாளேடு தனது தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

### நாமக்கல் மேற்கு மாவட்டத்தில்

# மாற்றுக் கட்சியினர் கழகத்தில் இணைந்தனர்!

### எஸ்.எம்.மதுரா செந்தில் முன்னிலையில்!

நாமக்கல், ஜன. 12 -

பரமத்தி வேலூர் தொகுதி, மோகனூர் மேற்கு ஒன்றியத்தைச் சேர்ந்த பல்வேறு மாற்றுக் கட்சியினர் நாடு போற்றும் நல்லாட்சி நாயகர் கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாட்சியால் ஈர்க்கப்பட்டு நாமக்கல் மேற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் முன்னிலையில் தங்களை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர்.

மோகனூர் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ. பி.ஆர்.சண்முகம் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில், தலைமை பொதுக் குழு உறுப்பினர் சிவக்குமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.பாலாஜி, துணை அமைப்பாளர் பூக்கடை டி.சுந்தர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.



மதுரை தெற்கு மாவட்டம் திருமங்கலம் கிழக்கு ஒன்றியம் சார்பாக தமிழ் புத்தாண்டை முன்னிட்டு ஒன்றியச் செயலாளர் தங்கப்பாண்டி முன்னிலையில் கழக நிர்வாகிகள் 500 பேருக்கு நலத்திட்ட உதவிகளை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் வழங்கினார். உடன் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கீர்த்திகா தங்கபாண்டி, தொண்டரணி அமைப்பாளர் பிரமிளா, தெற்கு மாவட்ட மகளிர் அணி வலைதள பொறுப்பாளர் சுவர்ணா வெற்றி, மண்டல தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் பாச பிரபு உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்றனர்





நேற்று (11.01.2024) சென்னை, நந்தம்பாக்கம், வர்த்தக மையத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் நடைபெற்ற அயலகத் தமிழர் தினம் – 2024 விழாவில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சியினைத் திறந்து வைத்து பார்வையிட்டார். இவ்விழாவில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மருத்துவர் கலாநிதி வீராசாமி, எம்.எம்.அப்துல்லா, அயலகத் தமிழர் நல வாரியத்தின் தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி, பொதுத் துறை செயலாளர் க. நந்தகுமார், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் பா.கிருஷ்ணமூர்த்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மதுரை வடக்கு மாவட்ட

# தகவல் தொழில்நுட்ப அணி பயிற்சி வகுப்பு கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.மூர்த்தி அறிவிப்பு !

*மதுரை, ஜன. 12-*

மதுரை வடக்கு மாவட்டத்தில் தலைமைக் கழகம் அறிவித்துள்ள தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணியின் முன்னெடுப்பில் நாளை (13.01.2024 - சனிக்கிழமை) காலை 9 மணி அளவில் திருப்பாலை யாதவா பெண்கள் கல்லூரி அருகிலுள்ள குறிஞ்சி திருமண மகாலில் மாவட்ட அளவில் சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு நடைபெறுகிறது. கூட்டத்தில் பங்கேற்க வேண்டிய அணிகள் விபரம் வருமாறு



கழக இளைஞரணி, மாணவரணி, மகளிர் அணி, மகளிர் தொண்டரணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, பொறியாளர் அணி, மருத்துவ அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, சிறுபான்மை உரிமை பிரிவு அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி உள்ளிட்ட கழக சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மற்றும் கழக நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

### ராமர் கோயில் திறப்பு விழா பயனை அறுவடை செய்ய – நாடாளுமன்றத்

# தேர்தலை வடமாநிலங்களில் முதலில் நடத்த மோடி அரசு திட்டம்!

*சென்னை, ஜன.12-*

அயோத்தி ராமர் கோயில் திறப்பு விழா நடந்து முடிந்த பிறகு, அதன் பயனை அறுவடை செய்ய வசதியாக உடனடியாக மக்களவைத் தேர்தலை வட மாநிலங்களில் முதலில் நடந்த மோடி அரசு தயாராகி உள்ளதாக தினகரன் நாளேடு 9.1.2024 அன்று தலையங்கத்தில் குறிப்பி ட்டுள்ளது.

அத்தலையங்கத்தில் கூறப்பட்டு ள்ளதாவது :

அயோத்தி ராமர் கோயில் திறப்பு விழா ஜன.22ம் தேதி முடிந்த பிறகு நாடாளுமன்ற தேர்தல் தேதி எப்போது வேண்டும் என்றாலும் அறிவிக்கப் படலாம். தேர்தலுக்கான அத்தனை ஏற்பாடுகளையும் தலைமை தேர்தல் ஆணையம் செய்து முடித்து விட்டது. 2019ம் ஆண்டு மார்ச் 10ம் தேதி தேர்தல் தேதிகள் அறிவிக்கப்பட்டன. நாடு முழுவதும் மொத்தம் 7 கட்டங்களாக தேர்தல் நடத்தப்பட்டன. ஏப்.11 தொடங்கி மே 19 வரை நாடு முழுவதும் உள்ள 543 தொகுதிகளுக்கும் தேர்தல் நடத்தப்பட்டன. இந்த தேர்தல் முடிவுகள் மே 23ம் தேதி அறிவிக்கப்பட்டன.

### ‘தினகரன்’ நாளேடு தலையங்கம்!



தினகரன்

அனல் பறக்கும்

ராமர் கோயில் திறப்பு விழா பயனை பா.ஜ அறுவடை செய்ய வசதியாக, இந்த முறை வடமாநிலங்களில் முதலில் வாக்குப்பதிவு நடத்த வாய்ப்பு உள்ளதாக அரசியல் விமர்சகர்கள் கருத்து தெரிவித்து உள்ளனர். அதற்கு ஏற்றார்போல் சிபிஎஸ்இ தேர்வுகள் ஏப்.2ம் தேதி முடிக்கப்பட உள்ளன. 543 தொகுதிகளில் பெரும்பாலான இடங்களுக்கு வேட்பாளர் பெயரைக்கூட பா.ஜ இறுதி செய்துவிட்டதாகவும் தகவல் வெளியாகி உள்ளன. நாடு முழுவதும் மக்களவை தேர்தல் ஏற்பாடுகளுக்கு தயாராகி உள்ள நிலையில் இந்த முறை மோடி அரசை வீழ்த்த நாட்டில் உள்ள 28 எதிர்க்கட்சிகள் ஒன்று சேர்ந்து இந்தியா கூட்டணியை அமைத்து உள்ளன.

பீகார் முதல்வர் நிதிஷ்குமார் முயற்சியால் காங்கிரஸ் கட்சியுடன் எப்போதும் எதிர்த்து நிற்கும் மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி தலைமையிலான திரிணாமுல் காங்கிரஸ் கட்சியும், டெல்லி முதல்வர் கெஜ்ரிவால் தலைமையிலான ஆம்ஆத்மியும் இந்தியா கூட்டணியில் இணைந்துள்ளன. அதைவிட முக்கியமாக காங்கிரஸ் மற்றும் ஆம்ஆத்மி இடையே தொகுதி பங்கீடு குறித்து முதற்கட்ட பேச்சு வார்த்தை நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. காங்கிரஸ் கட்சியிடம் இருந்து டெல்லி மற்றும் பஞ்சாப் மாநில ஆட்சி அதிகாரத்தை ஆம் ஆத்மி கைப்பற்றியது.

அங்கும் கூட்டணி வைக்க இருகட்சிகளின் மாநில தலைவர்கள் எதிர்ப்பு தெரிவித்தாலும், அதை எல்லாம் மீறி பா.ஜவை வீழ்த்த வேண்டும் என்ற ஒற்றை இலக்குடன் பேச்சு வார்த்தை நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. டெல்லியில் உள்ள 7 தொகுதிகளில் காங்கிரஸ் கட்சிக்கு 3 தொகுதிகள் ஒதுக்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது. 2014, 2019ல் நடந்த நாடாளுமன்ற தேர்தலில் டெல்லியில் உள்ள 7 தொகுதிகளையும் பா.ஜ வென்றது. இந்த முறை காங்கிரஸ், ஆம்ஆத்மி இணைந்து போட்டியிடுவதால் அங்கு பா.ஜவுக்கு சிக்கல் ஏற்படும். அதே போல் பஞ்சாப் மாநிலத்தில் உள்ள 13 தொகுதிகளில் காங்கிரசுக்கு 6 தொகுதிகள் ஒதுக்க ஆம்ஆத்மி சம்மதித்து விட்டது.

அதே சமயம் அரியானா, கோவா, குஜராத் மாநிலங்களிலும் ஆம்ஆத்மிக்கு தொகுதி ஒதுக்க காங்கிரஸ் கட்சியிடம் கோரிக்கை வைத்துள்ளது. விரைவில் இருகட்சிகள் இடையே முழுமையான தொகுதி பங்கீடு முடிந்து அறிவிப்பு வெளியாகும் என்று தெரிகிறது. தற்போது மேற்குவங்கம், மகாராஷ்டிரா மாநிலங்களில் மட்டும் தான் இழுபறி நீடிக்கிறது. பீகார் மாநிலத்தில் கிட்டத்தட்ட தொகுதி பங்கீடு இறுதி செய்யப்பட்டுவிட்டது. இந்த மாத இறுதிக்குள் இந்தியா கூட்டணி மற்ற அனைத்து மாநிலங்களிலும் தொகுதி பங்கீட்டை முடித்து விட்டு முன் கூட்டியே பிரசாரத்தை தொடங்க உள்ளது. இதனால் இனிவரும் நாட்களில் அனல் பறக்கும்.

இவ்வாறு அந்தத் தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது

### 7 இலட்சம் கோடி முதலீடு – 27 இலட்சம் வேலைவாய்ப்புகள்

# முதலீட்டாளர்கள் மாநாடு மூலம் சாதனை படைத்து விட்டார் முதல்வர்!

### விவசாயிகள் – தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் பாராட்டு!

*சென்னை, ஜன. 12-*

தமிழ்நாடு விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் அறிக்கை வருமாறு:-



பல்வேறு நாடுகள் பங்கு பெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை மிக வெற்றிகரமாக நடத்தி, சுமார் 27 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கக் கூடிய வகையில் 7 லட்சம் கோடி அளவிலான முதலீட்டை ஈர்த்து இந்தியாவையே திரும்பி பார்க்க வைத்திருக்கிறது தமிழ்நாடு அரசு. இந்த மகத்தான சாதனையை புரிந்த தமிழ்நாடு அரசின் முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களை நடுநிலையாளர்களும் நாளேடுகளும் பாராட்டி வருகின்றன. அந்த வகையில் விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சியும் முதலமைச்சரை பாராட்டி வாழ்த்துகிறது.

தொழில் வளர்ச்சி என்பது ஒரு நாட்டின் முன்னேற்றத்தில் மிகப்பெரிய பங்காற்றக்கூடிய ஒன்றாகும். இந்தியா போன்ற விவசாய நாடுகளில் விவசாயம் பொய்த்து வரக்கூடிய நிலையில் இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பை உருவாக்க வேண்டியது ஒரு அரசின் கடமையாகும். அது தொழில் துறையின் மூலமே சாத்தியமாக்கப்பட்டு வருகிறது. நாட்டின் வளர்ச்சிக்கும் இளைஞர்களின் வேலை வாய்ப்பிற்கும் பெரும்பங்காற்றக்கூடிய தொழில்துறையை பேணி காத்து வளர்த்தெடுக்க வேண்டியது ஒரு நல்ல அரசின் கடமையாகும். அந்தப் பணியை தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதிலிருந்து திட்டமிட்டு செய்து வருகிறார்.

2006-2011 காலகட்டத்தில் அன்றைய தி.மு.க. ஆட்சியில் தலைவர் கலைஞர் அவர்களுடைய கடும் முயற்சியால் 56 ஆயிரம் கோடிக்கும் அதிகமான அந்நிய முதலீடுகள் ஈர்க்கப்பட்டு பல்வேறு புதிய தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டு மக்களுக்கான வேலை வாய்ப்பு உருவாக்கப்பட்டது. அதன் பின் தமிழ்நாட்டில் ஆட்சியில் இருந்த பத்தாண்டு கால அ.தி.மு.க. அரசு தன்னுடைய நிர்வாக திறமையின்மையால் புதிய தொழிற்சாலைகளைத் தொடங்காதது மட்டுமல்ல ஏற்கனவே செயல்பட்டு வந்த பல தொழிற்சாலைகள் அண்டை மாநிலங்களுக்கு இடம்பெயர்ந்தன. இதனால் தொழில் துறையில், பொருளாதார வளர்ச்சியில் தமிழ்நாடு பின்னுக்கு தள்ளப்பட்டது.

இந்த நிலையில் தமிழ்நாட்டின் முதலமைச்சராக தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற பின் தொழில்துறையில் தனி கவனம் எடுத்து செயல்பட்டு வந்தார். ‘முதலீட்டாளர்களின் முகவரி தமிழ்நாடு’ என்ற பெயரில் முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தப்பட்டது. ஆதன் மூலம் சுமார் 2 இலட்சம் கோடி முதலீடு ஈர்க்கப்பட்டது. பல நாடுகளுக்கு தானே நேரில் சென்று அந்நிய முதலீடுகளை ஈர்க்க வழிவகை செய்தார். அதனுடைய உச்சமாக தற்போது சென்னையில் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை மிகப் பிரம்மாண்டமாக வெற்றிகரமாக நடத்தி, உலகம் திரும்பிப் பார்க்கும் வண்ணம், இந்தியா வியக்கும் வகையில் சுமார் 7 லட்சம் கோடி முதலீட்டை ஈர்த்து சாதனைப் படைத்துள்ளார். இதன் மூலம் வேலை வாய்ப்புகள் பெருகும், பொருளாதார வளர்ச்சியில் முன்னேற்றம் அடையும். 2030இல் ஒரு ட்ரில்லியன் அமெரிக்கன் டாலர் அளவிற்கான பொருளாதார வளர்ச்சி என்ற முதலமைச்சர் இலக்கு இலகுவாக அடைய சாத்தியக் கூறுகளை இப்போது வசமாக்கியுள்ளார்.

இப்படி தி.மு.க. ஆட்சி காலத்தில் மட்டும் தொழில் துறையில் ஏற்றம் ஏற்படுவதற்கு காரணம் ஒரு நம்பிக்கையான அரசு என்கிற அடையாளத்தை உறுதிப்படுத்துவதோடு, கட்டமைப்புப் பணிகளில் தனி கவனம் எடுத்து அரசு செயல்பட்டு வருகிறது. சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவதில் தனிக்கவனம் போன்ற அடிப்படை வசதிகளில் ஆக்கப்பூர்வமாக செயல்படக்கூடிய அரசாக தி.மு.க. அரசு விளங்குகிறது. எனவே தான் தி.மு.க. ஆட்சி காலத்தில் இப்படிப்பட்ட தொழில்துறையில் முதலீடுகள் ஈர்க்கப்பட்டு புதிய தொழிற்சாலைகள் பெருகி இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு உறுதிப்படுத்தப்படுகிறது. எனவே இப்படி தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை அடுத்த நிலைக்கு வளர்த்தெடுக்க ஆக்கப்பூர்வமாக செயல்படும் தமிழ்நாடு முதலமைச்சரை விவசாயிகள்தொழிலாளர்கள் கட்சி பாராட்டுகிறது, வாழ்த்துகிறது.

இவ்வாறு பொன்குமார் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### தகவல் தொழில்நுட்ப அணியின் முன்னெடுப்பில்

# தேனி தெற்கு மாவட்டத்தில் சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு!

### மாவட்டக் கழகச் செயலாளர் கம்பம் நா.இராமகிருஷ்ணன்,எம்.எல்.ஏ. அறிக்கை!

*தேனி, ஜன.12-*

தேனி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் கம்பம் நா.இராமகிருஷ்ணன், எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை பின்வருமாறு:

கழகத் தலைவர் அவர்களின் ஆணையின்படி தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணியின் முன்னெடுப்பில் நாளை (13.01.2024 - சனிக்கிழமை) மாவட்டக் கழக செயலாளரான எனது தலைமையில் மாவட்ட அளவில் சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு சின்னமனூர் நகர் ஓடைப்பட்டி ரோட்டில் அமைந்துள்ள கவிப்பிரியா மஹாலில் காலை 10.00மணிக்கு நடைபெற உள்ளது.



இப்பயிற்சி வகுப்பில் தலைமைக் கழக வழிகாட்டுதலின்படி கழக இளைஞரணி, மாணவரணி, மகளிர் அணி, தொண்டர் அணி, தொழி லாளர் அணி, வழக்கறிஞர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி உள்ளிட்ட கழக சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக உறுப்பினர்கள் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென தனது அறிக்கையில் தேனி தெற்கு மாவட்டக்கழக செயலாளர் கம்பம் நா. இராமகிருஷ்ணன் கேட்டுக் கொண்டுள்ளார்.



கழகத்தலைவர் – முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி தருமபுரி மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் வழிகாட்டுதலின்படி பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றிய கழகத்தில் பையர்நத்தம்,பி.பள்ளிப்பட்டி,பொம்மிடி ஊராட்சிக்குட்பட்ட பி.துறிஞ்சிப்பட்டி,கொட்டாயூர் ஆகிய தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க நியாய விலைக் கடைகளில் ஒன்றிய கழகச் செயலாளர் பி.எஸ்.சரவணன் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் ரூ.1000/–பொங்கல் பரிசு தொகுப்பு,கரும்பு,சக்கரை,அரசி மற்றும் வேட்டி சேலை வழங்கி துவக்கி வைத்தார்.இந்நிகழ்ச்சியில் ஊராட்சிமன்ற தலைவர்கள் சாந்தாகுப்புசாமி,திருமலாதினேஷ்,ஒன்றிய துணை செயலாளர்கள் ஜாகிதா செரீப்,இராஜேந்திரன் மற்றும் கழக முன்னோடிகள் உடனிருந்தனர்.


தமிழ்நாடு அரசு
நெடுஞ்சாலைத்துறை
நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் வட்டம், சேலம்-7
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். 24 / 2023–24 / முவஅ / நாள்: 05.01.2024
தமிழ்நாடு ஆளுநருக்காகவும், ஆளுநரின் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர் (நெ), நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் வட்டம், சேலம் அவர்களால் RIDF XXIX - 2023-2024 ஊராட்சி ஒன்றிய மற்றும் ஊராட்சி சாலைகளை மாவட்ட இதர சாலைகளாக தரம் உயர்த்துதல் பணிகளின் கீழ், சேலம் (நெ), நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் கோட்டத்தைச் சார்ந்த 3 சாலைப்பணிகள், தருமபுரி (நெ), நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் கோட்டத்தைச் சார்ந்த 3 சாலைப்பணிகள், ஈரோடு (நெ), நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் கோட்டத்தைச் சார்ந்த 3 சாலைப்பணிகள் மற்றும் கோவை (நெ), நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் கோட்டத்தைச் சார்ந்த 3 சாலைப்பணிகள் ஆகிய பணிகளுக்கு இணையதள வழியில் மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் 06.02.2024 அன்று 15.00 மணி (இணையதள கடிகாரத்தின்படி) வரை வரவேற்கப்படுகிறது.
பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விவரங்களை http://tntenders.gov.in என்ற அரசு இணையதளத்தில் 19.01.2024 முதல் தெரிந்துக் கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.
கண்காணிப்புப் பொறியாளர் (நெ), நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் வட்டம், சேலம்–7
செ.ம.தொ.இ / 152 / ஒப்பந்தப்புள்ளி / 2024
சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்



தமிழ்நாடு அரசு - நெடுஞ்சாலைத்துறை,
நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் வட்டம், செங்கல்பட்டு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். 42 / 2023-2024/ முவதொஅ / நாள்.08.01.2024
தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர்களின் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர்(நெ) நபார்டு மற்றும் கிராமச் சாலைகள், செங்கல்பட்டு வட்டம், அவர்களால் ஊராட்சி ஒன்றிய மற்றும் ஊராட்சி சாலைகளை இதர மாவட்ட சாலைகளாக தரம் உயர்த்துதல் NABARD RIDF.XXIX – 2023-2024-பணிகளின் கீழ் கடலூர்(நெ) நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் கோட்டத்திற்கான மூன்று தனிப்பணிகளுக்கும், வேலூர்(நெ) நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் கோட்டத்திற்கான மூன்று தனிப்பணிகளுக்கும் மற்றும் செங்கல்பட்டு(நெ) நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் கோட்டத்திற்கான ஒரு தனிப்பணிக்கும் இணையவழியில் மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் 31.01.2024, 15.00 மணி வரை வரவேற்கப்படுகிறது.
பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்பு தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை https://tntenders.gov.in என்ற அரசு இணையதளத்தில் 12.01.2024 முதல் தெரிந்துகொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.
கண்காணிப்புப் பொறியாளர்(நெ)
செ.ம.தொ.இ./112/ஒப்பந்தப்புள்ளி/2024 — நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் வட்டம், செங்கல்பட்டு-1



தமிழ்நாடு அரசு - நெடுஞ்சாலைத்துறை
நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் வட்டம், செங்கல்பட்டு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். 37 / 2023-2024/ முவதொஅ / நாள்.02.01.2024
தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர்களின் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர்(நெ) நபார்டு மற்றும் கிராமச் சாலைகள், செங்கல்பட்டு வட்டம், அவர்களால் ஊராட்சி ஒன்றிய மற்றும் ஊராட்சி சாலைகளை இதர மாவட்ட சாலைகளாக தரம் உயர்த்துதல் NABARD RIDF.XXIX – 2023-2024-பணிகளின் கீழ் கடலூர்(நெ) நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் கோட்டத்திற்கான ஒரு தனிப்பணிக்கும் மற்றும் வேலூர்(நெ) நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் கோட்டத்திற்கான இரு தனிப்பணிகளுக்கும் இணையவழியில் மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் 31.01.2024, 15.00 மணி வரை வரவேற்கப்படுகிறது.
பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்பு தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை https://tntenders.gov.in என்ற அரசு இணையதளத்தில் 12.01.2024 முதல் தெரிந்துகொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.
கண்காணிப்புப் பொறியாளர்(நெ)
நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் வட்டம், செங்கல்பட்டு-1
செ.ம.தொ.இ./ 132 /ஒப்பந்தப்புள்ளி/2024



தமிழ்நாடு அரசு - நெடுஞ்சாலைத்துறை,
நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் வட்டம், செங்கல்பட்டு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். 43 / 2023-2024/ முவதொஅ / நாள்.09.01.2024
தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர்களின் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர்(நெ) நபார்டு மற்றும் கிராமச் சாலைகள், செங்கல்பட்டு வட்டம், அவர்களால் ஊராட்சி ஒன்றிய மற்றும் ஊராட்சி சாலைகளை இதர மாவட்ட சாலைகளாக தரம் உயர்த்துதல் NABARD RIDF.XXIX – 2023-2024-பணிகளின் கீழ் கடலூர்(நெ) நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் கோட்டத்திற்கான இரண்டு தனிப்பணிபணிகளுக்கும், வேலூர்(நெ) நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் கோட்டத்திற்கான இரண்டு தனிப்பணிகளுக்கும் மற்றும் செங்கல்பட்டு(நெ) நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் கோட்டத்திற்கான ஒரு தனிப்பணிக்கும் இணையவழியில் மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் 31.01.2024, 15.00 மணி வரை வரவேற்கப்படுகிறது.
பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்பு தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை https://tntenders.gov.in என்ற அரசு இணையதளத்தில் 12.01.2024 முதல் தெரிந்துகொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.
கண்காணிப்புப் பொறியாளர்(நெ)
செ.ம.தொ.இ./113/ஒப்பந்தப்புள்ளி/2024 — நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் வட்டம், செங்கல்பட்டு-1



முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க நெல்லை மாவட்டம் பணகுடி தெற்கு ரத வீதியில் உள்ள நியாயவிலைக் கடையில் பொங்கல் பரிசுத் தொகுப்புகளை குடும்ப அட்டைதாரர்களுக்கு 1கிலோ பச்சரிசி,1கிலோ சர்க்கரை,முழு கரும்பு மற்றும் ரூபாய் 1000 ஆகியவற்றை சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு,மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன்,ஞான திரவியம் எம்.பி.மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் ஜெகதீஸ் ஆகியோர் முன்னிலையில் வழங்கினார்.



சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தொகுதி பிராமணன் பட்டியில் 486பயனாளிகளுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்புடன் ரூ.1000த்தை கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் மோகனசந்திரன், திருப்பத்தூர் ஒன்றியக் குழு தலைவர் எஸ் கூட்டுறவு இணைப்பதிவாளர் எஸ்.சண்முகவடிவேலு, கூட்டுறவு இணைப்பதிவாளர் திருமதி ஜ°னு. மாவட்ட கவுன்சிலர் ஏ.டி.என்.ரவி, ஒன்றிய கவுன்சிலர் சகாதேவன் உட்பட வருவாய் துறை கூட்டுறவுத்துறை அதிகாரிகள் கலந்து கொண்டார்கள்.

### நெல்லை கிழக்கு மாவட்டக் கழக

# தகவல் தொழில் நுட்ப அணி பயிற்சி வகுப்பு கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் அறிக்கை!

நெல்லை, ஜன.12 - முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் வழி காட்டுதலின்படி நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க தகவல் தொழில் நுட்ப அணி பயிற்சி வகுப்பு கூட்டம் நாளை (13.01.2024 - சனிக்கிழமை) காலை 9 மணிக்கு புதிய பேருந்து நிலையம் எதிரில் உள்ள வெங்கடேஷ்வரா ஹோட்டலில் நடைபெறுகிறது. என நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக அவர் அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது.

நெல்லை கிழக்கு மாவட்டத்தில் தலைமைக் கழகம் அறிவித்துள்ள தி.மு.க தகவல் தொழில் நுட்ப அணியின் முன்னெடுப்பில் பயிற்சி வகுப்பு கூட்டம் நாளை (13.01. 2024 - சனிக்கிழமை) வெங்கடேஸ்வரா ஹோட்டலில் (புதிய பேருந்து நிலையம் எதிரில் ஆலயா பேக்கரி மேல் தளம்)மாவட்ட அளவிலான சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு நடைபெறுகிறது.

ஆகையினால் கழக இளைஞர் அணி, மாணவர் அணி,மகளிர் அணி, வழக்கறிஞர் அணி,விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, தொண்டரணி,தொழிலாளர் அணி, பொறியாளர் அணி,சிறுபான்மை நல உரிமைப் பிரிவு, மருத்துவர் அணி,

சுற்றுச்சூழல் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி,அயலக அணி, உள்ளிட்ட கழக சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக நாடாளுமன்ற,சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### கல்வி உரிமையைக் காக்க - பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து

# புதுடெல்லியில் இன்று மாணவர் பேரணி!

## கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. அறிக்கை!

சென்னை, ஜன. 12 - தேசிய கல்விக் கொள்கையை நிராகரித்து, கல்வி உரிமையைக் காப்பதற்கும்; இன்று பாசிச பா.ஜ.க. அரசை நிராகரித்து, இந்தியாவை காப்பதற்கும் டெல்லியில் மாபெரும் மாணவர் பேரணி நடைபெறுகிறது. இதில் தி.மு.க. மாணவர் அணி உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சியின் 16 மாணவர் அமைப்புகள் ஒன்று கூடி உருவாக்கிய "யுனைடெட் ஸ்டூடென்ஸ் ஆஃப் இந்தியா" (United Students of India) அமைப்பு பங்கேற்று நடத்துகிறது. டெல்லி பேரணிக்கு தி.மு.க. மாணவர் அணியின் அடலேறுகளே, மாணவர் சேனையே அணி திரண்டு வாரீர்! வாரீர்!! என்று தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ. அழைப்பு விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு: -

கழக தலைவர் முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலோடு, பாசிச பா.ஜ.க. அரசின் ஜனநாயக விரோத ஆட்சியை கண்டித்தும், மாணவர் விரோத கல்விக் கொள்கை, சட்டங்கள், திட்டங்கள் குறிப்பாக தேசிய கல்விக் கொள்கை 2020, நீட் தேர்வுக்கு எதிராக கழக மாணவர் அணி தொடர்ந்து போராடி கொண்டிருப்பது அனைவரும் அறிந்ததே.

இந்திய துணைக்கண்டத்தை காக்கும் நோக்கத்தோடு, பாசிச பா.ஜ.க அரசை எதிர்த்து, இந்தியா (I.N.D.I.A.) கூட்டணியில் இடம்பெறும் AISA, AISB, AISF, CRJD, CYSS, DSF, Dravidan Students' Federation, NSUI, PSF, PSU, RLD Chatra Sabha, Samajwadi Chatra Sabha, Satro Mukti Sangram Samiti, SFI, TSU ஆகிய அமைப்புகளுடன் தி.மு.க. மாணவர் அணி இணைந்து "யுனெடெட் ஸ்டூடென்ஸ் ஆஃப் இந்தியா" (United Students of India) என்ற அமைப்பை உருவாக்கியது.

இந்த அமைப்பின் செயற்தியாளர்கள் சந்திப்பு கடந்த 21.11.2023 அன்று டெல்லியில் நடைபெற்றது. அதில், பாசிச பா.ஜ.க. அரசு கொண்டு வந்துள்ள தேசிய கல்விக் கொள்கை 2020 மாணவர்களின் கல்வி உரிமைக்கு எதிரானது. அது கல்வியை காவிமயமாக்கவும், வணிகமயமாக்கவும், கார்ப்பரேட்களிடம் தாரை வார்க்கவும், அனைவருக்குமான கல்வி உரிமையை மறுக்கவும், இந்தி, சமஸ்கிருத திணிப்பிற்கும் அடித்தளமிடுகிறது. இந்தியாவின் பன்முகத் தன்மையை சிதைத்து ஒற்றைப் பண்பாட்டு தேசமாக அதிலும் குறிப்பாக சமஸ்கிருத பண்பாட்டுத் தேசமாக இந்தியாவை கட்டமைக்க வழிவகுக்கும் தேசிய கல்விக் கொள்கை 2020ஐ நிராகரிக்க வேண்டுமென்றும்,

கல்வியே ஒரு மனிதனுக்கு அறிவையும், ஆற்றலையும் சுயசிந்தனையும், சுய மரியாதையையும், சுதந்திரத்தையும் வழங்கக் கூடியது. தனிமனித சுதந்திரம் என்பது ஜனநாயகத்தின் மாண்பு. அந்த ஜனநாயகத்தை காக்கும் தூணாக விளங்கும் கல்வியை ஏழை எளியோரிடமிருந்து பறித்து, பணக்கார வர்க்கத்திடம் வழங்க சதி திட்டம் செய்கிறது பாசிச பா.ஜ.க. அரசு. அதன்மூலம் கல்வி மறுக்கப்பட்ட சமூக நிலையை மீண்டும் கட்டமைக்கவே விரும்புகிறது தேசிய கல்விக் கொள்கை2020. கல்வி மறுக்கப்பட்ட சமூகம் தனது சுயமரியாதை யும், சுதந்திரத்தையும் இழந்துவிடும். அரசியலமைப்புச்சட்டம் வழங்கிய அத்தனை உரிமைகளையும் இழக்கச் செய்து சுதந்திரமற்றவர்களாய், சுயமரியாதை அற்றவர்களாய், ஒட்டுமொத்த ஜனநாயகத்தை அழிக்க முயல்கிறது பாசிச பா.ஜ.க. அரசு.

எனவே, இந்திய துணைக்கண்டத்தை காக்க, இந்தியாவின் பன்முகத்தன்மையை, ஒற்றுமையை, ஒருமைப்பாட்டை, மாணவர்களின் கல்வி உரிமையை காத்திட தேசிய கல்விக் கொள்கை 2020ஐ நிராகரிப்போம்! பாசிச பா.ஜ.க. அரசை நிராகரிப்போம்!! என்றும், கல்வி உரிமையை காப்போம்! இந்தியாவை காப்போம்!! என்ற முழக்கத்துடன், "Save EDUCATION Reject NEP; Save INDIA Reject BJP" என்ற முழக்கத்துடன், இன்று (12.01.2024) தலைநகர் டெல்லியில் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் பங்கேற்கும் நாடாளுமன்றம் நோக்கிய மாபெரும் மாணவர் பேரணி (Parliament March) நடத்திட யுனெடெட் ஸ்டூடென்ஸ் ஆஃப் இந்தியா (United Students of India) கூட்டமைப்பு எடுத்த முடிவினை அறிவித்தோம்.

அதன்படி, பாசிஸ்ட்டுகளிடமிருந்து இந்திய துணைக் கண்டத்தை காத்திடவும், மாணவர்களின் கல்வி உரிமையையும் பாதுகாத்திடவும் டெல்லியில் நடைபெறும் பேரணிக்கு தி.மு.க. மாணவர் அணியின் அடலேறுகளே, மாணவர் சேனையே அணி திரண்டு வாரீர்! வாரீர்!! என அன்போடு அழைக்கின்றேன்!

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைக்க உள்ள தமிழர்களின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டைப் பெருமைப்படுத்தும் வகையில் பிரமாண்டமாக அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு ஜல்லிக்கட்டு அரங்கம் திறப்பு விழாவில் ஒரு லட்சம் பேர் பங்கேற்பது மற்றும் சேலத்தில் 21ஆம் தேதி நடைபெற உள்ள இளைஞரணி இரண்டாவது மாநில மாநாடு குறித்த வாடிப்பட்டி பேரூர் தி.மு.க. ஆலோசனை கூட்டத்தில் வடக்கு மாவட்டச் செயலாளரும், வணிகவரி மற்றும் பதிவு துறை அமைச்சருமான பி.மூர்த்தி சிறப்புரையாற்றியனார். உடன் கழக நிர்வாகிகள் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., சுப.த.சம்பத், சோமசுந்தர பாண்டியன், மு.பால்பாண்டியன், பாலா.ராஜேந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள், கழகத்தினர் உள்ளனர்.

### தமிழ்நாட்டை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்துகிறது!

# ஒன்றிய அரசு கொடுக்கும் நெருக்கடியை முதல்வர் சமாளிப்பார்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேச்சு!

சிவகங்கை, ஜன. 12 - சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தொகுதி பிராமணம்பட்டி ஊராட்சியில் தமிழக முதல்வரின் பொங்கல் தொகுப்பினை 486 பயனாளிகளுக்கு வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட வருவாய் அலுவலர் மோகனச் சந்திரன் தலைமையில் நடைபெற்றது. மண்டல கூட்டுறவு இணைப்பதிவாளர் திருமதி ஜ°னு வரவேற்றுப் பேசினார் .

இந்த நிகழ்ச்சியில் 486 பயனாளிக. ளுக்கு பொங்கல் பரிசு தொகையினை வழங்கி கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர். பெரிய கருப்பன் பேசியதாவது. கடந்த இரண்டரை ஆண்டுகளாக தமிழகத்தில் தமிழக முதல்வர் தளபதி அவர்கள் நல்லாட்சி நடத்த வருகிறார்கள்.

கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் ரூபாய் 6 லட்சம் கோடி கடனை வைத்து விட்டு சென்றார்கள். பல்வேறு நிதி நெருக்கடியில் இத்தகைய பொங்கல் பரிசினை முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்கள் . நாட்டில் பல்வேறு பண்டிகைகள் கொண்டாடப்படுகின்றது. ஒவ்வொரு பண்டிகைகளும் ஒவ்வொரு மதம் மொழியைச் சார்ந்ததாக இருக்கும்.

ஆனால் பொங்கல் பண்டிகை தமிழர்களின் அனைத்து வீடுகளிலும் அயல் நாடுகளில். வசிக்கும் தமிழர்களின் வீடுகளில் கொண்டாடப்படும் ஒரே பண்டிகை ஆகும். தமிழகத்தில் சாதி, வேறுபாடின்றி, பொங்கல் பண்டிகை கொண்டாடப்பட்டு வருகிறது. பொங்கல் பண்டிகைக்கு முதல்வராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள் அனைவரும் இந்தப்பண்டிகையை கொண்டாட வேண்டும் என்ற நோக்கத்தில் பொங்கல் பரிசினை அறிவித்தார்கள்.

அதை தொடர்ந்து தமிழக முதல்வர் தளபதி அவர்களும் பொங்கல் பரிசுத் தொகையாக ஒரு கிலோ பச்சரிசி, சர்க்கரை முழு கரும்பு, ரூபாய் ரொக்கம் 1000 அத்துடன் வேட்டி சேலையும் வழங்கப்படுகிறது. தமிழகத்தில் 2 கோடியே 19 லட்சத்தி 51 ஆயிரத்து 748 குடும்ப அட்டைதாரர் களுக்கு இது வழங்கப்படுகிறது. சென்னையில் நேற்று முன்தினம்முதல்வர் அவர்கள் இந்த பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் நிகழ்ச்சியினை துவக்கி வைத்தார்கள் . அதில் நானும் கலந்து கொண்டதால் நேற்று இந்த நிகழ்ச்சியில் பங்கேற்க முடியவில்லை. இன்று முதல்வரின் பரிசுத்தொகையினை திருப்பத்தூர் தொகுதியில் வழங்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருக்கிறேன் . இத்தகைய வாய்ப்பினை உருவாக்கி தந்த முதல்வருக்கு நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

என்னை திருப்பத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக நீங்கள் தேர்வு செய்ததால் நான் அமைச்சராக முடிந்தது. மக்கள் நலனிற்காக ஆட்சியை நடத்தி வரும் முதல்வர் அவர்கள் இந்தியாவி லேயே சிறந்த முதல்வராக பாராட்டப்பட்டு வருகிறார்.அதை பொறுத்து கொள்ள முடியாத ஒன்றிய அரசு தமிழ்நாட்டை வஞ்சிக்கிறது.. தமிழக அரசிற்கு போதிய நிதியினை தருவதில்லை நாம் ஒரு ரூபாய் கொடுத்தால் 29 பைசா தான் நமக்கு மீண்டும் தருகிறார்கள். அந்தநிதியையும் முழுமையாக தருவதில்லை. இந்தியாவிலேயே மகாராஷ்டிராவிற்கு அடுத்து தமிழகத்தில் தான் அதிக வரி ஒன்றிய அரசிற்கு செலுத்தப்பட்டு வருகின்றது. இதே பா.ஜ.க. ஆளும் மாநிலங்களுக்கு கூடுதலாக ஒன்றிய அரசு நிதி தந்து வருகின்றது. தமிழகத்தை மாற்றான் தாய் மனப்பான்மையுடன் நடத்துகிறது. நமது இயக்கம் கொள்கைகோட்பாடுடன்உள்ளதாகும். பேரறிஞர் அண்ணா தலைவர் கலைஞர் வழியில் முதல்வர் அவர்கள் கொள்கையிலிருந்து சிறிதும் மாறாமல் ஆட்சியை நடத்தி வருகிறார். எந்த வழியிலாவது முதல்வரை பணிய வைக்கவேண். டும் என்ற எண்ணத்தில் இத்தகைய சூழ்ச்சியினை ஒன்றிய அரசு தொடர்ந்து செய்து வருகிறது.இதை முதல்வர் அவர்கள் அவருக்குரிய சாதுர்யத்தினால் சமாளித்து வெற்றி பெறுவார்.

இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடாக உள்ளது. ஆனால் மத சார்பு நாடாக மாற்ற ஒன்றிய அரசு செயல்பட்டு வருகின்றது. இதற்காக பல்வேறு நெருக்கடிகளை நமது தமிழக முதல்வர் அவர்களுக்கு தந்து கொண்டிருக் கின்றது . நிதிநெருக்கடி ஒன்றிய அரசின் சூழ்ச்சி இதையெல்லாம் பொருட்படுத்தாமல் தமிழக மக்களுக்கு தொடர்ந்து பல்வேறு உதவிகளை முதல்வர் அவர்கள் செய்து வருகிறார். முதல்வர் அவர்கள் பல்வேறு நெருக்கடி யானசூழ் நிலையிலும் இத்தகைய பொங்கல் பரிசினை உங்களுக்கு அறிவித்துள்ளார்கள். தேர்தல் வாக்குறுதியினை தொடர்ந்து நிறைவேற்றி வருகின்றார்கள்.

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்திற்காக தமிழக அரசு ரூபாய் 7000 கோடி செலவழித்துள்ளது..அந்த நிதியை ஒன்றிய அரசு தர வேண்டும் . இன்று வரை அந்த தொகை தரவில்லை. தொடர்ந்து 14000 கோடி பாக்கி வைத்துள்ளது முடிந்த பணிகளுக்கு ஒன்றிய அரசு நிதியினை தருவதற்கு மறுக்கிறது. எத்தகைய சூழ் நிலையிலாவது தமிழகத்தை அடிபணிய வைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இத்தகைய செயல்களில் ஒன்றிய அரசு ஈடுபடுகின்றது. ஆனால் முதல்வர்அவர் கள் தமிழக மக்களுக்கு எவ்வித கஷ்டமும் தரக்கூடாது என்ற எண்ணத்தில் தமிழகத்தில் வளர்ச்சி பெற்ற மாநிலமாக எடுத்து மாற்றுவதற்கு பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறார்கள்.

இவ்வாறு அமைச்சர் பெரிய கருப்பன் பேசினார்.

நிகழ்ச்சியில் திருப்பத்தூர் ஒன்றிய குழு தலைவர் எஸ்.சண்முக வடிவேல் வாழ்த்திப் பேசினார். இந்த நிகழ்ச்சியில் கூட்டுறவு இணை பதிவாளர்கள் பாலச்சந்திரன், சரவணன், நாகராஜன், ஸ்ரீமான் மாவட்ட வழங்கல் அலுவலர் சபிதாள் பேகம், மாவட்ட கவுன்சிலர் ஏ.டி. என்.ஆர்.ரவி, ஒன்றிய கவுன்சிலர் சகாதேவன், ஊராட்சி மன்ற தலைவர்கள் கே.எஸ்.நவநீதகிருஷ்ணன், செல்வராஜ், துணைத்தலை வர் விஜயா, நிர்வாகிகள் நடராஜன் ,ஏ.டி. என். தங்கமணி, கார்த்திகேயன், மாணிக்கம், புகழரசு ,மகேஷ், லட்சுமணன், ராமன், செயலாளர் முருகேசன், திருநாவுக்கரசு உட்பட கூட்டுறவு துறை, வருவாய் துறை அதிகாரிகள் கலந்து கொண்டார்கள் .

## வாட்ஸ் அப்பில் வந்த செய்தி !





கடலால் பிரிக்கப்பட்டுள்ள
தமிழ் சொந்தங்களை
தமிழால் இணைக்கும் விழா !
அயலகத் தமிழர் தினம்-2024
நாள் : 12.01.2024 வெள்ளிக்கிழமை நேரம் : காலை 09.00 முதல் இரவு 7.00 மணி வரை
இடம் : சென்னை வர்த்தக மையம், நந்தம்பாக்கம், சென்னை.
அயலகத் தமிழர்களுக்கான விருதுகளை வழங்கி விழாப் பேருரை
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
தலைமை விருந்தினர்
திரு. கா.சண்முகம்
மாண்புமிகு உள்துறை மற்றும் சட்டத்துறை அமைச்சர், சிங்கப்பூர்.
முன்னிலை
திரு. செஞ்சி கே.எஸ்.மஸ்தான்
மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும்
வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர்
திரு. கார்த்திகேய சிவசேனாபதி
தலைவர், அயலகத் தமிழர் நல வாரியம்
திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி
மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்
திரு. திருச்சி சிவா
நாடாளுமன்ற உறுப்பினர்
அனைவரையும் அன்புடன் வரவேற்கும்.
R.விஜயகுமார் B.A.,B.L.,
செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர்
செஞ்சி ஒன்றிய செயலாளர் (கி) , தலைமை செயற்குழு உறுப்பினர்
L.P.நெடுஞ்செழியன் B.A.,B.L.,
மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர் (கி)
தலைமை செயற்குழு உறுப்பினர்
K.S.M.மொக்தியார் அலி மஸ்தான் B.Tech.,IT.LLB.,
தலைவர் - செஞ்சி பேரூராட்சி, விழுப்புரம் மாவட்டம்.
JN ADS
9790242624

# திராவிட சினிமா

40

**திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூகநீதிச் சிந்தனைகளைத் திரைத்துறை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தனர் நமது முன்னோடிகள். அந்த வகையில், திரைப்படம் என்கிற நவீன ஊடகத்தின் மூலம் அரசியல் மாற்றத்துக்கான திருப்புமுனைகளை உருவாக்கின, திராவிடம் பேசிய திரைப்படங்கள். அந்த வரலாற்றை மீண்டும் வாசிக்கத் தருகிறது திராவிட சினிமா.**



படங்கள் உதவி : ஞானம்



## எம்.ஜி.ஆர். எனும் திராவிட எதிர் நாயகன்–3

■ வீ.மா.ச.சுபகுணராஜன்

சென்ற வாரம் 'எங்கள் தங்கம்' திரைப்படத்தில் 'அசல்' எம்.ஜி.ஆரும், 'நகல்' எம்.ஜி.ஆரும் சந்திக்கும் அபூர்வமான காட்சியின் வாசிப்பு சாத்தியம் அல்லது அந்தக் காட்சி வெளிப்படுத்தும் செய்தியைப் பலவகையிலும் விளங்கிக் கொள்ள முடியுமென எழுதியிருந்தேன்.

எனது புரிதலில், மேடையிலிருந்த சிறுசேமிப்புத் துணைத் தலைவர் எம்.ஜி.ஆரே 'நகல்' (கட்டமைக்கப்பட்ட பிம்பம்), படத்தின் நாயகனான எம்.ஜி.ஆரே 'அசல்' என்பதே. பிம்பம் கட்டமைக்கப்பட்ட முறையில் எம்.ஜி.ஆர் எவ்வளவு கவனமாகச் செயல்பட்டார் என்பது ஓரளவு அறியப்பட்ட ஒன்றுதான். ஆனால், அந்தப் பிம்பம், தனித்துவமானதும், திராவிடக் கருத்தியல் மூலத்துக்கு அப்பாலும் கட்டமைக்கப்பட்டது என்பதே கவனத்துக்குரியது.

எம்.ஜி.ஆர் ஒருபோதும் பெரியாரியச் சிந்தனையின் விளிம்பில்கூட இருப்பு கொண்டதில்லை. எனவே, சுயமரியாதை, பகுத்தறிவு, சமூகநீதி போன்ற கோட்பாடுகளை திராவிடப் படைப்பாளிகள் அண்ணா, கலைஞர் போன்றவர்களின் படங்களில், குறிப்பாக திராவிடப் பாடலாசிரியர்களின் பாடல்களில், ஒட்டி உறவாடிவிட்டு, பிற படங்களில் விலகி நிற்பவர். அந்த விலகலுக்கு அவர் கண்டடைந்த இன்னொரு முகமூடி, காந்தி.

### கல்வியைத் தனியார்மயமாக்கிய வள்ளல்

ஏற்கெனவே கண்டது போல, பெரியார் – தி.மு.க. முரணை இட்டு பெரியாரியத்திடமிருந்து வெகு எட்டத்தில் தன்னை இருத்திக் கொண்டவர். அண்ணா, தனது வெற்றியை பெரியாருக்குச் சமர்ப்பித்து இணைந்த பிறகும் சாமர்த்தியமாகப் 'புத்தன், ஏசு, காந்தி...' எனக் கதை பேசியவர், கொல்லூர் மூகாம்பிகை பக்தர். இதற்கு இவர் புனைந்த இணைவு விபரீதமானது. ஆம், காந்தியையும் அண்ணாவையும், ஒரு குடையின் கீழ் நிறுத்திய சாதுர்யம். அங்கேயும் அண்ணா குறித்த ஒரு புகழாரத்தைச் சூழ்ச்சியாக, ஒரு காந்தி – அண்ணா கோட்பாட்டு இணைவாகப் புனைந்த கபடம். ஆம், அண்ணாவை அவரது 'எதையும் தாங்கும் இதயம்' மற்றும் எளிமை / பொறுமை கருதி 'தென்னாட்டு காந்தி' என்று கூறப்பட்டதை, தனது சூழ்ச்சியான இந்திய தேசிய சார்பை நிலைநிறுத்தும் தளமாகக் கொண்டவர் எம்.ஜி.ஆர்.

வன்முறையின் மீது நம்பிக்கையின்மை என்ற ஓர் இணைவைத் தவிர்த்து, அண்ணாவின் அரசியல் கொள்கைகள் எந்த நிலையிலும் காந்தியத்தின் சாயலற்றவை. சொல்லப் போனால் முற்றிலும் எதிரானவை. பாரதம் / இந்தியா, இந்து மதம், ராமராஜ்யம் போன்றவற்றை அவற்றின் எந்தவித புனிதவாத விளக்கங்களாலும் அண்ணாவையோ, திராவிடச் சிந்தனையையோ வென்றெடுப்பது சாத்தியமே இல்லை என்பதுதானே உண்மை.

எப்படி அந்தக் கட்டமைக்கப்பட்ட பிம்பமான எம்.ஜி.ஆர்., தேர்தல் அரசியல் களத்தில், அதைவிட முக்கியமாக ஆட்சியாளராக (முதல்வராக) தனது பிம்பத்துக்கு மாறான/ எதிரான வகையிலேயே செயல்பட்டார் என்பதையே பேராசிரியர் எம்.எஸ்.எஸ்.பாண்டியன் அவர்களின் நூல், விரிவான ஆதாரங்கள் அடிப்படையிலான வாதங்களின் மூலம் முன்வைக்கிறது. சத்துணவுத் திட்டம் மற்றும் சில விலையில்லாப் பொருட்கள் வழங்கல் தவிர்த்த, அரசுத் திட்டங்களின் மூலமாக செல்வந்தர்களின் அதிவேக வளர்ச்சிக்கு வித்திட்டார் என்பதை விளக்குகிறார். தனது பிம்பத்தைக் கட்டமைக்க, அவர் முன்வைத்த ஏழை எளியோர் நலன், கல்வி வேலைவாய்ப்பில் முன்னுரிமை, மிகக் குறிப்பாக மது ஒழிப்பு எனும் கொள்கைகளை அறவே கைவிட்டார்.

கல்வி, மருத்துவம், வேலைவாய்ப்பு, உட்கட்டமைப்பு போன்றவற்றில் அரசின் பங்களிப்பை முடிந்தவரை குறைத்துத் தொழில் வளர்ச்சி, கல்வி போன்றவற்றை முற்றிலுமாகத் தனியார்மயமாக்கிய 'தயாளன்' எம்.ஜி.ஆர். தான். குறிப்பாகத் தொடக்கக் கல்வி தொடங்கி, உயர்கல்வி வரை (குறிப்பாகத் தொழிற்கல்வியை) தனியார்மயமாக்கிய 'வள்ளல்' அவரேதான். இந்த பிம்பத்துக்கும் செயல்பாட்டுக்குமான படுபாதாள இடைவெளியை, அவரது பக்தர்களான எளிய மனிதர்கள் ஏன் கண்டு விழித்துக் கொள்ளவில்லை என்பதற்கான காரணத்தையும் அந்த 'பிம்பப் பொறி'யின் கோட்பாட்டுச் சட்டகம் மூலமாகவே விளக்குகிறார் திராவிட அறிஞர் பேராசிரியர் பாண்டியன். அதனை அடிப்படையான பொதுப் புத்தி (COMMON SENSE) குறித்த கோட்பாட்டு விளக்கத்தைப் பார்த்துவிட்டுப் பேசலாம்.

### பிம்பப் பொறியும், பொதுப் புத்தியும்

எம்.ஜி.ஆரின் 'முகம்' எனும் பிம்பப் பொறி உருவாக்கப்பட்ட விதம் குறித்துக் கொஞ்சம் பார்க்கலாம். எம்.ஜி.ஆர் பிம்ப உருவாக்கம் குறித்த, பேராசிரியர் பாண்டியன் அவர்களது 'பிம்பப் பொறி' (IMAGE TRAP என்ற சொல்லுக்குப் 'பிம்பப் பொறி' எனும் மொழியாக்கமே சரி) நூல் விரிவாகப் பேசியுள்ளது. இத்தாலிய மார்க்சிய அறிஞர் கிராம்சி அவர்களின் கோட்பாட்டுச் சட்டகத்தின் அடிப்படையில், அந்தப் பிம்ப உருவாக்கம் குறித்த வாசிப்பைச் செய்துள்ளார். 'கிராம்சி அவர்களின் 'பொதுப் புத்தி' குறித்த சிந்தனைகளில், அதன் தன்மையிலேயே 'பொதுப் புத்தி', குறிப்பாக விளிம்புநிலை மக்களின் (SUBALTERN CLASS) 'பொதுப் புத்தி', கையாளப்படக் கூடியதாக, வளைக்கப்படக்கூடியதாக (MANIPULATED) இருக்கிறது' என்கிறார்.

**எம்.ஜி.ஆரின் 'அண்ணா நாமம் வாழ்க' எனும் துதி 'ஞீராமஜெயம்' போல ஒரு தெய்வத்தைப் போற்றும் தன்மை கொண்டது என்பதை உணர முடியும்.**

இந்தச் சாமனியர்களின் 'பொதுப் புத்தியை ஆக்கிரமிக்கும்' வேலையை எத்தனை கவனமாகத் திரைப்படப் பாத்திரத் தேர்வுகளால் கட்டமைத்தார் என்பதை, பாண்டியன் அவர்கள் விரிவான காட்சி விவரணைகளால் நீளப் பேசாமல், குறிப்பு களால் விளக்குகிறார். ஆனால், எம்.ஜி.ஆர் உருவாக்கிய 'பிம்பப் பொறி' எளிய மக்களின் 'பொதுப் புத்தியில்' கேள்விக்கிடமின்றிப் பொதிந்து போனது என்கிறார். இந்த 'பொதுப் புத்தி' ஆக்கிரமிப்பு உத்தியை வெகுமக்களின் ஏற்றுக் கொள்ளப்பட்ட கலாச்சார நம்பிக்கைகளின் மீது, அதன் வடிவிலேயே உருவாக்குவதன் மூலம் வென்றெடுத்தார் எம்.ஜி.ஆர் என்கிறார்.

உதாரணத்துக்கு, இங்கு நிலவும் தாய்மையைப் போற்றுதல் எனும் கலாச்சாரக் கூற்றினை, தொடர்ந்து பல படங்களிலும் சித்தரித்தல். திரைப்படங்களில் 'தாய்க்கு' கட்டுப்பட்ட மகன் (இந்தத் தாய் எனும் பிம்பம் எம்.ஜி.ஆரின் பிம்பப் பொறியில் கட்டப்பட்ட கருவாடு என்பேன்), மக்களுக்காக / ஊர் நன்மைக்காகத் தியாகம் செய்யத் தயங்காதவர், பெண்கள் கற்பின் காவலர் (ஆனால் ஒரே வேளையில் பல இளம்பெண்களை ஈர்த்துக் காதலில் விழச் செய்பவர்), தன்னலம் கருதாத தயாளர், வாரி வழங்கும் வள்ளல், காந்திய தேசியவாதி எனும் கட்டமைப்புகள் தொடர்ந்தன.

இந்த காந்திய தேசியவாதி, தனது திராவிடச் சார்பு எனும் பொய்யை, அண்ணா எனும் தனி மனிதர் மீதான மரியாதையாக மாற்றியமைத்துக் கொண்டார். அண்ணாவின் அரசியல் கொள்கையான கூட்டாட்சியை, மாநில உரிமை போன்றவற்றைப் பின் நகர்த்தி, தனது கொள்கையின் மூலமாக காந்தியை நிறுத்தியதே சான்று. இன்னும் அப்பட்டமாகச் சொல்வதானால் எம்.ஜி.ஆரின் 'அண்ணா நாமம் வாழ்க' எனும் துதி 'ஞீராமஜெயம்' போல ஒரு தெய்வத்தைப் போற்றும் தன்மை கொண்டது என்பதை உணர முடியும்.

(திராவிட எதிர்நாயகத்துவம் தொடரும்).

...படம் விரியும்

## தீவுகளைத் தீர்த்துவிடாதீர்!

லட்சத்தீவுகளுக்குச் சென்று பிரதமர் மோடி 'ஸ்நோர்கெல்லிங்' செய்தாலும் செய்தார், கிளம்பி உள்ளது புதிய பிரச்சினை.

தனது பயணத்தின் போது, 'லட்சத்தீவு என்னா அழகு' என்று பதிவு போட, உடனே மாலத்தீவு நாட்டைச் சேர்ந்த மூன்று அமைச்சர்கள் மோடியைக் கிண்டலடித்து சமூக ஊடகங்களில் பதிவு போட, காவிகள் கொதித்தெழுந்து 'மாலத்தீவுகளுக்குச் சுற்றுலா செல்லாதீர்' என்று கதற, இப்போது அந்த அமைச்சர்களை இடைநீக்கம் செய்துள்ளது மாலத்தீவு அரசு.

தன்னுடைய பதிவில் மாலத்தீவு குறித்துப் பிரதமர் எதுவும் சொல்லாத போதும், மாலத்தீவு அமைச்சர்களிடமிருந்து ஏன் கேலிப் பேச்சு வந்தது? காரணம், மாலத்தீவின் பொருளாதாரம் சுற்றுலாவை நம்பியே இருக்கிறது. மோடியின் பதிவால், தங்கள் நாட்டின் சுற்றுலாத்துறை பாதிக்கப்படும் என அவர்கள் நினைத்திருக்கலாம்.

அவர்கள் செய்தது தவறுதான். ஆனால், அதைத் தொடர்ந்து, 'மாலத்தீவுகளுக்குச் சுற்றுலா செல்லாதீர்கள். லட்சத்தீவுகளுக்குச் சுற்றுலா செல்லுங்கள்' என்று பாலிவுட் நடிகர்கள் முதற்கொண்டு காவிகள் பலர் மாலத்தீவு புகைப்படங்களைப் போட்டு விளம்பரம் கேட்டதுதான் ஊர் முழுவதும் சிரிப்பாகிவிட்டது.

மாலத்தீவில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தீவுகள் உள்ளன. ஆனால், பெயர்தான் லட்சத்தீவே தவிர, இருப்பது என்னவோ முப்பது சொச்சம் தீவுகள்தான். மேலும் இங்கு கடல்சார் சூழலியலைப் பாதுகாக்கும் பவளப்பாறைகள் அதிகமிருப்பதால், இங்கு சுற்றுலாவை வளர்க்கிறேன் என்று மோடி அரசு எதையேனும் செய்யப் போக, அந்தத் தீவுகளே அழிந்துபோகும் நிலை ஏற்படலாம். 'ஈகோ'வுக்காக எதையும் காவு கொடுப்பவர்கள் தீவையும் காலி செய்ய கிளம்பி விட்டனர். மக்கள் மயங்கமாட்டார்கள்.

## :.ப்ளாஷ்பேக்




முத்துமாரியப்பன்

### கலைஞர் தாத்தா!

சுமார் 15 ஆண்டுகளுக்கு முன் எனது பிறந்த நாளை முன்னிட்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை கோபாலபுரம் இல்லத்தில் சந்தித்து வாழ்த்துப் பெறும் வாய்ப்புக் கிடைத்தது. நான், எனது மகள்கள், பேத்திகள், பேரன்கள் ஆகியோருடன் சென்றிருந்த போது எனது சின்னபேத்தி அடிக்கடி பார்த்துப் பேசியிருப்பது போல குறும்புத்தனமாக தலைவர் கலைஞரிடம் "என்ன தாத்தா எப்படி இருக்கிறீங்க?" என்று கேட்ட மாத்திரத்தில் கலைஞர் அவர்கள் கலகலவென்று வாய் விட்டுச் சிரித்து "நான் நல்லா யிருக்கேன் நீ நல்லாயிருக்கியா?" என்று வினவியதும் அவரது சிரிப்பும் இன்றளவும் எங்களது நெஞ்சங்களில் நிறைந்துள்ளன.

**-த.முத்துமாரியப்பன்,
மாவட்டப் பிரதிநிதி,
கலைஞர் நகர் தெற்குப் பகுதி,
சென்னை தெற்கு மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப் படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப் புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண்: 90033–24473 மின்னஞ்சல் : youthwing@dmk.in


## கருவூலம்

### எம்.ஜி.ஆருக்காக கலைஞரின் கடிதம்!

**1984-ஆம் ஆண்டில் எம்.ஜி.ஆருக்கு திடீரென உடல்நலக் குறைவு ஏற்பட்டு சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவரது உடல்நிலை குறித்து பல்வேறு செய்திகளும் வதந்திகளும் வெளியாகின. ஈரோட்டில் சுற்றுப்பயணத்தை முடித்துவிட்டு சென்னை வந்த கலைஞர், எம்.ஜி.ஆரை நேரில் சென்று விசாரித்ததுடன் 40 ஆண்டுகால நட்பை விவரித்து 'முரசொலி'யில் ஒரு கடிதம் எழுதினார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

357




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131